# மதுரை எரிகிறது

ஆசிரியர்

**மின்பொறி நா.வை.குமரிவேந்தன்**

(மகேந்திரராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை எரிகிறது

நூல்களுக்கு தரும் தொகை செலவல்ல முதலீடு

நூல் ஆசிரியர்:

**மின்பொறி.நா.வை.குமரிவேந்தன்**

(மகேந்திரராசா சி.இ.ஐ.இலண்டன்,தே.பட்டயம்,மின்பொறியியல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலடக்கம்.


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | மதுரை எரிகிறது |
| நூல் ஆசிரியர் | :- | நா.வை.குமரிவேந்தன்(மகேந்திரராசா) |
| நூலுரிமை | :- | ஆசிரியருக்கே. |
| முதலாம் பதிப்பு | :- | மடங்கல் (ஆவணி) திங்கள் தி.ஆ 2043 (கி.பி 2012) |
| தொடர்பு | :- | 84, வெற்றி (ெயயந்தி)நகர், கிளிநொச்சி. அல்லது 16/2 மருத்துவமனை சுற்றுவட்டவீதி, குடியிருப்பு, வவுனியா. |
| கைப்பேசி | :- | 0776203788. |
| வெளியீடு | :- | குமரித் தமிழ்ப் பணி மன்றம் |
| பதிப்பகம் | :- | வாணி கணனிப் பதிப்பகம், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. |
| நகல்கள் | :- | 1000 |
| விலை | :- | உரூபா: 170/- |


# துணைநின்ற நூல்கள்


| | |
|---|---|
| இந்திய வரலாற்றில் , | - குமரிமைந்தன் |
| பெய்யெனப் பெய்யும் மழை, ஒருங்கிருக்கைநெறி | - நா.வை.குமரிவேந்தன். |
| தமிழரின் தர்க்கவியல் , | - பேரா.கா.நெடுஞ்செழியன். |
| தமிழ் இமையம் திருமூலர், | - உமா பதிப்பகம். |
| தென் எல்லைக் காவலன், | - அருள்தாசு அடிகளார். |
| தமிழ்நாடு மாதிகைகள், | - முதல்மொழி, தமிழோசை. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

**த**மிழன் குருதியிலும், உள்ளத்திலும் கலந்துள்ள அயல்நெறி உணர்வு அகலவும் அவனது உள்ளத்திலும், உயிரிலும் தமிழ்நெறி உணர்வு தழைக்கவும், உலகில் தமிழினம் புதுவாழ்வு பெறவும், புகழ்வாழ்வு எய்தவும் உறங்காது தமிழ்ச் சான்றோர் உழைக்கவேண்டும். இது கதிரவனின் உதயகாலம். உறங்கியவர்கள் கண்விழிக்கவேண்டும். கருமேகம் எவ்வளவு காலத்திற்கு கதிரவனை மறைக்கமுடியம். பரந்த சமரசக் கொள்கையான "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றினாலும், "கடமையைச் செய் பயனை எதிர்பார்க்காதே, வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணமென்றும், எதைக்கொண்டு வந்தாய் எதைக்கொண்டு போகப் போகிறாய்" போன்ற ஏமாற்றிப் பிழைக்கும் வேதாந்தங்களாலும், பலவாறு மூளைச் சலவை செய்யப்பட்டும், செல்லொணாக் கொடுமைகளுக்கு உட்பட்டும், வெளிச்சத்தை தெரியாமல் இருளே வெளிச்சமெனக் காட்டியவர்களை நம்பி மதத்திற்காகவே மாந்தன் படைக்கப்பட்டான் என்பது போலவும், காலத்திற்குக் காலம் தோன்றும் புதுப்பணக்காரர்கள் தமது போலிமையையும்,பகட்டையும் வெளிப்படுத்தவும் சமயம், கடவுள் மாயையை வைத்துப் பிழைப்பவர்களுக்கு இலக்கம் இலக்கமாக வாரி இறைக்கின்றனர், வீண்விரையம் செய்கின்றனர். மதம் மனிதனால், மனிதனுக்காக உருவாக்கப்பட்டதே. மதம் மனிதனுக்குப் பயன்படவில்லையானால் தலைமுழுகவேண்டியதே. விவேகானந்த அடிகளார் கூறும்போது மரம் நல்லதென்பது பழத்தை உண்ட பின்பே உணர, அறியப்படுகிறது. இக்கண்கொண்டு தமிழ்க் குமுகாயத்தைப் பார்த்தால்: தமிழர், இன்றைய சமய வாழ்வின் நச்சுத் தன்மையைப் புரிந்துகொள்ளலாம். கோயில் நிறைந்த இந்நாட்டிற் தான் கொடுமைகளும், கொடூரங்களும் தலைவிரித்து ஆடுகின்றன. மனிதவகுப்பின் ஈடேற்றத்திற்கு பாடுபடும் எச்சமயத்தாரும், எந்நாட்டவரும் மனிதநேயம் மிக்கவர்களே. இவர்கள்தான் ஆத்திகர்.

***நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்***
***உண்மை அறிவே மிகும் (கு.373)***

என்பார் உலக வாழ்வியல் தந்த வள்ளுவனார்.

ஊர்புற மக்களுக்கு இயற்கையாகவே பண்பும், பகுத்தறிவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோ உண்டென்பதை மேற்குறித்த திருக்குறள் பறைசாற்றும். இந்த உண்மை அறிவுதான் இயற்கையறிவு. அவ்வாறே குழந்தையிடத்திலும், சிறாரிடத்தும் உறங்கிக்கிடக்கிறது. உறங்கிக் கிடக்கும் இவ்வறிவை எழுப்புவதே உண்மைக்கல்வி. இயற்கை அறிவைக் குழப்பும் புரோகித மூடத்திற்கு அடிமைப்பட்டவர்களின், சமயவாதிகளின் திட்டமிட்ட குழப்பங்களில் சிக்கியழியாமல்க் காக்க உண்மைக்கல்வி தேவைப்படுகிறது.

இன்று "வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டு" மென்று கூச்சலிடுகின்றனர். நாம் (தமிழர்) வீழ்ந்தால் எப்படித் தமிழ் வாழமுடியும்? தமிழறிஞர் எப்படித் தோன்றமுடியும்? "ஊனுடம்பு ஆலயமென்றும், உன்னொளியைக் கண்டதால் இவ்வுடலை ஓம்புகிறேனென்றும், உடம்பார் அழியின் உயிரார் அழிவர்: திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்" என்பதாக சேக்கிழார் பெருமான் யாத்த தமிழ்ச் சைவர்களின் பெரியதொன்மத்(புராணத்) தின் 10ஆம் திருமறையாம் திருமூலரின் திருமந்திரம் செப்பும். இது தான் வாழ்வியலின் உண்மையும், மெய்மையும். எனவே இந்த மெய் மெய்யாகவே பேணப்பட, வாழ்விக்கப்பட வேண்டும். இந்தமெய் விழக்கூடாது. வீழ்ந்தால் தமிழ்ப் பகைவரின், தமிழ்மேல் காழ்ப்புணர்வு கொண்டோரின் வாழ்வு வளம்பெறும். இக்கூற்றுக்களை வைத்தே ஆயரிமாயிரம் ஆண்டுகளாக தமிழரை ஏமாற்றி அடுத்துக் கெடுக்கின்றனர்.

உலக மாகவி, வரகவி(அருள்பெற்றுப் பாடுபவர்) இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு இலக்கியத்திற்கான உலக மீ உயர்(நோபிள்) பரிசை 1913 இல் பெற்றுக்கொடுத்த வங்க மொழிக்கவிதை "கீதாஞ்சலியில்" தாம் எதிர்பார்க்கும் ஒரு உலகு எப்படியாக இருக்கவேண்டும் என்பதை ; "எங்கு மனம் அஞ்சுவதில்லையோ, எங்கு ஆண்மையுடன் தலை நிமிர்த்தப்படுகிறதோ, எங்கு அறிவு விடுதலை பெற்றுள்ளதோ, எங்கு உலகம் குறுகலான குலவேறுபாடுகளென்னுஞ் சுவர்களால் துண்டுகள் பலவாய் பிளக்கப்படாமல் இருக்கிறதோ, எங்கே சொற்கள் உண்மையின் ஆழத்திலிருந்து வெளிப்படுமோ, எங்கே சலியா உழைப்பு நிறைவாய் காரிய பேற்றின்பால் தனது கைகளை நீட்டி நிற்குமோ, எங்கே பகுத்தறிவென்னும் தெள்ளிய ஆறு வழித்தவறிச் செத்தொழிந்த பழக்க வழக்கமெனும் வரண்ட வனாந்தரத்துள் (மூடநம்பிக்கைகள்) பாய்ந்து விடாதோ, எங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ முனைந்து நின்று மனத்திற்கு வழிகாட்டிச் செல்கிறாயோ, அத்தகைய ஒரு விடுதலை மறுமையில்(சுதந்திர சுவர்க்கம்) என்தாயே தந்தையே எனது நாடு விழித்தெழ அருள்வாயாக" எனப் பாடுகின்றார். இவர் இந்தியதேசத்தின் ஒரு மாநிலமான வங்கத்தைச்சேர்ந்தவர். இவரது தாய்மொழியான வங்காளமொழியை உயிராய்க்கொள்பவர். வங்கமொழியில் ஆக்கிய கீதாஞ்சலியே அவரை உலகக் கவிஞர்கள் உச்சிமேற்கொள்ளக் காரணமாயிற்று. இக்கவிதைக்குச் செயல்வடிவமும் கொடுத்தார் இவருக்கு வாழ்வியல் மந்திரமாய் அமைந்தது கபீர் தாசவர்களின் "சிரிப்பை விடு அழுகையை நேசி" என்னும் கவிதையே. இதையே வாழ்வின் இலக்காகவும், கொள்கையாகவும் கொண்டு செயற்பட்டார். இவரது பாட்டனார் துவாரகநாத் தாகூர் வங்கத்தின் மாபெரும் சமுகச் சீர்திருத்தக்காரரான ராசாராம் மோகன்ராய் அவர்களின் உற்றநண்பர். இறைவன் ஒருவனே எனக்காட்டி படிம(விக்கிரக) வழிபாட்டை ஏற்காது உள(ஆன்மா)நேய ஒருமைப்பாட்டை நிலைநாட்ட பிரம்ம சமாசத்தை நிறுவி முன்னின்று செயற்ப்பட்ட மாந்தநேயப் போராளி. இதனால் கவரப்பட்ட துவாரகநாத்தின் மகனும், இரவீந்திரநாத் தாகூரின் தந்தையுமான தேவேந்திரநாத் தாகூர் ஒரு புறம்போக்கான இடத்தை வாங்கி "சாந்தி நிகேத"னை நிறுவினார். இது இரவீந்திரர் காலத்தில் மிக்உயர்ச்சி பெற்றது. அதாவது இவை நடமாடும் கோயில்களாக மாற்றப்பட்டு உயிர்களுக்குத் தொண்டு செய்தலே தெய்வப் பணியெனக்கொண்டு செயற்பட்டார்.

விலங்கு(மிருக)ப் பலம் மனிதத் தன்மையை நசுக்கும்போது தான் உளம் (ஆன்மா) வெல்ல முடியாதது என்று உறுதிகூறும் நிலை வாய்க்கிறது என்பார் தாகூர் அவர்கள். இவர் தமது சாந்தி நிகேதனையும், இவரால் நிறுவப்பட்ட"விசுவ பாரதி"யையும் சமய, சமுக சீர்திருத்த அதாவது குருகுலமாக நடமாடக் கோயில்களாக மாற்றினார். ஆனாலும் வைதீக வேதமரபார் இவருக்கும் பெரும் இடைஞ்சல்களையும், இடையூறுகளையும் ஏற்படுத்தினர். இருந்தபோதிலும் இன, மத, நாட்டு, நிற வேறுபாடுகளைக் களைந்து சமுகவாழ்வில் அறிவுக்கு விடுதலையும், பகுத்தறிவும் தழைத்தோங்கி மக்கள் அடிமைப்பட்டுக் கிடக்கும் மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபடவேண்டும் என்னும் தீராவெறியில் செயற்பட்டார்.

மாகவி தாகூரின் செயற்பாடுகளை அடியொற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வடமாநிலத்தின் நெற்களஞ்சியமெனப் போற்றப்படும் கிளிநொச்சி மாவட்டத்தின் நடுவகமாக விளங்கும் யெயந்தி(வெற்றி) நகரில் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் அன்றைய 7 ஆம் வாய்க்கால் அரசினர் தமிழ்க் கலவன் பள்ளியின்(இன்றைய இந்துக் கல்லூரி) தலைமை ஆசிரியராய் இருந்தபோதே அமரர் திரு. வேலுப்பிள்ளை கதிரவேலு அவர்கள் பள்ளியின் கிழக்குத் தெற்கு எல்லைகளைக்கொண்டதான 50ஏக்கர் காணியிலே குருகுலத்தை நிறுவினார். அதை இயற்கை வனப்பும் அமைதியும் நிறைந்த அழகிய மரங்கள் நிறைந்த சோலையுமாக்கி வாழ்வில் பொருளாதரச் சோர்வுற்றிருந்த குடும்பங்களின் பிள்ளைகள் இருபாலாருக்கும் கல்வியூட்டவும், கல்விக்கும் வாழ்க்கைக்கும் வேறுபாடு இருத்தலாகாது என்னும் நோக்கோடு நெல்வேளாண்மை, தோட்டப் பயிர்ச் செய்கை தச்சுத்தொழில், பதிப்புத்தொழில், வெதுப்பகத்தொழில், நெசவுத்தொழில், தையற்கலை போன்ற இன்னோரன்ன தொழில்களுக்கான பயிற்சிப் பட்டறையாக்கினார். தோட்டப் பயிர்ச் செய்கைக்கான நீரை காற்றாடி நீரிறைக்கும் பொறிகளைக் கட்டமைத்து செயற்படுத்தினார். அத்தோடு நின்றுவிடாது எல்லா மதத்தையும் போற்றும் வகையில் உலகமுழுஆற்றல்(சர்வசக்தி) பீடமமைத்தும், தேடுவாரற்ற முதியோர்க்கும் வாழ்வளிக்க முதியோர் இல்லமும் அமைத்து வழிநடத்திய ஓர் அருளாளரென்றே கூறவேண்டும். தன்னைத், தன்குடும்பத்தை, தன்வருமானத்தை, தன்நலன்களை குருகுல வளர்ச்சிக்காக, அதன் வருங்கால நலனுக்காக பாடுபட்ட மக்கள்தொண்டன் புலிகளை அழிக்கப் பேயோடும் கூட்டுசேருவேனென முழங்கி அன்றைய இலங்கை யனாதிபதி யே.ஆர்.யெயவர்த்தனா அவர்கள் இறக்கிய இந்திய அமைதிப்படையின் சிதறுகுண்டிற்கு(செல்) இராசபாதை வீதி, யாழ்ப்பாணத்திலே இலக்காகி அவரும், துணைவியாரும், அவரின் மூத்தமகளின் குடும்பமும் இயற்கையைத் தழுவிக்கொண்டனர். கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொள்வது போலவே அவரின் மறைவுக்குப்பின் நிலைமைகள் மாறிவிட்டது. பரந்துபட்ட நோக்கோடு நடமாடக் கோயில் நம்பவற்கொன்றீந்து தன்குடும்ப நலன்களையே ஈகம்செய்த குருகுல நிறுவனர் அப்புயீ என்றழைக்கப்பட்ட அமரர் திரு.வே.கதிரவேலு அவர்கள் புறக்கணிக்கப்பட்டும் குருகுலத்தையே தம் நிரந்தர வாழ்விடமாகக் கொண்டிருந்த அவர்குடும்பம் நடுத்தெருவுக்கும் வந்துள்ளது. இது புறக்கணிப்பா? அல்லது அடக்குமுறையா?, தமிழ்ப் பண்பாடா? அல்லது பகுத்தறிவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்பாடா? புரிந்துகொள்ள முடியவில்லை. அடக்குமுறைக்கு எதிராக நீதிகேட்கலாம், எதிர்த்துப் போரிடலாம் அதில் வெற்றியும் பெறலாம். ஆனால் புறக்கணிப்போ என்றும் மீட்சிகாண முடியாதது.

அப்புயீ அவர்கள் எந்தவிதத்திலும் தாகூரின், வள்ளலாரின் "உயிரிரக்கக் கோட்பாட்டில்" (யீவகாருண்யக் கொள்கை) அல்லது உயர்ந்த அருள்(ஞான) நெறியான "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" (சன்மார்க்க), என்ற திருமூலரின் திருமந்திரக் கோட்பாடுகளிலிருந்து விலகாது செயற்பட்ட ஈகியர். வருங்கால இளைஞர் குமுகாயத்தில் இவர் இலங்கைக் கிளிநொச்சி மாவட்டத்தின் "உயிரிரக்கக் கோட்பாட்டின்" தந்தையென, நிறுவனரென நிலைநிறுத்தி நினைந்து, போற்றப்படவேண்டியவர். செய்வார்களா!

மகாத்மா காந்தியவர்கள் தென்னாபிரிக்காவில் இருந்தபோது போணிக்ச் நகரில் நடத்திய இல்லத்தில் ஒருமுறை கே.கே.கோகலே அவர்கள் தங்கநேரிட்டபோது தமக்காகக் காந்தியவர்கள் பல இழிவு வேலைகளைச் செய்தாரென வேடிக்கையாகக் கூறினாராம். அதற்குக் காந்தியவர்கள் தனக்கொருவேலை இழிவாகத் தோன்றுமாயின் அது தன்னைப் போலவே மனிதப் பிறவியிலிருக்கும் தோட்டியின் சார்பிலும் இருக்கவேண்டும் என்றாராம். இக்கூற்றையே தாகூர் அவர்கள் தமது "விசுவ பாராதி"யின் கொள்கையாகக் கொண்டு செயற்பட்டார் என்பர். இன்றும் கூட வைதீகவேத கருத்து முதற்கோட்பாட்டுப் பிராமணியம் மனிதநேயத்தைச் சிதைத்து, மனிதமதிப்புக்களைத் தீய்த்தும் அவனை மாட்டின் முன்னும், குரங்கின் முன்னும் யானையின்(விலங்குகளின்) முன்னும் தெண்டனிடவைத்து அவனது ஆளுமைகளை மளுங்கடித்துக்கொண்டே இருக்கிறது, இருந்தது. இச்சூழலிலேதான் மனிதநேயத்தைப் போற்றுகின்ற பொருள் முதற்கோட்பாட்டினர் தோன்றினர். இவர்களையே " நாத்திகர்" என்றனர் மறுமை, மோட்சம், சடங்கு, புரோகிதம் போன்ற மூடநம்பிக்கைகளைக் காட்டி மக்களைத்தொடர்ந்து ஏமாற்றி, சுரண்டிவாழும் கருத்து முதற்கோட்பாட்டினர். அன்று இந்த நாத்திகர்களையே உலகாயதர்(உலகை ஆய்பவர்) என்றனர். இவ்வுலகானது ஐம்பூதங்களாலான நீர், நிலம், தீ(வெம்மை--வெப்பம்), காற்று விசும்பு ஆகிய ஐந்தணுக்களின் சேர்க்கையாலே உருவாகியதென்பதும், உயிர் உடலைவிட்டுப் பிரிவதே மறுமையென்றும், ஒரு நேர்ச்சி(விபத்து), கத்திவெட்டுதல், முள்குத்துதல் போன்றன துன்பம் அல்லது நரகமென்றும், நாட்டை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை ஆள்பவன், பாதுபாப்பவனே இறைவன்(அரசன்), அத்தோடு வேள்வி(யாகம்---நர,அசுவ,பசுப் பலி போன்றன)கள், திருவிழாக்கள், குடமுழுக்குக்கள், கொடைகள்(தானம்) பயன் கருதிச் செய்யப்படுவதும், வணிகநோக்கினதுமாகும் என்றனர். அத்தோடு உலகவாழ்வின உட்பொருள் தலைவன், தலைவி(காதலன், காதலி)க்கு இடையிலான இயற்கையில் அமைந்த வேறெங்கும் கிடைக்காத பிறப்பின், வாழ்வின் துய்ப்பின்(புணர்ச்சி) இன்பத்தை பெறுவதே ஆகும். அதாவது இவ்வின்பம், மகிழ்வு, களிப்பு இல்லையேல் வாழ்வு இல்லை,வளம்(பொருள்)இல்லை, அறம் இல்லை என்பர். எனவே இந்த உலகாயத மெய்யியலோடு சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், திருக்குறள் போன்றனவற்றைப் பொருத்திப் பார்த்தால் இந்த மனிதநேயக் கோட்பாடு நூற்றுக்கு நூறு விழுக்காடு இவற்றுடன் பொருந்தி வருவதைக் காணலாம். “இந்திய மெய்யியல் சிந்தனையில் மனிதநேயம்” பற்றி ஆய்ந்த அ.சக்கரவர்த்தி நயினார் மனிதநேயத்தை வைதீகவேத பிராமண எதிர்ப்பாகவே காணுகின்றேன் என்கிறார்.

மனிதநேயம் என்பது: மனிதனது பெருமைகளையும், உரிமைகளையும்,மதிப்புக்களையும்(விழுமியங்கள்) மேம்படுத்துகின்ற வகையில் அமைந்தவொரு கோட்பாடு. மனிதனின் ஆளுமைப் பண்புகளை மதிக்கவும், அவனது நலன்களைப் பேணிவரவும், சமுகவாழ்வின் அனைத்து துறைகளிலும் மனிதன் முழுவளர்ச்சிப் பெறவும் துணைபுரிவது. இது சமயம், இனவெறிக் கொடுமை, சமயக் காழ்ப்பு, மாற்றுக் கோட்பாட்டை வெறுத்தல் ஆகிய அனைத்து இயல்புகளையும் களைவதும், சமயங்களின் மூடச் சடங்குகளை பகுத்தறிவுச் சிந்தனையோடும், விடுதலை உணர்வோடும் எதிர்த்து நின்று வெற்றிகாண்பதாகும். மனிதநேயம் பகுத்தறிவுச் சிந்தனையோடு சமயம், மூடநம்பிக்கைகள், வீண்சடங்குகள் போன்றவற்றை எதிர்ப்பதால் நாத்திகம், மனிதநேயமென்பன ஒருபொருள் குறித்து நிற்பதாயுள்ளது. இலக்கியங்களில் நாத்திகம் அல்லது மனிதநேயம் பற்றி ஆராயும்போது தமிழில் சங்க இலக்கியத்தின் பின் காணக்கிடைப்பது ஈ.வெ.ரா.ப்பெரியாரியலைச் சார்ந்த பாவேந்தர் பாரதிதாசன்(சுப்புரத்தினம்) போன்ற கவிஞர்களிடம் மட்டுமேயாகும்.

இந்த உலகம் மாயை, வீடுபேறு என்னும் மறுமையை அல்லது மோட்சத்தைப்பெற (கருத்து முதற் கோட்பாடு) வழிகாட்டுவதாக் கூறி மக்களைச் சிந்திக்க விடாமல் தடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடச்சேற்றில் அமிழ்த்திவிட்டதால் மக்கள் முகம்கொடுத்த, இன்றும் கொடுத்துக் கொண்டிருக்கின்ற இன்னல்கள், இடர்பாடுகள் சொல்லில் வடிக்க முடியாதவை. கி.பி.8 ஆம் நூற்றாண்டு வாக்கில் வைதீக வேத பிராமண மேலாண்மைக்கு எதிராகக் கிளர்த்தெழுந்த சைவ, வைணவ, பற்று(பக்தி) இயக்கங்கள் கூட பிராமணியத்திற்கு அடிபணிந்தன. இதைத் தொடக்கிய அப்பரடிகள்(திருநாவுக்கரசர்), தமிழ்(திரு) ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தியார் போன்றோரால் வாழமுடியவில்லை. கடவுள் ஆட்கொண்டார் எனக்கூறி அவர்களை மேலுலகிற்கு அனுப்பிவிட்டு இவர்கட்கு நாயன்மார் பட்டியலில் இடம். “அறிவு அற்றம் காக்கும் கருவி” என்பதை மறந்து தன் மனைவியைக் கேட்ட சிவனடியார்க்குக் கொடுத்த இயற்பகை நாயனாரும், யாரோ ஒரு சிவனடியானின் நீர்ச்சீலை(கோவணம்) காணாமற் போய்விட்டதற்காக தன்சொத்துக்கள் முழுவதையும் கொட்டி அளந்த அமர்நீதியும், கோவிலில் நுழைந்து சிவனை வணங்கியதற்காக தீக்குளிப்புக்கு ஆளான திருநாளைப்போவாரும், கொட்டும் மழையில் துவைத்த துணி காயவில்லை என்பதற்காக அக்கல்லிலேயே தன் தலையை முட்டி உடைத்த ஓகாலியும் நாயன்மார் வரிசையில் இடம் பெற்றதானது முழுமூடத்தின், பகுத்தறிவின்மையின் சான்றுகள் என்றுதானே கொள்ளவேண்டும். எனவேதான் கருத்து முதற்கோட்பாடு(வைதீகவேத-பிராமணியம்) மனிதனின் சிந்தனை உரிமைகளை வல்லாண்மையுடன் கொடூரமாக நசுக்கித் தடுத்து மூடநம்பிக்கையில் ஆழ்த்தியது. இதை இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரப் புறஞ்சேரிக் காதையில் எடுத்தியம்புவதை காணலாம். “ஏதுக்களாலும் எடுத்த மொழிகளாலும் சோதிக்க வேண்டா” என தருக்கவியலாளரை (அளவையியலாளரை) எச்சரிப்பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும். வருணநெறியோ மனிதனை சாதியம் என்னும் சேற்றில் அமிழ்த்தி தீண்டாமை என்னும் புதைகுழியில் புதைத்தது. இதையெதிர்த்து சமுகச் சுரண்டலையும் அச்சுரண்டலுக்குத் துணையாய் அமைந்த புரோகித மூடச்சடங்குகளையும் தகர்க்கும் வண்ணம் அறிவுக்கான விடுதலையை முன் வைத்தனர் பொருள் முதற்கோட்பாட்டாளராகிய மனிதநேயர்(பிராமணியப் பார்வையில் நாத்திகர்).

சிலர் தர்க்கவியல்(எண்ணியல்- ஏரணவியல்- அளவையியல்) கி.மு.9 ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு.5 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமே அதன் தொடக்ககாலமென்பர். இத்தடயங்கள் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்களில் மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. சிலர் நம்ப மறுக்கின்றனர், சிலர் அப்படியிருந்து விடக் கூடாதென்கின்றனர். தருக்கமும் பேச்சுக்கலையும் பூவிரட்டை, காயிரட்டைபோல இணைந்து நிற்கின்றன. இது கற்கும் எத்துறைக்கும் பொருந்துவதாயிற்று. திருக்குறளின் அவையறிதல், அவை அஞ்சாமை, சொல்வன்மை, பேதைமை போன்ற அதிகாரங்கள் தருக்கப்பேச்சுக் கலைக்கு உரியனவாக வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம். இவையே மாந்தனின் அறிவுக்(பகுத்தறிவு) கண்ணைத் திறக்கும் திறவுகோலாகும். இதையே உலக வாழ்வியல் மெய்யியல் தந்த திருவள்ளுவப் பேராசான்

***எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்***
***கண்ணென்ப வாழும் உயிர்க்கு*** (கு.392) என்றார்..

(எண்--தருக்கம், எழுத்து- இலக்கணம், பேச்சு) அன்று பொரும் பான்மையின மக்களை மிகச் சிறுபான்மையினர் அடக்கியாள கருத்து முதற்கோட்பாடு தேவைப்பட்டது. இதை வர்ணாச்சிரம(சாதிய) அடிப்படையில் ஆளுமினத்தின் மடியிலிருந்துகொண்டு பொருள் முதல்வாதத்தை(மனிதநேயர்கள்--பகுத்தறிவாளர்) ஈவிரக்கமற்ற கொடூரங்களை புரிந்து அடக்கினர். இன்று கபட நரித்தனத்துடன் அடுத்துக் கெடுக்கின்றனர். விவேகானந்த அடிகள் கூறும்போது " மதத்தின் பெயரால் செய்யப்படும் சூழ்ச்சி குமுகாயத்தில் சிலரை வாழ, வளர வைத்து பலரை அறியாமையில், மூடநம்பிக்கையில், ஏழ்மையில் வைத்திருக்கும் மதம் மக்களுக்கு ஏற்றதல்ல. அது மதத்தின் பெயரால் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமை" என்பார்.

மனிதநேயம் என்பது எவ்வுயிரும் தன் உயிர்போல் எண்ணுகின்ற ஒருமை நிலையாகிய ஆன்மீகமாகும். அதாவது அனைவரும் ஒன்று. உலகியல் கணக்குப்படி ஒன்றும் ஒன்றும் இரண்டு ஆனால் ஆன்மிகத்தில் இது ஒன்றுதான். அனைத்தும் ஒன்றென அறிவோரையே பேரறிவாளன் என்கின்றார் வள்ளுவனார்.

***ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்***
***செத்தாருள் வைக்கப் படும் (கு.214)***

"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவுவேண்டும்" என்பார் வள்ளலார் (இராமலிங்க அடிகள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"ன்றென்றிரு"* என்றார் பட்டினத்தார். அப்பரடிகள் இதை *"ஒன்றியிருந்தால ஊனமில்லை"*** என்பார்.

ஒவ்வொரு மனிதருள்ளும் அளவற்ற, வெல்ல முடியாத ஆற்றலும், அறிவும் குடிகொண்டிருப்பதையும்,அதை வெளிக்கொணர்வதையும் உண்மை மனிதநேயம்(ஆன்மீகம்) வலியுறுத்துகிறது. இவ்வாற்றலின் வெளிப்பாடே வள்ளலாரின், இரவீந்திரநாத் தாகூரின், கதிரவேல் அப்புயி போன்றோரின் செயற்பாடுகள். கோழைத்தனத்திற்கு விடைகொடுத்து, அச்சமற்ற தன்மையை உருவாக்கி நன்மைக்கும், தீமைக்கும் நாமே காரணம் என்றும், நம்மைப் (புடம்போடுவது) படைப்பது நாமே என்றும் உணர்ந்து கொண்டால் அதுவே உண்மை ஆன்மீகம். இவ்வுலக வாழ்விலிருந்து நம்மை நாமே துண்டித்துக்கொள்வதோ, ஒதுங்கிக்கொள்வதோ உண்மை மனிதநேய(ஆன்மீக)மாகாது. ஒளிமயமான குமுகாயத்தை உருவாக்கப் பாடுபடுவோரே உண்மை ஆன்மீக வாதிகள்.

இன்று மனிதன் பொருள் வல்மேலாண்மைக்கு உள்ளாக்கப் பெற்று அவனை ஒருபொறியாக மாற்றியுள்ளது. எங்கும் சுரண்டலும், ஊழலும், இலஞ்சமும், ஏழ்மையும் தலைவிரித்தாடுகிறது. அவனும் ஒரு சரக்குப் பொருளாக மாற்றப்பெற்றுள்ளான். அரசியல், பொருளியல் மேலாண்மை மனிதனைப் படைப்பதில்லை. அழிக்கிறது. மனித வாழ்வில் மகிழ்ச்சி இல்லை, பாதுகாப்பு இல்லை, அன்பு இல்லை, ஆதரவு இல்லை, எதிர்காலம் இல்லை, எதிர்காலம் விரைவில் மலரும் என்ற நம்பிக்கை இல்லை, அமைதி இல்லை மனித வாழ்க்கை சீரழிக்கப்படுகிறது. இவற்றிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டுமாயின் எம்மை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இதற்கு எம்மை நாம் தாழ்வுணர்ச்சி, அடிமைத்தனம் மூடநம்பிக்கைகளில் இருந்து விடுவித்துக் கொள்ளவேண்டும். தாய்மொழிப் பற்று, நம் வரலாற்றை அறிகின்ற நாட்டம் நம் உள்ளத்தில் ஊற்றெடுக்கவேண்டும். கிட்லரைப் பற்றி, முசலோனி பற்றி, இடியமீன் பற்றி, காரல் மாக்சு, இலெனின் மாசேதுங் பற்றியும் உலக வரலாறுகள் பலபற்றியும் அறிந்துகொண்டுள்ள நாம் எம் வரலாறுபற்றி தெரிந்துகொள்ள ஏன் முயற்ச்சிக்கவுமில்லை, விரும்பவுமில்லை. கல்வியற்ச் சான்றோர்கள் வெளிப்படுத்த முன்வரவுமில்லை. தம் வரலாற்றைத், தாய்மொழியை புறக்கணித்து ஒதுக்குகின்றவர்களாகவுமே உள்ளனர். ஆனால் அயல்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுவதிலும், அயலின பண்பாட்டு, நாகரிகங்களைக் கைக் கொள்வதிலும் வாஞ்சை கொண்டு செயற்படுகின்றோம். உலகில் எந்த இனமும் தம்மொழி பற்றிப் பேசலாம், நசுக்கப்படும் போது நீதி கேட்டுப்போராடலாம், ஆனால் தமிழன் மட்டும் தன்னுரிமை, மொழி பற்றி எதுவும் பேசக்கூடாதாம். தப்பித்தவறிப் பேசினால் அவன் இனவாதியாம், இனக் காழ்ப்புணர்வு கொண்டவனாம், குறுகிய மனப்பான்மையினனாம் என்கின்றனர் தமிழினத் தற்குறிகள். தமிழ்மேல் காழ்ப்புணர்வும், பகையும் கொண்டவர்கள் இதை வைத்தே சிலம்பம் ஆடுகிறார்கள். எனவே தமிழர் மொழிப்பற்றில் ஓங்கி, மூட நம்பிக்கை, மூடச்சடங்குகளில் இருந்து விடுபட்டு, தன்னுரிமை பெற்றுப், பகுத்தறிவுடன் கூடிய மனிதநேயம் மிக்கவர்களாய் உயர்வடைய வேண்டுமென்பதே இந்நூலின் நோக்கமாகும்.

இன்று வளர்ந்துள்ள மீ உயர் அறிவியல் வளர்ச்சி உலகை ஒட்டுமொத்தமாக சுடுகாடாக்கிவிடும் அழிவியலேயாகும். அறிவும் போதும், அறிவியலும்(அழிப்பிற்கான) போதும். மூளையர் பெருகி உலகை ஒழிக்கு முன் நெஞ்சர்(மாந்தநேயர்), பகுத்தறிவாளர் பெருகவேண்டும். இல்லையேல் மாந்தனுக்கு எதிர்காலமில்லை. சூழல் மாசுபடாத இயற்கைச் சமநிலையை பேணுகின்ற செயல் வீரரான இயற்கையியலாளர் தான் இன்று தேவை.

இந்நூலை மெய்ப்புப் பார்த்த எனது துணைவியார் நல்லினி(புனிதலீலாவதி) அவர்களுக்கும், அழகுறப் பதிப்பித்துத் தந்த வாணி கணனி பதிப்பகத்தா(கந்தசாமிகோவில் வீதி, வவுனியா) ற்கும் என் நன்றிகள். இந்நூலை வாங்கிப் படித்து எம்நிலை அறியுங்கள். இந்நூல்பற்றிய உங்கள் கருத்துக்களை வாஞ்சையுடன் எதிர்பார்க்கின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!

குறிப்பு:- இந்நூலில் முடிந்தவரை வட, ஆங்கில, கிரந்த மொழி, எழுத்துக்கள், சொற்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இலக்கணத்தவறாயினும் கிரந்த எழுத்தினிடத்தில் தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1) | என்னுரை | 03 |
| 2) | இயற்கை போற்று | 14 |
| 3) | மதுரை எரிகிறது | 15 |
| 4) | நிலைபேண் அபிவிருத்தியும் தமிழன் கால்வாயும் | 39 |
| 5) | சேரநாடு கேரள நாடானது | 54 |
| 6) | மனித உரிமை மீறலாக சாதீயம் | 62 |
| 7) | தமிழ் ஒருங்கு குறித்தொகுப்பியம் | 67 |
| 8) | தமிழர் வரலாற்றில் வானியல் | 72 |
| 9) | தமிழ் இலக்கியமும், சமூகமும் | 77 |
| 10) | சைவமும் தமிழும் தமிழனின் இரு கண்கள் | 94 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை போற்று

ஐம்பெரும் பூத இயங்கியல் ஆற்றல்
செம்மை யுறவே சீருறப் போற்றி
எம்மத மூடமும் ஏற்றிடா விலக்கிச்
செம்மை அறிவுடன் சிறப்போம் நாமே
ஐம்பெரும் பூதம் நீர், நிலம், வளி, வான்
வெம்மை நெருப்பின் வீங்காற் றலையே
மறந்தே மயங்கி மாந்தியல்(பு) அழித்ததால்
அறச்சினம் உற்றன ஐந்து பூதமும்
கடலடி நிலத்தைக் கடுமையாய் ஆட்டிடக்
கடல்நீர் சீறிக் கொடுவிசை யோடு
பேரலை யாகப் பாய்ந்தே நிலத்தில்
வாரிச் சென்றதே வாழுயிர் மாய்த்தே
நெய்தல் நிலத்தின் நேய மக்கள்
எய்தினர் கொடுந்துயர் எழுகடல் அலைகளால்
வாரி என்றே வற்றாக் கடலைக்
கூறி யதன்பொருள் கற்றோம் இன்று
நிலமடிக் குள்உள நீரை, சுன்னெய்
நிலக்கரி, பல்வளம், நிறைசீர் மாழை
பெறவே குடையோம் பழியென உறிஞ்சோம்
அறமுற நிலக்கரு அமைதியைக் காக்கும்
இயற்கையின் இயங்கியல் இற்றிடாப் போற்றிடின்
இயற்கையே நமக்கு இணையிலாத் துணையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை எரிகிறது

**சி**லப்பதிகாரக் காவியத் தலைவியான கண்ணகியின் நிலை: தமது கணவன்மாரின் கொடுமைகளையும் புறக்கணிப்புக்களையும் தாங்கி அவர்களுக்குப் பணிபுரிவதே கற்பு என்பதாக வலியுறுத்தும் நூலே சிலப்பதிகாரம் என்பது பல பெண்ணியவாதிகளின் குற்றச்சாட்டாகும். ஆனால் கண்ணகி ஒரு பெண்ணுரிமை இயக்கத்தின் தலைமகளாகவே காணப்படுகின்றாள் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. உலகில் எந்த ஒரு இனத்திற்கும் இல்லாத தலைசிறந்த ஒழுக்கவியல் தமிழருக்கே உரித்தானது.

தமிழரின் ஒழுக்கவியலை அடிப்படையாகக் கொண்டதே செந்தமிழ் செம்மொழியியல் நூல்கள் என்று கூறிடின் அது மிகையில்லை. தொல்காப்பியம், சங்க இலக்கிய நூல்களான பதிணெண் மேல்கணக்கு: பத்துப்பாட்டு (குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி,பட்டினப்பாலை,திருமுருகாற்றுப் படை, நெடுநல்வாடை, மலைபடுகடாம், பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை), எட்டுத்தொகை நூல்களான (கலித்தொகை, ஐங்குறுநூறு, நற்றினை, குறுந்தொகை, அகநாநூறு, புறநாநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் )போன்றனவும், திருக்குறள், ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, குணடலகேசி, வளையாபதி சீவகசிந்தாமணி போன்றனவும் பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களான: நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, திரிகடுகம், ஏலாதி, திருவள்ளுவமாலை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை, பழமொழிநாநூறு, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, சிறுபஞ்சமூலம்,கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, களவழி நாற்பது போன்றனவும் தமிழனின் ஒழுக்கவியலைப் பண்பாட்டை நாகரிகத்தை உலகின் உச்சியெனத் தொட்டுக் காட்டுபவையாகும் மாதவியை விட்டு விலகிவந்த கோவலனிடம் தனக்கு உடலின்பம் மறுக்கப்பட்டதாகக் குறைகூறவில்லை. திருக்குறள் கூறும் "இல்வாழ்க்கை" உரிமைகளையே இடித்துரைக்கின்றாள். அறவோர்க்கு அளித்தலும் ---------------------சில 16:71 --73) இது துணையுடன் வாழும் இல்லக் கிளத்திகளுக்கே உரித்தானதாகும். அத்தோடு நின்றுவிடாமல் "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சில16:81) என்று அவனது சீர்கெட்ட நடத்தையை முகத்திற்கு நேராக சுட்டுகின்றாள். “மாற்றாவுள்ள வாழ்க்கையெ னாதலின் ஏற்றெழுந்தனன் யான்” (சில16:81 --83) அதாவது நீகேட்டவுடனேயே உன்னுடன் வருவதற்குக் காரணம் என் உள்ளத்தில் உம்மைப்போன்ற தடுமாற்றமில்லை என்கிறாள். இன்றுவரை தமிழ்க் குமுகாயத்தின் நிலைப்பாடு அதுதான். இதைக் கெட்டியாகப்பிடித்தே 90 விழுக்காட்டுத் தமிழரும் வாழ்கின்றனர். கணவன் திருந்துவான், தன்மேல், பிள்ளைகள்மேல், அன்பு செலுத்துவான் என்று எதிர்பார்த்திருக்கின்றாள். அதுவே அவளது பொறுமையின் இலக்கணம். தமிழ்க் குமுகாயத்தில் அவள் பெருமையடைகின்றாள். இன்று பெண்களிற் பலர் தற்சார்பு பெற்றிருந்தும் ஒழுக்கமற்ற கணவனை எத்தனை பேர் உதறித்தள்ளி வைத்துள்ளனர் அல்லது எத்தனை கணவன்மார் தமது மனைவியர்க்கு முழு உரிமையும் வழங்கியுள்ளனர். இருந்தாலும் நம்நாட்டைப் பொறுத்தவரை 75 விழுக்காட்டுத் தமிழ்க் குடும்பங்களுமே சமநிலை அடிப்படையிலும், ஏன் சிலகுடும்பங்களில் இல்லக்கிளத்தியே ஆளுமையுள்ளவளாகக் காணப்படுகின்றாள்.

இதுபோன்ற சூழல் வாய்திருக்காத அன்றைய நிலையில் (வைதீகவேத மரபார் பெண்ணை இழிவுப்பிறவியாக்கி வைத்திருந்த நிலை) கண்ணகியின் மேற்குறித்த கூற்றுக்கள் புரட்சிகரமானதே. அத்தோடு கோவலன் பலமுறை மாதவியை விட்டுப் பிரிந்து வந்தபோது மாதவி அவனது நெருங்கிய உறவினர் உதவியினூடாக மீண்டும் அவனையடைந்ததாக சில 18:102-109 வரையான பாடல்வரிகள் துலக்கும். இந்தநெருங்கிய உறவினர் கட்டாயமாக கண்ணகியாகவே இருக்கவேண்டும் (குழந்தை மணிமேகலையைக் காரணம் காட்டியிருக்கவேண்டும்). இதனாலும் கோவலன் புறப்படு என்று கூறியவுடன் அவள் புறப்பட்டதற்கான காரணமாயும் இருக்கலாம் (மீண்டும் அவனை அழைக்க யாரும் வரலாம் என்பதால்) கடைசியில் மாதவி குற்றமற்றவள் என்பதை அவன் தெளிந்துகொள்கின்றான். கணிகையர் பெண் ஒருவள் குடும்ப வாழ்வுக்காக ஏங்குவதை சிலம்பு வெளிப்படுத்துகின்றது. (திரைப்படம் தில்லானா மோகனாம்பாள் போன்று) இவளின் பொது வாழ்வு மக்கள் முன்நடனமாடி அவர்களை மகிழ்விப்பது. ஆனால் கோவலன் இதை விரும்பவில்லை. மாதவியும் தன்னுரிமையை விட்டுக்கொடுக்காதவளாக, பெண்ணுரிமைப் போராளியாகவே காணப்படுகின்றாள். பலவழிகளிலும் கோவலனை கடலாடுகாதையில் விளக்கமாகவும், வேனிற்காதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகவும் அமைதிப்படுத்த முயல்கின்றாள், இதுவே அவர்கள் பிரிவாக கானல் வரி மூலம் வெளிப்படுகிறது. அதாவது கோவலன் வேறொருத்தியை நினைத்துப் பாடும் பாடலுக்குப் பகரமாக(பதில்) மாதவி தான் இன்னொருவனை நினைத்துப் பாடுவது போன்று காட்டிய செயலானது ஆண்மேலாண்மையை எதிர்த்து அவள் விடுத்த அறைகூவலென்றே கொள்ளவேண்டும். கண்ணகியோ வெளியுலகே தெரியாதவளென்று கருதியபோது தன்கணவன் கொலையுண்டானென அறிந்து கொதித்தெழுந்து தன் எதிர்ப்பையே அரசுக்கெதிரான மக்கள் போராட்டமாக மாற்றி விடுகின்றாள். மறவர்க்குரியனவாகத் தொல்காப்பியம் இயம்பும் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்பவற்றில் பெரும்படை தவிர்த்து ஐந்துறைகளை சிலப்பதிகாரக் கண்ணகியின் பெண்ணிய முழக்கமாகவே சூழுரைத்திருக்கின்றார் இளங்கோவடிகள்.

சங்கநூல்கள், திருக்குறள் பெண்ணியம் பற்றி முழங்கினாலும் சிலப்பதிகாரம் பெண்ணுரிமைக் கோட்பாட்டின் பழந்தமிழ் இலக்கியத்தின் முதல் இடியோசையாகும். சங்கம் மருவிய காலத்தில் சிலப்பதிகாரத்தைத் தொடர்ந்து மணிமேகலைக் காப்பியம். இங்கு கணிகை மாதவியின் மகளான மணிமேகலை தாயின் துன்பவாழ்வைக் கண்டு மனமுடைந்து மணவாழ்வை வெறுத்து புத்ததுறவியாகி, மக்கட் பணிசெய்து, ஆட்சியாளரின் பகையையும் வென்று பெருமையடைகின்றாள். அடுத்து வருவது பெண்ணுரிமைக் கோட்பாட்டின் குண்டலகேசியாகும். தன்னைக் கொல்ல முனைந்த கணவனை தற்கொல்லியை முற்கொல்லி என்ற சிந்தனையாற்றலால் அவனைக் கொன்றுவிடுகின்றாள். பின் அவளும் புத்ததுறவியாகிப் பெரும் புகழ் பெறுவதாக அக்காப்பியம் செப்புகின்றது. தன்கணவனின் தாங்கமுடியாத சொல்லொணாத் துன்பங்களைப் பட்டறியும் (அநுபவிக்கும்) ஒருத்தி அவன் தன்னைக் கொல்ல முயலும்போது தான் முந்திக்கொண்டு செயற்படுவது அவளது உரிமையென்பதை இக்காப்பியம் நிறுவியுள்ளது. அன்று நீதி கேட்க உசாவல்(நீதி) மன்றங்கள் இல்லை. பெண்கள் கடை (இழி) நிலையில் வைதீகவேதமரபாரால் ஆக்கப்பட்டதால் அவர்களுக்கு எவ்வுரிமையுமில்லை. அரசரும் அவ்வழி நின்றதால் தன்னுரிமையை நிலைநாட்டப் பெண்கள் தாமே தீர்ப்பெழுதும் நிலைக்குயரவேண்டும் என்பதைக் கருப்பொருளாகக்கொண்ட புத்த சமண மதத்தார் இக்காப்பியங்களை யாத்தனரெனக் கருத இடமிருக்கிறது. வளையாபதிக் காப்பியமும் தன்தாயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சித்து கைவிட்டுச் சென்ற தந்தையுடன் போராடி வென்ற ஒரு மகனின் கதையைக் கூறுவதாகும். (இன்றைய திரைப்படங்களில் பெரும்பாலானவை இதை அடியொற்றியவை). குண்டலகேசிக்குப் போட்டியாக யாக்கப்பட்டது நீலகேசியென்பர்.இங்கு காதலனால் கொலை செய்யப்பட்ட நீலி என்பாள் மறுபிறப்பெடுத்து அவனைக் கொன்று பழிதீர்த்தபின் சமண சமயம் தழுவித் துறவியாகிப் பெரும்புகழ் அடைகின்றாள்.

மேற்போந்த காப்பியங்கள் அன்றைய நிலையில் சாதிய(வர்ணாச்சிரம) பகுப்பில் தமிழன் சூத்திரனாக்கப்பட்டு கடைநிலைச் சாதியாகவும், பெண்கள் எல்லாச் சாதி ஆண்களையும் விட இழிபிறப்பாகவும், எந்த உரிமையும் அற்றவளாகவும், துறவு அவளுக்கு இல்லையென மறுக்கப்பட்டதாலும் பெண்ணுரிமையை, பெண்விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழ் பௌத்த, சமண மதத்தவரால் யாக்கப் பெற்றவையேயாகும். அத்தோடு இவை தமிழர் தம் ஒழுக்கவியலையும் அடிப்படையாகக்கொண்டே எழுதப்பெற்றவை. இவை வைதீகப் பிராமண மரபாரின் பெண்ணுரிமை மறுப்பு, பெண்ணடிமை, பெண்துறவு மறுப்பு, சாதியப் பகுப்பு, ஆண்மேலாண்மைக்கு எதிரான ஒரு மாபெரும் புரட்சியேயாகும். வடிவத்துக்காகவே சில இலக்கியங்கள் (பல இழிவுத் தொன்மங்களை மூலமாகவும், மதஇன மேலாண்மையை அடிப்படையாகவும் கொண்டவை) இடைவிடாத வானொலி, தொலைக்காட்சி விளம்பல்களால் போற்றப்படுகின்றன. இதற்கு மூளைச்சலவை செய்யப்பட்ட மதம்பிடித்த தமிழ்க்காழ்ப்புணர்வு கொண்ட தற்குறிகள் பணத்தை வாரிவழங்கிச் செயற்படுத்துகின்றனர்.சிலஇலக்கியங்களின் சிறப்பை,ஆழத்தை, அடக்கத்தை அறியாமையினாலும், திட்டமிட்டும் புறக்கணிக்கப்படுகின்றன.

சிலப்பதிகாரம் பல சிறந்த இலக்கிய உத்திகளைக் கொண்டது. அதாவது இன்றைய இதழியலை ஒத்தது, ஆனால் புறக்கணிக்கப்படுகிறது. இங்கு அடிகள் யாரோ ஒருவரின் கூற்றை சான்றாகக் காட்டுகின்றார். இது அவர் இக்காப்பியத்திற்கு தான் மட்டும் பொறுப்பல்ல என்பதை விளக்குவதற்கான உத்தியாகும். இக்காப்பியத்தின் உண்மைத்தன்மை சிலவேளைகளில் மாறுபட்ட தாய் இருக்கலாமென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அறிவு, அறிவியல், இலக்கியம் எதுவாயினும் அதற்குச் சான்றுகள் கட்டாயமாகத்தேவை. தமிழரின் பழம் பெரும் தொல்காப்பியம் கூட "என்ப, என்மார் புலவர்" என்றவாறாகப் பலசான்றுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும். சிலவேளை மேற்குறித்த ஐயப்பாடுகள் தேவையற்ற முரண்பாடுகளை ஏற்படுத்திச் சிலம்பின் நம்பகத் தன்மையை கேள்விக்குறியாக்கும் அடிப்படையில் அமைவதாகும். சான்று என்பது வாசகர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான நடைமுறையே. அதாவது தகவலை அல்லது தொழிற்பாட்டை மெய்ப்பீடு செய்வதற்கான ஏரண(அளவையியல்) அடிப்படையில் அமைந்தவொரு நடைமுறையேயாகும். அத்தோடு சாத்தனார், இளங்கோவடிகள் வாழ்ந்த காலத்திலேயே சிலப்பதிகாரக் கதையின் உண்மை நிகழ்வு அரங்கேறியுள்ளது. எனவே சில இடங்களில் சில செய்திகளை இலைமறைகாய் போலவும், அடக்கியும், சிலரின் கூற்றுக்களை சான்றுபடுத்தியும் கூறவேண்டிய தேவை ஏற்படுகின்றது. இன்றைய நடைமுறையும் அதுவே. சிலப்பதிகார காலத்தில் தமிழ்நாட்டரசியல் (சேர, சோழ, பாண்டிய )ஒரு குழப்ப நிலையில் இருந்தது போன்ற தோற்றப்பாடே வெளிப்பட்டு நிற்கிறது. அந்திமாலை சிறப்புச் செய்த காதையில் கதிரவன் மறைந்ததால் கவிந்த (சூழ்ந்த) இருளை நிலவு தோன்றி அகற்றுவதைப்போல

***கறைகெழு குடிகள் ..........................***
***மல்லல் மூதூர் மாலை வந்திறுத்தென***
***இளையராயினும் பகையரசு கடியும்***
***செருமான் தென்னர் குலமுதலாகலின்***
***அந்திவானத்து வெண்பிறை தோன்றி***
***.................................***
***மீனரசாண்ட வெள்ளி விளக்கத்து*** .சில 4:10 ---26.

இப்பாடல் வரிகளூடாக இளங்கோ அடிகள் ஒரு முகாமையான வரலாற்றுச் செய்தியொன்றை உவமையாகக் கூறுகின்றார். ஞாயிற்றுக்குல சோழமன்னனான கரிகாலன் இறந்தபின் அங்கிருந்த குழப்பநிலையைப் பயன்படுத்தி புகாரை வெறொரு அரசன் பிடித்ததனால் நிலவுக் குலத்தாரான பாண்டிய இளவரசன் சோழமன்னனுக்கு உதவியாக புகாரை மீட்டுக் கொடுத்ததான செய்தி இதில் அடங்கியிருப்பதாய் உள்ளது. எனவே மூலக்கதையிலும் ஏதாவதொரு நிகழ்வு புதைக்கப்பட்டிருக்கலாம் என சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சங்கம் மருவிய காலகட்டத்தில் வரிவிதிப்புக்கள், வைதீகப்பிராமணரின் தமிழ்நாடு நோக்கிய பெருவாரியான வரவு, அவர்களின் பசப்பு, தாம் நிலத்தேவர், தம்மொழி தேவமொழி போன்ற பொய்யான கூற்றுக்கள் அவர்களின் நிறம், ஆகியவற்றில் தம்மைக் கீழ்படுத்திக்கொண்ட மன்னர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு எண்ணிறந்த பரிசில்கள் (ஊர்கள், குடியிருப்புக்கள், பொன், தொண்டு செய்ய தமிழ் அடிமைகள் போன்றன) வழங்கல், அரசனுக்கு அணுக்கமாயிருந்த பார்ப்பார் (மருத்துவம், அறுவை மருத்துவம் அடங்கலாக), அந்தணர், ஐயர் (முப்புரி நூல் அணிந்த முதல்நூல், வழிநூல், சார்புநூல் ஐயந்திரிபறக் கற்றறிந்த தொழில்சார் அறிஞர்), ஐந்திரர் (வானியல்,கணிப்பியல் போன்றன கற்ற வாலறிவுமக்கள்), இயல், இசை, நாடக முத்தமிழ் கலைஞர்களின் பதவிகளை அரசனைச்சார்ந்து பறித்துக்கொண்டதும் அல்லாமல், சாதியப் பகுப்பை (வர்ணாச்சிரம) ஏற்படுத்தி அரசனுடன் சேர்ந்து கொண்டு அவர்களை இழிநிலைச் (சூத்திரர்) சாதியினராக்கித் (இன்றுவரை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். தமிழர்கள் இதை பல்லிளித்து, வாய்பிளந்து பார்த்து நிற்கின்றனர்.) தாழ்த்தினர். வாணிகர், வேளாளர் புறக்கணிப்புக்குள்ளாகினர். இதனால் பஞ்சம், பசி, பட்டினி. இதைநீக்கவும், புகழ்நாட்டவும் அயல்நாடுகளுடன் போர்.இதனால் சொத்துகள் சூறையாடல், ஆநிரை,பெண்கள் கவர்தல் போன்ற இன்னோரன்ன கட்டில்லா முடியாட்சி விளைவுகள் வெளிப்பட்:டு நின்றன. விலைமகளிரால் தலைநகர் நிறைகின்றது.இவற்றைச் சிலம்பு 23:118 --121, 14:126 --129, 14:144 --145 பாடலடிகளும் வெளிப்படுத்தும். அரசன் அவரில்லம் செல்வது காட்டப்படவில்லையாயினும் 16:131 --136 பாடலடிகள் அவனது செயலைக் குறிப்பாக உணர்த்துகின்றதென்பர்.

பொற்கொல்லன் கோப்பெருந்தேவியின் அரண்மனைவாயில் வரை செல்லக்கூடிய தகுதியுடையவனாக இருப்பதால் சில ஆய்வாளர்கள் இப்படிப்பட்ட கொடியவர்களை தன் நெருக்கமாக, நண்பனாக வைத்திருப்பதால் அரசனும் அவர்குணமுடையோனாகவே இருந்திருக்கின்றான் (உன்னை அறிவதற்கு உன் நண்பனை அறிந்தாற்போதும் என்ற ஆங்கிலப் பழமொழிக்கு இணங்க) என்றும் உளங்கொள்கின்றனர். இது எவ்வகையிலும் ஏற்புடையதன்று. முடிவெட்டுவோர், வண்ணத்தார், பொற்கொல்லர், அரசபல்லக்குச் சுமப்போர், மருத்துவம் (பார்ப்பார்) செய்வோர், போன்றோர் அரசனின், அரசியின் அரண்மனைசெல்ல அனுமதிக்கப்பட்டே இருந்தனர். அன்று தொழில் நிலைப் பிரிப்பேயன்றி. சாதிய உயர்வுதாழ்வு காணப்படவில்லையென்பதே உண்மைநிலையாகும். இச்செயலால் இவர்களெல்லாம் அரசனுக்கு, அரசிக்கு நண்பர்களென்றோ, சமதகுதிபடைத்தவர்கள் என்றோ முலாமிடமுடியாது. அரசனில் சில குறைபாடுகள் இருந்திருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நெடுஞ்செழியன் கொடூரமானவனென்று கூற எச்சான்றும் சிலம்பில் எடுத்தாளப்படவில்லை. வைதீகப் பிராமணரை தனக்கு அணுக்கமாக வைத்திருந்தாலும் அவன் நடுநிலையோடுதான் செயற்ப்பட்டுள்ளான். இவன் ஆரியப்படையை வென்றவன். திருட்டுப் பொருள் சேர்த்தான் என்ற காரணத்திற்காக வார்த்திகன் என்ற பிராமணரை சிறையிலிட்டான். இதனால் கடும் சினமுற்ற பிராமணர் சமுகம் மக்களையும் சேர்த்துக்கொண்டு ஐயை கோவிலைப் பூட்டிக் கிளர்ச்சி செய்தனர். வேறுவழி காணப்படாமையால் அரசன் அவனை விடுதலைசெய்தான். ஆனால் அவர்கள் கோபம் தணியாமல் வார்த்திகன் காலில் விழுந்து பொறுத்தருள் (மன்னிப்பு) கோரவேண்டுமென்றும், கொடைவழங்க வேண்டுமென்றும் அரசனுக்குக் கோரிக்கை விடுத்தனர். அரசனும் அவன்காலில் விழுந்ததோடல்லாமல்,தங்கால் என்னும் ஊரையும், பரிசில்கள் பலவற்றையும் வழங்கி அவர்களின் மேலாண்மைக்கு அடிபணிந்தான். இவர்களாற்றான் நெடுஞ்செழியனுக்கு ஒரு தளம்பல்நிலை ஏற்பட்டதெனக் கூறலாம்.

மாடலமறையோனின் செல்வாக்கு சிலம்பு முழுவதும் பரந்துபடக் காணப்படுகிறது. கோவலன் பிராமணர்க்குப் பலநன்மைகளைச் செய்தவன்.. இதை மாடலன் கூற்றாக இயம்புகின்றார் இளங்கோவடிகள். கோவலன் மாதவி இணையர்க்கு கிடைத்த குழந்தைக்கு மணிமேகலை என்று பெயரிட்ட நாளிலே அங்கு வந்திருந்த பலருக்கு பலகொடை வழங்கிக்கொண்டிருந்த வேளை மதங்கொண்ட யானையொன்று அகவை முதிர்ந்த ஒருபிராமணரை தாக்க முற்பட்டவேளை கோவலன் தன்னுயிரையும் பொருட்படுத்தாது அந்த யானையை அடக்கி அம்முதியவரைக் காப்பாற்றியதாகவும்; பின்னொரு வேளை ஒரு பிராமணக்குடும்பம் கீரிப்பிள்ளையொன்றை வளர்த்து வந்ததாகவும், தனது கணவன் வெளிச்சென்றபோது அவள் தனது குழந்தையைத் தொட்டிலில் தூங்க வைத்து கீரிப்பிள்ளையைக் காவலுக்கு வைத்துவிட்டு நீரெடுக்கச் சென்றதாகவும் ,அவள் நீரெடுத்துத் திரும்பி வந்தபோது கீரிப்பிள்ளை வீட்டுவாசலில் குருதிதோய்ந்த வாயுடன் நிற்பதைக் கண்டு தன் பிள்ளையைக் கீரி கொன்று விட்டதென்று நினைத்து அதன்மேல் குடத்தைப் போட்டதால் கீரி அந்த இடத்திலேயே இறந்து விட்டதாகவும் . அவள் உட்சென்று பார்த்தபோது குழந்தை தொட்டிலில் விளையாடிக்கொண்டு இருப்பதையும் தொட்டிலின் கீழ் பாம்பொன்று குருதியில்த் தோய்ந்து இறந்து கிடப்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாள். இதனால் அவள் மனம் நொந்து கவலையோடு இருந்தவேளை அவள் கணவனும் வந்து நடந்தவற்றைக் கண்டு மனம் வருந்தி வெறுப்புற்று வீட்டைவிட்டு வெளியேறிவிட்டானாம். இதையறிந்து கோவலன் அவளுக்கும் பிள்ளைக்கும் செலவிற்குப் பொருள் கொடுத்துதவியதாகவும்,இவளது கணவனை தேடிக்கண்டு மீண்டும் அவளுடன் சேர்த்தும் வைத்து அவர்களுக்கு பொருளுதவி செய்து தேற்றுகின்றான்.

இதேபோன்று தன்வாழ்வுக்கு உறுதுணையாயிருந்த மிகவும் அகவை முதிர்ந்த தாயின் மகன் பொய்ச் சான்று பகர்ந்ததால் கொலைத்தண்டனைக்கு ஆளாகின்றான். இதனால் அந்தத் தாயும், அவள் சுற்றமும் மிகத்துன்பமடைகின்றனர். இதைக்கண்டு கோவலன் மனதுருகி அவளுக்கும் அவள் சுற்றத்தார்க்கும் பொருளுதவி செய்து ஆற்றுப்படுத்துகின்றான். அத்தோடு கோவலன் கண்ணகி திருமணமும் வைதீகத்திருமணமாகவே நடைபெற்றதாகும். எனவே பிராமணர் குமுகாயத்திற்குப் பலவிதத்திலும் உதவிய கோவலனுக்கு நேர்ந்ததையிட்டு அவர்கள் மனக்கொதிப்புற்றிருக்கவேண்டும். இதனால் அரசனுக்கெதிரான கிளர்ச்சியில் இவர்கள் மக்களைத் தூண்டி விட்டிருக்கலாம். அத்தோடு அன்றைய நிலையில் தமிழகத்தின் ஏற்றுமதி வாணிகம் பலவகையில் சிறப்புற்றிருந்தது. தோகை, சந்தனம், முத்து, பொன் போன்றன பெருமளவில் ஏற்றுமதியாகினவெனலாம். எனவே இதில் பொற்கொல்லரின் பங்கு பெருமளவில் இருந்திருக்கலாம். “நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர” சில 16:106 பாடலடிகளின்படி பொற்கொல்லர் முதலாளிகள் பலரிருந்திருக்கவேண்டும். இவர்களின் கீழ் பல்லாயிரம் நுண்வினை கொல்லர் இருந்திருப்பார்கள். இவர்கள் தம்முதலாளிகளுடன் முரண்பட்டு இருந்திருக்கவும்கூடும். எனவே கோவலனின் இறப்பைத் தமக்கு ஏற்றதாக்கி அரசுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து மதுரை எரிப்புக்குக் காரணராய் இருந்திக்கவேண்டும் என்றும், இதனால் வெகுண்ட கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் மதுரைக்கு வந்து பொற்கொல்லர் ஆயிரவரை நங்கைக்குப் பலி கொடுத்ததாக சிலம்பு கூறுவதாகவும் சில ஆய்வாளர்கள் செப்புகின்றனர்.

இந்திய முதன்மை அமைச்சராயிருந்த இந்திரா காந்தி அம்மையார் அவரது சீக்கிய மெய்ப் பாதுகாவலர்களாலேயே சுட்டுக்கொல்லப்பட்டபோது சீக்கியர்களுக்கு எதிரான ஒரு வன்செயலுருவாகி கிட்டத்தட்ட மூவாயிரம் சீக்கியர்களின் உயிர்களைக் காவுகொண்டது. அதேபோன்று 1983 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தியில் பாதுகாப்புப் படையினரின் வண்டி நிலக்கண்ணி வெடியில் சிக்கி பதின்மூன்று படையினர் இறந்ததால் இலங்கைமுழுவதும் தமிழருக்கெதிரான வன்செயலேற்பட்டு சிறையிலிருந்த தமிழ்க் கைதிகளுட்பட பலநூறு தமிழரின் (எனது உடன்பிறப்பு நா.வை.அரியராசா உட்பட) உயிர்களைக் காவுகொண்டது. எனவே இதுபோன்ற நேரங்களில் இப்படியான விளைவுகள் ஏற்படுவதும், அரசு வலுவிழந்த அல்லது பாராமுகமான நிலையில் தவிர்க்க முடியாததொன்றாகி விடுகிறது. எனவே பொற்கொல்லற்கெதிரான கிளர்ச்சி ஏற்பட்டு அதில் பலர் இறந்திருக்கலாம். கோவலன் இறக்கவும் அரசனிறக்கவும் அரசியிறக்கவும் காரணரான பொற்கொல்லற்கெதிரான ஒரு கிளர்ச்சியே ஏற்பட்டு இதைச் சாக்காக வைத்து அவர்கள் உயிர்களைக் காவுகொள்ளவும் ,மதுரையை எரிக்கவும் பழிவாங்கும் உள்ளுணர்வோடு காத்திருந்தவர்களே மக்களைத் தூண்டி இதைச்செயற்படுத்தி இருக்கவேண்டும்.

கோவலன் கொலையுண்ட பின் கண்ணகி வீதியில் ஒற்றைச் சிலம்புடன் வருகிறாள். அவளைத் தொடர்ந்து பல மக்களும் பின்தொடர்கின்றனர். " கம்பலை மாக்கள் கணவனைத் தாண் காட்ட" சில.19:29 என்ற அடிகளால் இதைச் சுட்டுகின்றார் ஆசிரியர் (கம்பலை --ஒலி ஆரவாரம்). தன் கொலையுண்ட கணவனைக் கண்டபின் அன்று மாலையிலிருந்து அடுத்த நாள் அரசவை கூடுமட்டும் பெரும்கூட்டம் சேர்திருக்க வேண்டும், இக் கூட்டமே மேற்குறித்த செயற்பாட்டில் இறங்கியதெனலாம். அத்தோடு மணிமேகலையின் கூற்றுப்படி பொதுவாக அரச குலத்தினர் மீது மணிமேகலையாசிரியர் சாத்தனார்க்கு வெறுப்பு இருந்ததாகவும் இதனால் அவருக்கு மதுரைப்புரட்சியில் மறைமுகமான பங்கு இருந்திருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர்.

அன்று பாண்டியநாடும் சேரநாட்டுக்குட்பட்டதாய் இருந்திருக்கிறது. "தென்னரிட்ட திறையொடு கொணர்ந்து" சில 26:169 பாடலடிகள் இதை உணர்த்தும். மதுரைக் கிளர்ச்சியறிந்தே சேரன் செங்குட்டுவன் பெரியாற்றங்கரைக்கு வந்திருக்கவேண்டும். இங்குதான் சாத்தனாரையும், வேட்டுவர்களையும் சந்தித்ததாகவும் அவர்களூடாகவே கண்ணகி பற்றியும், மதுரை எரியூட்டல் பற்றி அறிவதாகவும் கூறப்படுகிறது. மதுரை எரிந்து 14 நாட்களின் பின்னரே கண்ணகி இறந்திருக்கின்றாள். எனவே பல இடங்களிலும் ஒற்றர்களைக் கொண்டிருந்த சேரன் மதுரைக் கலம்பகம் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாதிருந்திருக்க முடியாது. ஆனால் இதற்குக் காரணம் கண்ணகிதான் என்பதை அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதாவது கிளர்ச்சிக் காலத்தில் அதன் உடனடிக் காரணம் தெரியாமலும், கண்ணகியின் பங்கு முகாமையற்றதாகவும் இருந்திருக்கலாம். ஆதலால் கிளர்ச்சியின் கரு அவள் தானென்பதை "முலை முகத்தெழுந்த தீ " தான் காரணமென்பதை சாத்தனார் செங்குட்டுவனுக்கு வெளிப்படுத்துகின்றார். செங்குட்டுவன் வருவதறிந்து இவன் வருகையால் அழிந்துபோயுள்ள மதுரையும், மக்களும் (கிளர்ச்சிக்குத் தூண்டுதலாய் இருந்தவர்களும்) தண்டிக்கப்படலாம், இன்னும் அங்கு அரத்தஆறு ஓடலாம் என்னும் நோக்கில் அதைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு அல்லது செங்குட்டுவனின் கோபத்தைத் தணிக்க இவரை மதுரை அரச(சத்திரிய) எதிர்ப்பாளர்கள் தூதராகவும் அனுப்பியிருக்கலாம்.

அடிகளும் பல இடங்களில் உண்மைகளை நேரடியாகச் சுட்டுபவராயில்லாமல் மறைமுகமாகவே வெளிப்படுத்துகின்றார். எனெனில் சிலவேளைகளில் இதனால் முரண்பாடுகள், இடர்பாடுகள், குழப்பங்கள் ஏற்படலாம் என்ற காரணத்தினாலேயேயாகும். அதனாலேயே வினைவிளைவு பற்றிய புனைகதையை (பழம்பிறப்புக் கூறி இது மக்கள் எழுச்சியல்ல ஒரு பத்தினிப் பெண் நடத்திய இறும்பூதே (அற்புதம்) என்று கூறிமுடிக்கின்றார் சாத்தனார். எனவே சேரன்செங்குட்டுவனும் இதை மதுரை வன்செயலென்று கொள்ளாது ஒரு பத்தினிப் பெண்ணின் தெய்வீக ஆற்றலென்று நம்பியிருக்கவேண்டும் அல்லது இக்கதைமூலம் தன்னாட்டிலும் அரசு(சத்திரிய) க்கு எதிராக (பிராமணர்களால் பரசுராமன் தலைமுறையினர் சேரநாட்டின் உடையார்குடி, கந்தளூர்ச் சாலையில் செறிந்திருந்தனர்) ஒரு கிளர்ச்சி தொடங்காமலிருக்க இக்கதை உதவுமென்று கருதி மக்கள்மனதைத் திசைதிருப்ப தமிழனை இகழ்ந்த வடநாட்டு மன்னர் கனக வியாசரைத் தண்டிக்கவும், கண்ணகிக்குச் சிலைவடிக்கக் கல்லெடுக்கவும் (அதாவது இன்றும் பலநாடுகளில் அரசுக்கெதிராக போராட்டங்கள், கிளர்ச்சிகள் ஏற்படும்போது மக்கள் மனதைத் திசைதிருப்ப களியாட்டவிழாக்களை காற்பந்து, மட்டைப்பந்து போன்ற விளையாட்டுக்களை ஏற்படுத்தல் போன்று) போர்முரசு கொட்டிப் புறப்படுகின்றான். ஆனாலும் நாகஇனத்தவனும் சந்திரமரபினனுமாகிய வடநாட்டு மன்னன் சதகர்னி (சேரர்மரபு) தான் படிமமமைக்க கல்லெடுத்து அனுப்புவதாகக் கூறியும் அதற்கு இசையாமல், கங்கையைக் கடக்க ஓடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்துதவக்கேட்டு செல்கின்றான். இவன் புறப்பட ஆயத்தமானபோது செல்லும் வழியிலுள்ள பிராமணர்க்கு எத்தீங்கும் நேராதபடி அவர்களைப் பாதுகாக்கக் கோருவதானது (கால்கோட்காதை 26:92--104) மதுரைக் கிளர்ச்சியில் இவர்களின் உள்ளீட்டை சிலவேளை செங்குட்டுவன் அறிந்திருக்கலாம் என்பதாலோ தெரியவில்லை. கண்ணாடிவீட்டிலிருந்து கல்லெறிபவர்கள் போன்று கனக வியாசர்(பலமற்றநிலை) செயற்ப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் செங்குட்டுவனுக்கு அவர்களைக் கீழ்ப்படுத்த 18நாழிகைகள் போதுமானதாய் இருந்தது. வெகு குறுகிய நேர எல்லையில் இவ்வெற்றி எவ்வளவிற்கு உண்மையானது என சில ஆய்வாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (இலங்கை அரசபடையின் புலிகளுக்கு எதிரான (2008--2009) இறுதிப் போரின்போது வன்னியின் பெரும்பகுதிகள் எந்த எதிர்ப்புமின்றியே படையினராற்க் கைப்பற்றப்பட்டன).

சூரியகுலத்து கிருதவீரியனுக்கும் சுகந்தைக்கும் பிறந்தவன் சத்திரியனான (அரசர்) கார்த்தவீரியன். இவன் சமதக்கினி என்னும் துற (முனி)வரிடமிருந்த காமதேனு என்னும் ஆ (பசு) வைக் கவர்ந்தவன். இதையறிந்த துறவரின் மகனான மழுவாள் நெடியோனாகிய பரசுராமன் இவனைக் கொன்றான். இதனால் சினமுற்ற கார்த்தவீரியனின் மக்கள் சமதக்கனியைக் கொன்று விட்டனர். இதனால் கடுஞ் சினமுற்ற பரசுராமன் சத்திரிய (சேர, சோழ, பாண்டிய) குலத்தையே பூண்டோடழிக்க சூளுரைத்து(சபதம்) 21 அரச தலைமுறையினரை கருவறுக்கின்றான். இதில் தப்பியவர்கள் கார்த்தவீரியனின் மக்களான சயத்துவசன், வீரசேனன், விருடன், மதுசூரன் ஆகியோரென மச்ச தொன்மம் (புராணம்) கூறுகின்றதாம் (ஆ.சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணியின் 1988ஆம் ஆண்டு மறு பதிப்பின் 414,1031,1032பக்கங்கள்). இத்தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டு மணிமேகலைக் காப்பியத்தில் சீத்தலைச் சாத்தனார் ஒரு செய்தியை வெளிப்படுத்துகின்றார். அதாவது பரசுராமன் புகார் நோக்கி வந்துகொண்டிருக்கின்றான் சத்திரிய மன்னனாகிய நீ (காந்தமன்) உனது கணிகையின் மகனாகிய சுகந்தனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு ஒளிந்து கொள் என்றவாறாக புகாரின் கன்னித் தெய்வம் கூறுவதாக மணிமேகலையின் சிறைசெய் காதை 22:25 -- 35 பாடலடிகள் செப்பும். இதன்படி பரசுராமனும் அவன் தலைமுறையினருமான பிராமணரும் அரசகுலத்தாராகிய குறிப்பாக சோழர்களின் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமும் சினமும் கொண்டு அவர்களைப் பழிதீர்க்க முயன்று கொண்டிருந்தார்கள் "என்பது வெள்ளிடை மலையாகும். கற்றறிந்த வைதீகவேத மரபார்கூட அரச (சத்திரிய) தலைமுறையினர் மீதும், தமிழ்மொழி மீதும், தமிழ் மக்கள் மீதும் வெறுப்பும், மனக்கசப்பும் (மாறாக தமிழற்கு இருக்கவேண்டியது) கொண்டிருந்தார்களென்பது 2000 ஆண்டுகளுக்கு மேலாகவே உள்ள ஒரு நிலையாகும். இதற்குச் செப்புப் பட்டையங்கள், கல்வெட்டுக்கள், தொன்மங்கள் சான்று பகரும். பல்லவர் காலத்தில் மயூரவர்மன் என்னும் கடம்பவடுகப் பிராமண அரசன் காஞ்சிபுரத்தில் தனது உயர்கல்வியைக் கற்கவந்ததாகவும் அவனைக் கல்லூரிக் காவலன் உள்நுழைய விடாது தடுத்ததாகவும் இதனால் மனம்நொந்து "பிராமணனொருவன் தன்குருவின் பணிவிடைகளைச் செய்திருந்தும், வேதங்களை முறையாகக் கற்றிருந்தும் சமயத்தில் குருத்துவம் பெற அரசனை (சத்திரியனை) சார்ந்திருக்கவேண்டி உள்ளதே.இதைவிட மனவலி வேறென்ன இருக்கிறது" என்று தன்னைத் தானே நொந்துகொண்டதாக தாலகுண்ட கல்வெட்டு விளம்புவதாக தொல்லியல் அறிஞர் நடன. காசிநாதன் (தமிழ்நாடு) தெரிவிக்கின்றார்

அடுத்து மதுரை எரியூட்டல் கண்ணகி தனது இடது மார்பை திருகி எறிந்ததால் அல்லது கிளர்ச்சியாளரினால் அறுத்தெறியப்பட்டதால் ஏற்பட்டதா? என்ற ஒருகேள்வி எழுகின்றது. இது கட்டாயமாக கிளர்ச்சியாளர்களால் செயற்படுத்தப்பட்டிருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் அவளைக் கொன்றே இருக்கலாம் (சீக்கியர்களின் புகழ்மிக்க பொற்கோவில் தாக்கப்பட்டதிற்காக இந்தியநாட்டின் தலைவி இந்திராகாந்தி அம்மையார் சுட்டுக்கொல்லப்பட்டார். அதே போல் அரசன், அரசி இறந்ததிற்காக கண்ணகியைக் கொன்றிருப்பர்). ஆனால் கிளர்ச்சியை தூண்டவும் மக்கள் பெருமாதரவைப் பெறவும் அரச வெறுப்பாளர் மறைமுகமாகச் செயற்பட்டுமிருக்கலாம்.

இருப்பினும் அந்நாட்களில் கணவனை இழந்த பெண்கள் நோற்கும் கைமைநோன்பை விட(அவ்வளவு கொடூரமானது விரிக்கின் நீளும்) கணவனை எரிக்கும் தீயிலே விழுந்து உடன்கட்டை ஏறி இறப்பது மகிழ்வூட்டும் செயலாகுமெனக் கூறி இறந்த தன் கணவனுக்கு மூட்டிய தீயிலே விழுந்து உடன்கட்டை ஏறுகின்றாள் பூதப்பாண்டியனின் தேவி பெருங்கோப்பெண்டு (அரசிக்கே இன்னிலையாயின், பெண் எச்சாதியினளாயினும் இழிவுப்பிறவி). எனவே கணவனை இழந்த கண்ணகி உலகில் வாழப்பிடிக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதுமார்பை அறுத்தெறிந்திருக்கலாம். "திருமாவுண்ணி ஒரு முலை குறைத்தவள்" என்பது திருகியெறிந்தாள், அறுத்தெறிந்தாள் என்ற சொல்லாட்சியின் பண்பட்ட ஒரு கூற்றேயாகும். சிலர் ஆய்வு என்று கூறிக்கொண்டு "முட்டையில் மயிர்பிடுங்கி அதில் பேன் பார்ப்பது" போன்று செயற்படுகின்றனர். இவை குட்டையைக் குழப்பும் ஒரு செயற்பாடென்றே கொள்ளவேண்டியுள்ளது. ஆய்வைத் தொடங்கும் பொழுது பொதுப்படையாய் தொடங்கி உட்செல்லும்போது தமது பக்கச்சார்பான, நடுநிலையற்ற, கொச்சைப்படுத்தும் அல்லது இழிவுபடுத்தும் செயற்பாட்டில் இறங்கி விடுகின்றனர். இவை ஒரு இலக்கியத்தின், வரலாற்றின் உண்மைத் தன்மைகளை மழுங்கச் செய்யும் செயலாகும். அண்மையில் ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்ட வேளை அங்கு கருத்துரை வழங்கிய இலங்கைப் பல்கலைக்கழகமொன்றின் தமிழ்த்துறைத் தலைமைப் பேராசிரியரொருவர் தமிழ் முச்சங்கங்களை மறுத்தும், கடல் கோள்கள் நடைபெறவில்லை என்றும், இப் பொய்களை நம்புகின்றீர்களா? என்றும் கேள்வி எழுப்பி தமிழன் வரலாற்றைக் கொச்சைப்படுத்தி இழிவுபடுத்தினார்.

மனித வரலாற்றை புவி இயங்கியல், கடலியல் போன்ற துறைகளில் ஆய்வு செய்த சில நேர்மையான ஆய்வாளர்கள் கடல்கோள்கள் பற்றிய செய்திகளுக்கும், அது நிகழ்ந்ததாகப் புவி இயங்கியலாளர் கணித்துள்ள காலத்திற்கும் இடையில் ஒரு இடைவெளி இருப்பதை ஏற்கின்றனர். இமையமலைத் தோற்றம் 75 கோடி ஆண்டுகளிலிருந்து 20 கோடியாண்டாய்ப் பின்தள்ளப்பட்டும், மனிதத்தோற்றம் ஓரிலக்கம் ஆண்டுகளிலிருந்து 17 இலக்கம் (இலட்சம்) ஆண்டென முன்தள்ளப்பட்டுமுள்ளது. எனவே இன்னும் உரிய துல்லியத்தை அடையமுடியாத காலக் கணிப்பே நடைமுறையில் காணக்கிடக்கின்றது. இரண்டிலக்கம் ஆண்டுகளுக்கு மேலாக நிலநீர் அமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை என்பதற்கு மாறாக கடந்த கி.மு.8000 ஆண்டளவிற்றான் பனியுருகிப் பின்வாங்கிய நிகழ்வு முடிவுக்கு வந்ததென்று இன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கரிமம் (காபன்) 14இன் காலக்கணிப்புக்களின் துல்லியத் தன்மை 30000 ஆண்டுகளுக்கு மேற்பட்டவற்றில் வலுவிழந்துள்ளதென்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அறிவியல் சார்ந்த பருப்பொருட்களாலான வரலாற்றுக் கருப்பொருட்களின் நம்பகத்தன்மை இலக்கியம், தொன்மம் (புராணம்) பண்பாட்டுக் கருப்பொருட்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பகத் தன்மையிலிருந்து எந்த வகையிலும் மேம்படவில்லை என்பதையே இவை மெய்ப்பீடு செய்கின்றன. மனிதப்பதிவுகளே உண்மையின் ஊற்றுக்களென நம்பலாம். எந்தத் தொடர்புமேயற்ற பண்டைக்காலத்தில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்த மக்கள் ஒரே மாதிரியான பொய்யைச் சொல்லியிருப்பார்களென்றோ அல்லது கற்பனை செய்திருப்பார்களென்றோ கொள்வது ஏற்புடையதாகாது. பாபிலோனிய மக்களிடையே நிலவிய வெள்ளச் செய்தியை நோவாகதையாக மாற்றி கிறீத்தவ வேதத்தில் எழுதியது, வால்மீகி இராமாயணம் இரண்டாம் கழகமிருந்த கபாடபுரத்தைக் குறிப்பிடுவது, மச்ச தொன்மம்(புராணம்) கடல் கோள்களுக்குத் தப்பிய "வைவசுவதமனு" அரசன் பற்றிக் குறிப்பிடுவது, பாபிலோனியக் காப்பியமான கில்காமேசு கடல் கோள்களுக்குத் தப்பிய உட்நாப்பிட்டிம் கதை, சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறும் 700காவதம் (49 நாடுகள்), நக்கீரர் இறையனார் அகப் பொருளுரையூடாகத் தரும் மூன்று கழகங்கள் இருந்த இடங்கள் (தென்மதுரை, கபாடபுரம், இன்றைய மதுரை) அவற்றின் கால இடைவெளிகள் (4440,3700,1850), 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்னும் நூலில் கனகசபைப்பிள்ளை அவர்கள் கூறும் கடலில் அமிழ்ந்துபோன இலங்கையின் பெருநிலப்பரப்பு, புறநானூறு, கலித்தொகை போன்ற அனைத்தும் ஒரே நிகழ்வின் பல்வேறு பதிவுகளே. இவையெல்லாம் பொய்க் கூற்றுக்களா?

10000 ஆண்டுகளுக்கு முன் முடிவுற்ற பனிப் பின்வாங்கலின் போது 500--600 அடிகள் கடல் நீர்மட்டம் உயர்ந்ததாகக் கொண்டால் எத்தனை ஆயிரம் அயிரமாத்திரி (கீ.மி)ப் பரப்பளவு நிலம் நீரில் மூழ்கியிருக்கும். இன்று கண்டப் பெயர்ச்சி (நில ஓட்டுப் பெயர்ச்சி) பற்றிப் பல அறிவியற் கோட்பாடுகள் கூறப்பட்டாலும் அதற்கு எதிரான கருத்துக்களும் மேலோங்கி நிற்கின்றன. இது பெயர்ச்சியல்ல நிலப்பரப்புக்கள் நீரில் அமிழ்வதும் மேலெழுவதும் தான் என்று சான்றுகாட்டி நிறுவுகின்றனர். உண்மையில் இவ்விரண்டு இயங்கியல்களுமே நடைபெறலாம்.(விரிக்கின் நீளும்). கற்காலம்: பழையகற்காலம், புதியகற்காலம், பெருங்கற்காலம், நுண்கற்காலம் போன்றன கால அளவை விட மக்கள் குழுவினரின் வளர்ச்சிக் கட்டங்களையே குறிப்பனவாகும். இது நாட்டுக்கு நாடு, கண்டத்திற்குக் கண்டம் வேறுபடும். இன்றும் கூட கல்நாகரிகத்தில் வாழும் மக்கள் உலகின் பல பாகங்களிலும் காணப்படுகின்றனர். கற்காலமென்பதை விட கல்நாகரிகக் கட்டம் என்பதே மிகப் பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பல வரலாற்றாசிரியர்கள் கல்நாகரிகக் கட்டத்தையும் புவியியங்கியற் காலத்தையும் போட்டுக் குழப்புகின்றனர். உலகின் தொல் வரலாறுகளே இன்றைய தொன்மங்களாக காணப்படுகின்றன. உலகின் பல தெய்வங்கள் தொல்வரலாற்று மனிதர்களே. அவர்கள் தெய்வங்களாகவும், அவர்களின் செயல்கள் இறும்பூதுகளாகவும் (அற்புதங்கள்) தொன்மங்களிற் காட்டப்பட்டுள்ளன. எனவே அது பொய் இது பொய் எனக்கூறாது மேற்குறித்தவற்றின் மூல வடிவங்களையும் இறும்பூதுகளின் உண்மையான உள்ளடக்கத்தையும் இழைபிரித்து வெளிக்கொணர முயன்றால் முடியாததென்றொன்றில்லை. இதைத் தான் புலமைசார் சான்றோர் செய்ய முன்வரவேண்டும்.

கோவலன் மூதலிப்பு (உசாவல்) இன்றிக் கொல்லப்படுகின்றான். இதற்குச் சிலர் இவன் சமண சமயத்தவனாக இருக்கவேண்டுமென ஐயுறவு கொள்கின்றனர். ஏனெனில் இவனும் கண்ணகியும் முதலில் சமணத் துறவியான கவுந்தியடிகளிடமே அடைக்கலம் பெறுகின்றனர் (இவர்கள் ஊருக்குப் புதியவர்கள், இவர்களின் சாதி,சமயம் தெரியாது, பிராமண மேலாண்மை எனவே யாரிடமும் அடைக்கலம் பெறமுடியாது - இன்றைய தமிழர் நடுவிலும் இதுதான் நிலை). கவுந்தியடிகளும் ஆயர் முதுமகள் (மூன்றாம் சாதிக்காரர்--ஆநிரை, உழவு போன்ற இழிவுத் தொழில் செய்வோர்--வைதீகவேதமரபு) மாதிரியிடம் இவர்கள் தங்குவதற்கான ஏற்பாட்டை செய்ய அடைக்கலம் தருகின்றார். மாதிரியும் கோவலனை மதித்து "சாவக நோன்பிகள் அடிகளாதலின்" என சில 16:28 அடிகளில் கூறுகின்றாள்.

தமிழ்நாட்டரசர்கள் சமண சமயத்தவரை வடநாட்டரசரின் ஒற்றர்களாகவே நோக்கினர். அத்தோடு கோவலனின் முற்பிறப்புச் செய்தியில் வரும் நீலியின் கணவன் சங்கமனும் ஒற்றனென்றே கொல்லப்பட்டுள்ளான். எனவே தான் இப் பிறப்புக் கோவலனும் ஒற்றனாக இருக்கலாம் என்ற ஐயுறவில் கொல்லப்பட்டு இருக்க வேண்டுமென்கின்றனர் சிலர். ஆனால் இவனது திருமணத்திலிருந்து கடைசிவரை கோவலன் பிராமணர் சார்பாளனாகவே காணப்படுகின்றான். இதை மாடலமறையோனின் கூற்றுக்கள் மெய்ப்பிப்பதாய் உள்ளது. அத்தோடு வைதீக வேதமரபாரின் சத்திரிய எதிர்ப்பானது பரசுராமன் காலந்தொட்டே முளைவிட்டிருந்தது. அரச (சத்திரிய) தலைமுறையினருக்கெதிரான (குறிப்பாக இதை ஆராய வேண்டிய தேவையும் இங்கு முதன்மையான ஒரு காரணியாக வெளிப்பட்டு நிற்கிறது). பிராமண மன்னர்களும், பிராமணர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில்க் காட்டிக்கொள்ளாத பகையுணர்வைக் கொண்டிருந்தனர் என்பது அந்தப் பரசுராமனின் சத்திரிய மன்னர் அழிப்பின் ஒரு கூறேயெனக்கொள்ளலாம். பரசுராமன் கதை ஒரு தொன்மம் போல் தோன்றினாலும் அதில் பொதிந்திருப்பது வரலாறுதான் என்பதை மறுக்கவியலாது.

பரந்தகனின் மகன் கண்டராதித்த சோழன் காலத்தில் " கண்டராதித்த பெரும்பள்ளி" என்ற புறச் சமயக் கோவில் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டது. இதனால் சோழ நாட்டின் மேற்குப் பகுதியாகிய சேரநாட்டுக் கந்தளூர்ச்சாலையில் இருந்த பிராமணர் இவன் மீது வெறுப்புற்றிருந்தனர். இவன் 9ஆம் திருமுறையிலுள்ள திருவிசைப்பா பாடியவனாவான். இவர்களை அமைதிப்படுத்த கண்டராதித்தன் அங்கு சென்ற போது நயவஞ்சகமாக கொல்லப்பட்டான். இவன் சோழநாடு திரும்பாததால் அவனுக்கு "மேற்கெழுந்தருளிய தேவர்" என்னும் அடைமொழிப் பெயரும் வழங்கப்பட்டது. இச் செய்தியானது இவரது தம்பி மகனான சுந்தரசோழனின் ஆட்சிக்காலத்தின் இறுதியிலேயே தெரியவந்தது. இதனால் வெகுண்ட சுந்தரசோழன் தனது மூத்தமகன் ஆதித்த கரிகாலனை கொலையாளிகளைத் தண்டிக்க கந்தளூர்ச் சாலைக்கு அனுப்பினான். இதை முதலே அறிந்திருந்த உடையார் குடியில் வாழ்ந்து வந்த பரசுராமனின் வழித்தோன்றல்கள் சூழ்ச்சி செய்து கரிகாலனைக் கொன்றனர். சுந்தரசோழனை வீரசோழியமென்னும் இலக்கணநூல் மிகுந்த தமிழ்ப் பற்றாளனாக விரித்துரைக்கின்றது.

கரிகாலச்சோழனைக் கொன்றவர்களைக் கண்டறிவதிலும் கால இடைவெளி உண்டாயிற்று. இச் செய்தியானது கடலூர் மாவட்டம் உடையார்குடி அனந்தீசுவரன் கல்வெட்டால் தெரியவரும். இதில் கரிகாலச் சோழனைக் கொலை செய்து துரோகிகளானவர்கள் என்றும் பொறிக்கப்பட்டுள்ளதாம். கொலையாளிகள் பிராமணர்களாம். இவர்கள் யார்? கொன்றதன் காரணமென்ன? என்பதற்கு விடைகாண தொன்மங்களையும், இலக்கியங்களையும், கல்வெட்டு, செப்பேடுகளையும் ஆராய வேண்டியுள்ளது. சுந்தரசோழன், உத்தமசோழன் காலத்தில் அக் கயவர்களைக் கண்டறிந்து தண்டிக்க முடியவில்லையாம். இவர்களின் பின் அருண்மொழி என்ற தமிழ்ப் (தீட்டுமொழி) பெயரைக்கொண்டிருந்து பிராமணரின் வற்புறுத்தலால் இராசராசனென வடமொழிப் பெயரைச் சூடி கி.பி.985 இல் ஆட்சிக்பொறுப்பை ஏற்றவன். பொறுப்பேற்ற ஒரு சில ஆண்டுகளிலேயே காந்தளூர்ச் சாலையைக் கைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் அண்ணனைக் கொன்ற அத் துரோகிகளைக் கண்டறிந்து அவர்களின், அவர் உறவினரின் நிலங்களைப் பறித்து விற்று அரசுக்கருவூலத்தில் சேர்த்தபின் அக் கயவர்களுக்குத் தண்டனையும் வழங்கி பரசுராமன் தலைமுறையினரிருந்த காந்தளூர்ச் சாலையை நிலைகுலையச் செய்தான். தனது புகழ் பூத்த வெற்றிப் பட்டியலில் முதலாவதாக "காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி" என்று குறிப்பிட்டுள்ளானாம். திருவாலங்காட்டுச் செப்பேடு இவ்வெற்றியை "பரசுராமனது நாட்டை வென்றது" எனக் குறிப்பிட்டுள்ளதாம். இந்த இராசராசனின் மகனான முதலாம் இராசேந்திரன் சேர (இன்றைய கேரளம்) நாட்டையும், பல பழம் தீவுகளையும், சேரரின் முடி, மாலையையும், பரசுராமனால் சாந்திமத் தீவில் வைக்கப்பட்ட செம்பொன் முடியையும் கவர்ந்துகொண்டானென கல்வெட்டுகள் கூறுவதாக தொல்லியலாய்வர் நடன.காசிநாதன் விளம்புகின்றார். இன்று அந்தத் தனித்தமிழ்ச் சேரநாடே பரசுராம, நம்பூதிரிப் பிராமணர்கள் வரவால் தமிழ்மொழி சிதைக்கப்பட்டு மணிப்பிரவாள (மணிப்பவள) நடையை உருவாக்கி மலயாளமொழி என்ற புதுமொழியால் ஆளப்படுகிறது. அங்கிருந்த நம்பூதிரி பிராமணர்களால் உயர்சாதியாக்கப்பட்டவர்களும், அரசமரபினரும் மலயாள மொழியை ஏற்று இனம்மாறி மலயாளிகளாக வாழ்கின்றனர். இதை ஏற்காத உண்மை, உணர்வுத் தமிழர்கள் சொல்லொணாக் கொடுமைகளையும், கொடூரங்களையும் பல நூற்றாண்டு காலமாகப் பட்டறிந்து (அநுபவித்து) காமராசர் முதலமைச்சராயிருந்த காலகட்டத்தில் மார்சல் நேசமணி அவர்களின் தலைமையிலான போராட்டத்தினால் குமரி மாவட்டமாக தமிழ் நாட்டுடன் இணைந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் பற்று (பக்தி) இயக்கம் வளர்ந்ததால் தமிழும் வளர்ந்தது சமயமும் வளர்ந்தது. ஆனால் காலத்திற்குக் காலம் கண்ணப்பர், திருநாவுக்கரசர், தமிழ்(திரு) ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தியார் போன்ற பல தமிழ் சைவச் சான்றோர்கள் கடவுள் ஆட்கொண்டார் எனக்கூறி மேலுலகிற்கனுப்பினர். இவர்கட்கு நாயன்மாரென்றும் ஒரு சான்றும் வழங்கினர். இவர்கள் பாடிய தேவார ஏட்டுச் சுவடிகளை தமிழ் மக்கள் நடுவிற் பரவ விடாமல் தில்லைவாழ் பிராமணர் (சேரநாட்டு காந்தளூர்ச்சாலை, உடையார்குடியைச் சேர்ந்தவர்கள்) தில்லையம்பலத்தில் (சிதம்பரத்தில்) ஓர் அறையிலிட்டுப் பூட்டி வைத்தனர். இதை நம்பியாண்டார் நம்பியின் மூலம் அறிந்த இராசராசன் இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணரை அணுகி இத் தேவார ஏட்டுச் சுவடிகளை கேட்கின்றான். அவர்கள் மறுத்து தேவாரம் பாடியவர்கள் ஒருங்கே வந்தால் தருவோமென்றனர். அதன்படி இராசராசனான அருண்மொழி அவர்களின் படிமங்களுடன் சென்று அவற்றை மீட்டெடுத்தான். இருந்தும் பல்லாயிரக்கணக்கான சுவடிகள் செல் (கறையான்)அரித்து அழிந்திருந்தன. எஞ்சியவற்றை நம்பியாண்டார் நம்பியைக்கொண்டு தொகுத்து ஆதி திராவிடப் பெண்ணான இசைஞானியாரைக் (ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்கூட இசை சாதியிறக்கம் செய்யப்பட்டுள்ள தொல் தமிழரிடம் தான் இருந்ததென்பதை இது உறுதி செய்யும்) கொண்டு இவற்றிற்குப் பண் அமைத்தான். அத்தோடு கோவில்களில் வேதங்கள் ஒலிப்பதற்குப் பகரமாக(பதிலாக) திருமுறை ஓதுவதற்கு மிகுந்த முதன்மை கொடுத்தான். பல நாடுகளை வெற்றி கொண்டு புகழ்பட சோழராட்சியை நிலைநாட்டிய இப்பேரரசனின் ஒரேயொரு செப்பேடுதான் இதுவரையில் கிடைத்துள்ளதாம். அதுவும் நாகபட்டினத்தில் அமைக்கப் பெற்ற புத்தபள்ளி ஒன்றிற்கு அளிக்கப்பட்ட நிலக்கொடை பற்றியதாம். இவன் காலத்தில் பிராமணர்க்கு வழங்கப்பட்ட கொடைகள் பற்றிய எந்தவொரு தடையமும் கிடைக்கவில்லை என்பர் அறிஞர். இது அவன் பிராமணர் மீது கொண்ட வெறுப்பை வெளிப்படுத்துவதாய் உள்ளது. அப்படி அவன் வழங்கியிருந்தாலும் அவை மறைக்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் பிராமணர்மேல் சத்திரியர் என்றும் வெறுப்புடையவர் என்பதை தம் தலைமுறையினர்க்கு வெளிப்படுத்தி ஒருவித கசப்புணர்வை மனத்தில் வளர்ப்பதற்காயுமிருக்கலாம்.

ஆங்கிலேயர் ஆட்சியின் போது அவர்களுடன் ஒட்டியுறவாடி கல்வி கற்று உயர்ந்தும் இவ் வைதீக வேதமரபாரின் இயல்புக்குணம் மாறவில்லை (குலத்தளவே யாகுமாம் குணம்). திருவையாறு தியாகராாசரரங்கில் தண்டபாணி தேசிகர் தமிழில் (தீட்டுமொழியில்) பாடிவிட்டார் என்பதற்காக அவ்வரங்கு தீட்டுப்பட்டுவிட்டதென்று கூறி தீட்டுக் கழித்தனர். மாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ் வைதீகப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். சுதந்திரப் போராட்ட வீரர், புரட்சியாளர், சீர்திருத்தவாதி, தனது பூநூலை அறுத்தெறிந்து தாழ்த்தப்பட்ட ஒரு சிறுவனுக்குப் பூநூலை அணிவித்து சாதிய வல்லாண்மையைக் களைந்தெறிய முயற்ச்சித்துப் போராடியவர். இவர் பார்த்தசாரதி கோவில் யானையால் தாக்குண்டு இறந்தபோது அவரது மரணச் சடங்கில் அவரது சாதிக் குமுகாயத்தைச் (சமுதாயம்) சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளவில்லை. அவரது உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமக்க ஆள்கூட இருக்கவில்லயையாம். காந்தியடிகளிடம், அறிஞர் அண்ணாவிடம் பெருமதிப்பு வைத்திருந்தவர் வைத்தியநாதப் பிராமணர். இவரோர் சிறந்த சீர்திருத்தவாதி. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுள் எல்லாச் சாதியினரும் சென்று வழிபடப் போராடி அதில் வெற்றியும் கண்டவர் (1939). இவர் 1955 இல் இறந்தபோது இவர்க்குக் கடன் செய்ய இவரின் மக்களும், அவரின் வளர்ப்பு மகனான அன்றைய அமைச்சர் கக்கனவர்களும் மொட்டையடித்து நின்றனர். இதைக்கண்டு வெகுண்டனர் மரணக் கரணத்திற்கு(சடங்கு) வந்திருந்த உறவினர். தாழ்த்தப்பட்ட சாதிக்காரரொருவர் இறந்தவருக்குக் கடன் செய்யக் கூடாதென்றனர். ஆனால் வைத்தியநாதரின் மனைவியும், மக்களும் அவர்கள் கூற்றை ஏற்றுக் கொள்ளாததால் மரண வீட்டிற்கு வந்திருந்த உறவினர் கரணத்தில் கலந்து கொள்ளாது அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர். உலககுருவென்று வைதீக வேதமரபாரால் போற்றப்படும் காஞ்சிபுர சங்கராச்சாரி சந்திரசேகர சரசுவதி தமிழ்மொழி தீட்டுமொழியென்று கூறி அன்றைய ஆட்சிமொழிக்காவலர் கீ.இராமலிங்கனாருடன் தமிழில் பேச மறுத்தவர். "நெய்யுண்ணோம் பாலுண்ணோம் ---------------------------------- தீக்குறளைச்சென்றோதோம்" என்று ஆண்டாள் பாசுரத்திற்குப் பொருள் கண்டு உலகப் பொது வாழ்வியல் மெய்யியல் நூலான திருக்குறளை இகழ்ந்தவர்கள். இவையெல்லாம் வரலாற்றுப் பதிவுகள்.

இன்று வைதீக ஆரிய வேதமரபாரை (பிராமணர்) பார்ப்பார், அந்தணர், ஐயர் என்று கூறுவது அவற்றின் மெய்ப்பொருளுடன் நோக்கும்போது பொருத்தப்பாடு உடையதாகத் தெரியவில்லை. பார்ப்பார் என்போர் மருத்துவம்(பண்டுவம்), அறுவை மருத்துவம், வானியல் கணிப்புப் போன்றவற்றில் முழுமைத் தேர்ச்சி பெற்று இருந்தவர்களையும், அந்தணர், ஐயரென்போர் வாலறிவு மக்களையும், விஞ்ஞையர்களையும், உள்விழிமக்களையும், அறிதுயில்மக்களையும், ஐந்திரர்களையுமே குறித்தது. இவர்கள் உயர்நினைவு நிலையடைந்தவர்களாகவும், முதல்நூல், வழிநூல், சார்புநூல் போன்றவற்றை ஒவ்வோர் துறையிலும் ஐயந்திரிபற ஏரண(அளவையியல்) வழிப்பட்டதாய் கற்றவர்களாகவும், இவர்களின் கல்வி, சிந்தனைத்திறன் ஆற்றல், தொழில் முதிர்ச்சி போன்றன மிகஉயர்ந்தும் காணப்பட்டதால் இவர்கள் மக்கள் குமுகாயத்தால் போற்றப்பட்டனர். இவர்களின் தகுதி அறியப்படவே இவர்கள் முப்புரிநூலாகிய பூநூலையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதிமிக்க மதாணி(உத்தராட்சம்) மாலையையும் அணிந்தனர். பொதுவாகத் திருக்குறளும் பொதுமறை, வாழ்வியல்மறை, உலகமறை எனப்பலவாறாக அழைக்கப்படுகிறது. ஆனால் மறையென்பது மற்றவர்களிடமிருந்து ஒன்றை மறைப்பதாகவே பொருள்படும். ஆனால் குறள் வெளிப்படையானது எனவே இதை உலகமெய்யியல், உலகவாழ்வியல், உலகஒழுக்கவியல், உலகப் பண்பாட்டியல் நூலாகக் கொள்வதே பொருத்தமுடையதாகும். திருவள்ளுவரும் முப்புரிநூலும், பெறுமதிமிக்க மதாணி மாலையுமணிந்த வாலறிவாளராக அதாவது அந்தணர், ஐயரென்ற நிலையெய்தியிருந்தார் எனலாம்.

மதுரைத் தீயானது பார்ப்பாரறவோர் பசுபத்தினிப் பெண்டிர்-------------- சிலம் 21:53 போன்றோரைத் தவிர்த்தது, ஏனெனில் இவர்களாற்றான் பாதிக்கப்படும் மக்கள் பயனடைய முடியும் என்பதாலேயாகும். சமயத்தை நடுவகமாகக் கொண்டு கடந்த 2000 ஆண்டுகளாக மன்னர்களைத் தம்வயப்படுத்தி வள்ளுவக்கணியரான தமிழ்ப் பார்ப்பார், அந்தணர், ஐயர் பதவிகளை வைதீக வேத ஆரியப் பிராமணர் பறித்துத் தமக்கு அப் பெயர்களைச் சூட்டிக்கொண்டு அவர்களைச் சாதியப்பிரிவில் கீழ்நிலைப் படுத்தினர். இவ் வைதீகப் பிராமணர்க்கு பெண் கொடுத்தவர்களுக்கும், இவர்களுடன் சேர்ந்துகொண்ட தற்குறிகளுக்கும் சாதியுயர்ச்சியும் வழங்கினர். இவர்களை எதிர்த்தவர்களை விரட்டியடித்தனர். இவர்களிடமிருந்த ஏட்டுச்சுவடிகள் களையப்பட்டு மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டபின் அழிக்கப்பட்டன. அத்தோடு மரணமிலா இன்பப் பெருவாழ்வைப் (மோட்சம்) பெற மக்களிடம் எஞ்சியிருந்த ஏட்டுச் சுவடிகளை ஆடிப்பெருக்கில் ஆற்றிலிடக் கோரினர். மூடத்தின் மொத்த உருவான மரமண்டைத் தமிழர்களும் அதை நிறைவேற்றி தம் மேலுலக (மோட்ச) இன்ப வாழ்வை உறுதிசெய்து கொண்டனர். அத்தோடு அன்றிலிருந்தே பார்ப்பார், அந்தணர், ஐயர், வள்ளுவர், வள்ளுவக்கணியர் என்ற தொழிற்துறைசார் (இன்றைய மருத்துவவல்லுநர், அறுவை மருத்துவ வல்லுநர், துறைசார் முனைவர்கள், பேராசிரியர்கள், பண்டிதர், கவிராயபண்டிதர் போன்ற) தகுதிப் பெயர்களை தமதாக்கிக்கொண்டும், அவர்கள் அணியவேண்டிய முப்புரிநூலையும், மதாணி (உத்திராட்சம்) மாலையையும் வைதீகவேதப் பிராமணர் அணிந்து தமது சாதிய மேலாண்மையை வெளிப்படுத்தும் ஒரு குறியீடாகக் காட்டி நிற்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவுடைமைத் தோழர் ராகுல்யீ அவர்கள் கூறும்போது "பிராமணர் இந்திய நாட்டில் உள்ளவரை இந்தியாவையாரும் காப்பாற்ற முடியாது" என்பார். சாதியம், தீண்டாமை என்பனவும், தாய்மொழியல்லாத வேற்றுமொழி மதத் திருவழிபாடும் அடிப்படை மனித உரிமை மீறலாக என்று உலக ஒன்றிய நாடுகளால் (ஐ.நா) உறுதிகூறப்படுகிறதோ அன்று ஓரளவிற்கேனும் மனிதம் நிலைபெறும். அத்தோடு கல்வி, தொழில் போன்றவற்றில் எல்லாச் சாதியினருக்கும் சம வாய்ப்புக் கிடைப்பது போல் எல்லாச் சாதியினர்க்கும் படித்துப் பட்டம் பெற்று இந்துக் கோவில்களில் திருவழிபாடு தமிழில் நடத்தும் குரவராகும் நிலையேற்பட வேண்டும். இல்லையேல் பிராமணியம் மேலாண்மை செலுத்தும் இந்திய, நேப்பாள அரசுகளுள்ளவரை வைதீக இந்துத்துவ பிராமணியத்தின் குறும்புத்தனங்களும், அழிப்புக்களும் இருந்துகொண்டேயிருக்கும். இந்நச்சுக் காற்று கட்டாயமாக இலங்கையிலும் வீசுமெண்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. அரசென்பதும் ஒரு இனம்(வர்க்கம்) மற்றொரு இனத்தை (வர்க்கத்தை) ஒடுக்குவதற்கான பொறி. அதாவது ஒரு இனத்திற்கு மற்றைய அடிமட்ட இனங்களை அடக்கியாளச் செய்யும் பொறி என்பார் பொதுவுடைமைவாதி லெனின் அவர்கள்.

கி.பி.2ஆம் நூற்றாண்டிற்குப் பின் வட இந்திய தமிழிய மொழியான பாகத மொழியையும், தமிழ் வட்டெழுத்திலிருந்து கிரந்த எழுத்தையும் உருவாக்கி இரண்டையும் கலந்து தெலுங்கு மொழியையும், கி.பி.5ஆம் நூற்றாண்டளவில் கன்னட மொழியையும், கி.பி.10ஆம் நூற்றாண்டளவில் மணிப்பிரவாள (மணிப்பவள) மலையாளத்தையும், கி.பி.12ஆம் நூற்றாண்டளவில் சிங்களத்தையும் சிறுசிறு மாற்றங்களுடன் தமிழைச் சிதைத்து உருவாக்கினர். இதுதான் முனைவர் காடுவெல் ஐயர் தமது ஒப்பியன் மொழி நூலில்க் குறித்த திராவிட (தமிழிய) மொழிக் குடும்பம். இந்தக் கலப்பு மொழிகளான கன்னடம் ,தெலுங்கு, மலையாளம், துளு, சிங்களத்துடன் சேர்த்து தமிழையும் குறிக்கவே திராவிடம் என்னும் சொற்பதத்தைப் பயன்படுத்தினார். ஆனால் தமிழ்ச் சிதைப்பால் உருவாகிய எந்த மொழிக்காரனும் தன்னை திராவிடனெனக் கூறிக் கொள்வதில்லை. ஆனால் இதை வைத்தே கன்னட வடுகரான ஈ.வே. ரா.பெரியார் சிலம்பமாடி தமிழ்நாட்டை தமிழரல்லாத மேற்குறித்த தம்மைத் திராவிடரென்று கூறிக்கொள்ளாத திராவிடன் தொடர்ந்து தமிழ் நாட்டை ஆள கரவாகச் செயல்செய்தார். மூடத்தில் முடங்கிய தமிழன் மட்டும் தன்னைத் தாழ்த்தி திராவிடனென்கின்றான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுகிறான். இனிமேலாவது திராவிடன், திராவிட மொழி என்பதைத் தவிர்த்து தமிழன், தமிழியமொழியெனக் கூறவேண்டும், எழுதவேண்டும். இதன் மூலம் அடிமைப்புத்தி, தாழ்வுணர்ச்சி மரபணுக்களை முதலில் அழிக்க முயல வேண்டும். தமிழர்கள் இனமொழியுணர்வு, அதில் பற்று, நம்பிக்கை வைக்காதவரையில் தமிழ்மொழி அழிப்பு, தமிழரழிப்புத் தொடரத்தான் போகிறது.

கி.பி.1901 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் சிற்றரசர்(யமீந்தார்) பாலநத்தம் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் மதுரையில் இலங்கை யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினரான பெரும்புலவரும் நாவலர் பெருமானால் தொடக்கப்பட்ட வண்ணைச் சைவப்பிரகாசப் பள்ளியின் ஒரு பிரிவாயிருந்த காவிய பள்ளியின் முதல்வராயிருந்த சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவரின் பரிந்துரைகளோடு நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். இங்கு பல்லாயிரக் கணக்கான தமிழ் நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும் சேர்த்து வைத்திருந்தும் அவை தமிழ் காழ்ப்புணர்வும், தமிழர் பகைமையும் கொண்டவர்களால் தீயிட்டுக் கொழுத்தி அழித்தொழிக்கப் பெற்றது. யாழ்ப்பாணத்திலும் கூட 1981இல் வடமொழியாளர் வழிவந்த இந்நாட்டுப் பெரும்பான்மையினம் ஆசியாவிலேயே முதல் தரம்வாய்ந்த யாழ்நூல் நிலையத்தைத் தீயிட்டுக் கொழுத்தி அழித்தது. அண்மையில் நடந்த புலிகள் அரசபடைகளுக்கிடையிலான போரின்போது எத்தனையோ பள்ளிகள், மருத்துவ மனைகள், கோவில்கள் தாக்கப்பெற்று சில ஆயிரம் பேரின் உயிர்களைக் காவுகொண்டது.

இரண்டாம் உலகப்போரின்போது யெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் பெரும்போர் நடந்துகொண்டிருந்த வேளை அன்று கொடூர ஆட்சியாளனாகக் கொள்ளப்பட்ட கிட்லர் கூட எக்காரணம் கொண்டும் ஒக்ச்போர்ட் நூலகத்தின் மீது குண்டு வீசக்கூடாதென்று தன் படைகளுக்குக் கட்டளையிட்டிருந்தான். அதேபோன்று யெர்மனிய புகழ்பெற்ற நூலகத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்படக் கூடாதென இங்கிலாந்து தன் படைகளுக்குக் கட்டளை இட்டிருந்தது. அன்றைய போரின்போது கூட போரறம் பேணப்பட்டுள்ளது. உலக மொழிகளிலேயே முதன் மொழியான தமிழ் என்றோ பெற்றிருக்க வேண்டிய செம்மொழித் தகுதியை 100 ஆண்டுகளுக்குமேல் பெறவிடாமல் தடுத்து நிறுத்தியவர்கள் இந்திய நடுவனரசில் மேலாண்மை செலுத்துகின்ற தமிழ், தமிழர் காழ்ப்புணர்வுகொண்ட வைதீகவேத மரபாரேயாவார். இன்றும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டிலிருக்கும் வைதீக மதப்பித்தம் கொண்ட காஞ்சிபுரம் சங்கராச்சாரி மடத்தைச் சேர்ந்த இரவண சர்மா என்பார் தமிழ் ஒருங்கு குறியீட்டினுள் (ஒருங்கு குறித்தொகுப்பியம் -- யூனிகோட் கொன்சோட்டியம்) கிரந்த எழுத்துக்களை நுழைத்து தமிழைச் சிதைக்க விண்ணப்பித்துள்ளாராம். அத்தோடு சங்கதத்துள்(சமற்கிருதம்) தமிழை நுளைக்கும் முயற்சிகளும் அண்மையில் அரங்கேறியதாக சொல்லப்பெறுகிறது. இவை கடந்த 3700 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கிறதென்றால் அதற்கு யார் காரணம். அடிமைத் தனமும் தாழ்வுணர்ச்சியும் கொண்ட தமிழர்களே காரணம். தமிழர் யார், அவர்களின் வரலாறு என்ன? அவர் மதம், பண்பாடு, ஒழுக்கவியல் என்ன? எதை அறிவதிலும் நாட்டமில்லை. கண்ட மாத்திரத்தில் கொண்டை முடிவதும், நேற்றையதை இன்று புறக்கணிப்பதும் தான் பெருமை என நினைத்து வாழ்வதும் தான் இன்றைய தமிழனின் வரைவிலக்கணமாகக் கொள்ளவேண்டியுள்ளது. யோர்ச் சந்தயானா கூறும்போது "வளர்ச்சி என்பது (எல்லாவற்றையும்) மாற்றிக்கொண்டே இருப்பதல்ல, நல்லவற்றை கைவிடாதிருப்பதே வளர்ச்சி. வரலாற்றை மறப்பவர்கள் தாம் பட்ட இன்னல்களை இடைவிடாது மீண்டும் மீண்டும் பெறுவர்" என்பார். வங்கத்துக் கவிஞர் மாகவி இரவீந்திரநாத் தாகூர் கூறும் போது "தாய்மொழியையும் அதிலுள்ள இலக்கியங்களையும் மதிக்காமல் வேற்றின மொழிகளுக்குத் தம்மை அடிமையாக்கிக் கொண்ட தமிழர்கள் இருக்குமளவு வேறு எந்தமொழி இனத்திலும் இல்லை" என்பார்.

இந்தியாவின் மொத்தக் குடித்தொகையில் 03 விழுக்காடு மட்டுமே உள்ள இந்த வைதீகவேதப் பிராமணர் தமது குள்ளநரிப் புத்தியைக் கொண்டு நடுவன் அரசில் மேலாண்மை செலுத்தி அதை வழிநடத்துகிறார்கள். உலக நாடுகளின் ஒன்றிய (ஐ.நா) மனித உரிமை ஆணையகம் சாதியம், தீண்டாமை ஆகியவற்றை அடிப்படை மனித உரிமை மீறலாக வெளிப்படுத்த முயன்றபோது அதைக் கரவாகத் தடுத்து நிறுத்தியது இந்தியா. "மதமென்பது பகுத்தறிவிற்கு எட்டாததும் செயலறிவுக்கு உட்படாததும், நியாண்டர்தால் மனிதன் காலத்திலேயே(100,000 ஆண்டுகளுக்கு முன்பே) தொடங்கி விட்ட"தென்பார் தொமசு.எவ்.ஓடியா என்பார் தமது "சமுதாயத்தில் மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற ஆங்கில நூலில். தலைமுறை தலைமுறையாக ஆயிரஆயிரமாண்டுக் கணக்கில் மூளைச்சலவை செய்யப் பெற்றவர்களும், இதை வைத்தே தம் வயிற்றுப் பிழைப்பை நடத்துபவர்களும் சாதியம் தவறென்பதையோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்த் திருவழிபாடு தாய்மொழி தவிர்த்து வேற்று மொழியில் செய்வது தவறென்றோ ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஒரு கருத்துக் கணிப்போ அல்லது வாக்களிப்போ நடத்தப்பட்டால் முடிவு மேற்குறித்தவற்றிற்குச் சார்பாகவும் வரலாம். ஆனால் அத் தீர்ப்பு தவறானதென்பது வெள்ளிடை மலைதானே. அண்மையில் செய்தித் தாளொன்றில் சிறுவர்களின் தவறான வழிநடத்தலுக்கு அவர்களின் ஒப்புதலும் தான் காரணமென ஒரு உசாவல் மன்ற நடுவர் கூறியிருந்தார். ஆனால் அவர்கள் சரிபிழை தெரியாத அகவையினர் என்பதால் தவறானவழியில் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளார் என்பதேயாகும். எனவே நடுநிலை நின்று காய்தல் உவத்தலின்றி முடிவுகள் எடுக்கப்படவேண்டும். இது நடைபெறுமா?.

ம.கோ.இராமச்சந்திரனவர்கள் (எம்.யி.ஆர்) தமிழ்நாட்டின் முதலமைச்சராய் இருந்தபோது கோவில் திருவழிபாடுகள் தமிழில் செய்யலாமாவென்பதை ஆராய ஒரு குழுவை அமர்த்திய போது அக் குழு கோவில் திருவழிபாட்டை தமிழில் செய்யலாமென பரிந்துரை செய்தது. ஆனால் இதை எதிர்த்து ஒரு தாழ்வுணர்ச்சி கொண்ட அடிமை சென்னை உயர்நீதிமன்றில் வழக்கொன்றைத் தொடுத்தது. உசாவலின்போது அது “நானும் தமிழன் தான் ஆனால் கடவுளுடன் பேசும்மொழி தேவநாகரி” என்றது. தமிழ்நாட்டில் 1000 கணக்கில் தமிழ்மறைக் குடமுழுக்குகளையும், 1000 மேற்பட்ட தமிழாகமத் திருமணங்களையும், தமிழ்ச் சிவ வேள்விகளையும் தமிழ்நாடு அரசு இந்து சமய அற நிலைய ஆட்சி ஆணையகத்தின் ஒப்புதலோடு சிவாச்சாரியப் பயிற்சி, ஓதுவார் பயிற்சி போன்றவற்றைத் தலைமையேற்று வழிநடத்திக் கொண்டிருப்பவருமான திரு. மு. பெ. சத்தியவேல் முருகனார்க்குத் தான் எத்தனை கொலை மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள். இவருக்கெதிராக வடமொழி நூாலோரால் சிவவேள்விகளை, தமிழ்மறை குடமுழுக்குக்களை நிறுத்த நீதிமன்றில் தடை உத்தரவு கோரிப் பல வழக்குகள்: ஒரு வழக்கில் “கடவுளுக்குத் தமிழ்தெரியாதென்று” கூறிக் கூட வாதிட்டனராம். ஆனால் எல்லா வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பெற்றனவாம்.

இப்படியாகத் தொடர்ந்து ஆரிய,வைதீகவேத வடமொழியாளர்களால் தமிழுக்கும், தமிழர்க்கும் நெருக்கடிகள் இருக்கத்தான் போகிறது. மதுரை இன்னும் எரிந்துகொண்டே இருக்கிறது.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைபேண் அபிவிருத்தியும் தமிழன் கால்வாயும்

குமரி (இந்து) மாவாரியின் கடல்வளம் மிக்க பைந்திரமாகக் (பிரதேசமாக) காட்சி தருவது தமிழன் கால்வாய் எனப்படும் அடைக்கல (பார்க்கு) நீரிணையாகும். இப் பைந்திரமானது தமிழ் நாட்டின் கிழக்குக் கரையான மறைக்காடு(வேதாரணியம்) தொடங்கி கன்னியாகுமரி வரையும் இலங்கைத் தீவின் காங்கேசன்துறை தொடக்கம் புத்தளம் வரையிலான பகுதியையும் அதாவது மன்னார்க் குடாவையும் உள்ளடக்கியது. இப்பகுதி நூறு(100) விழுக்காடு தமிழர்களின் வாழ்விடமாகவும், தொழிலிடமாகவும் இருப்பதாலேயே இதற்குத் "தமிழன் கால்வா"யெனப் பெயரிடப்பட்டது. இனிவரும் காலங்களில் இந்துமாவாரியைக் "குமரிமாவாரி" என்றும், அடைக்கல(பார்க்கு) நீரிணையைத் "தமிழன் கால்வாய்" எனவும் குறிப்பிடப் பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும். இப் பெயரே இயற்கையோடு இணைந்த கருத்தாழமும், செறிவும், வனப்பும், மிக்கதாகும். இற்றைக்கு 4000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாவலந்தேயம் (இன்றைய இந்தியா, பாகிச்தான், இலங்கை, பங்களதேசம்) தமிழரின் நாடாகவேயிருந்தது. பின் வந்தேறிகளான ஆரியர், அராபியர், பாரசீகரின் ஊடுருவலால் கூனிக்குறுகி இந்தியாவின் ஒரு பைந்திரமாகத் தமிழ்நாடும், இலங்கையின் வடகிழக்குப் பைந்திரமாக தமிழர் வாழ்விடமும், சிதைக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் தமிழரை தமிழரின் வாழ்விடங்களில் இருந்து துரத்துவதும் அந் நிலங்களை அரசு கையகப்படுத்துவதும் வலிந்து வேற்றின மக்களை குடியேற்றித் தமிழரின் இருப்பைக் கேள்விக் குறியாக்கியும், பொருளாதார மயமாக்கல் என்னும் போர்வையில் வேற்று நாட்டரசுகளுக்குக் கையளித்துக் (சம்பூர் போன்றன) கொண்டுமிருக்கின்றனர். இந்த இலங்கை, இந்தியத் தமிழர் பைந்திரங்களைப் பிரிப்பதும், இணைப்பதும் இத் தமிழன் கால்வாயே. கி.பி.18 ஆம், 19ஆம் நூற்றாண்டில் இராமேசுவரத்தை ஆண்ட சேதுபதியின் பெயர் கொண்டும் இத் தமிழன் கால்வாய் சேது மாவாரி (சமுத்திரம்) என்றும் அழைக்கப்படுகிறது.

இத் தமிழன் கால்வாயில் உலகின் வேறெங்கும் காணப்படாத 3600 வகைக்கும் அதிகமான கடல் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொல்பின்கள், திமிங்கிலங்கள் போன்ற பாலூட்டிகளும் ஐந்து வகையான ஆமைகளும், 450 வகையான மீனினங்களும், சீரோடும் சிறப்போடும் தம் வாழ்விடமாகக் கொண்டு வாழ்கின்றன. மேலும் 160 வகையான புள் (பறவை) இனங்களுக்கும் இது வாழ்விடமாகவுள்ளது. தென்னாசியாவிலேயே இங்குதான் ஆவுளி என்னும் கடற்பசுக்கள் வாழ்கின்றன. உலக இறும்பூதுகளிலே (அற்புதங்கள்) ஒன்றென்று சொல்லப்படுகின்ற கடற்பவளங்களும், பவளத்திட்டுக்களும் இப்பகுதியிலேயே காணக்கிடக்கிறது. இவை பண்டைக் காலக் காடுகளை ஒத்தவையென்றும் ஆழ்கடலின் இறும்பூதும், அழகிய மழைக் காடுகளென்றும் ஆய்வாளர்கள் சிறப்பிக்கின்றனர். இவை இந் நிலத்திலே மரங்கள் செய்யும் தொழிற்பாட்டை கரியீருயிரகை (கரியமலவாயு --காபனீரொட்சைட்)யை உட்கொண்டு உயிர்வளியை(ஒட்சிசன்) வெளிவிடுகின்றன. இதனால் இப்பகுதியிலே காணப்படும் கடற்புதர்கள் (தாவரங்கள்),கடல்வாழ் உயிரினங்கள் செழித்து உயிர்வாழ வழிசமைக்கின்றன.

அத்துடன் இப் புவியின் தட்பவெப்ப நிலையைப் பேணுதற்கும், ஆண்டுக்கு 900 நுண்ணயிரி (மில்லி மீற்றர்) மழையைப் பெறுவதற்கும் பெரும் பங்காற்றுகிறது. இப் பவளத்திட்டுக்கள் புயற்காற்றைக் கட்டுப்படுத்தி கடலலைகளின் தாக்கத்திலிருந்து கடற்கரைகளைப் பாதுகாக்கிறது. அத்தோடு கடலின் தட்ப வெப்ப மாற்றங்களையும், எவ்வளவிற்கு கடல் மாசடைந்துள்ளதென்பதையும் சுட்டுவதற்குமான காரணியாகவும் செயற்படுகிறது என்பர். இக் கால்வாயில் பெறப்படும் மீன் இலங்கையின் மொத்த மீன்வரவின் 20 விழுக்காடு எனப்படுகிறது. தமிழ்நாட்டிலும் இதே நிலைதான். எனவேதான் தமிழன் கால்வாயின் 10500 ச.அயிரி மாத்திரி(ச.கிலோ.மீற்றர்) பரப்பளவை கடல்வாழ் உயிரினப் பூங்காவாக (அடைக்கலவிடம் -- சரணாலயம்) இந்திய நடுவனரசும், தமிழ்நாட்டரசும் 1989இல் வெளிப்படுத்தின. இதுவே தெற்கு, தென்கிழக்காசிய முதல் கடல்வாழ் உயிரினப் பூங்காவாகும். அத்தோடு உலகநாடுகள் ஒன்றியத்தின்(ஐ.நா) கல்வி, அறிவியல், பண்பாட்டு ஆணையத்தின்(யுனச்கோ) மாந்தனும் உயிர்க்கோளமும் என்ற திட்டத்தின் கீழ் சிறப்பிடம் பெற்றுள்ளது.

இத்தனை இயற்கைச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு தமிழன் கால்வாய் வாழ்விட மக்களுக்கு தொழிலும், வருவாயும், வாழ்வுமளித்த தமிழன் சொத்தை சிதைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட திட்டமே சேது மாவாரி(சமுத்தர)த் திட்டமாகும். இத்திட்டம் தமிழன் கால்வாயை 36 அடி ஆழமும், 0.75 மைல் அகலமும், 44 மைல் நீளமும் கொண்டதாக ஆக்குவதேயாகும். இங்கு எஞ்சியது கோடிக்கணக்கான ஊழல் மோசடியும், தமிழன் வருவாய்ச் சிதைப்புமேயாகும். போதாக் குறையாக நுரலைச்சோலையின் அனல் மின் நிலையத்தின் கழிவுகளால் மாசடையப் போவதும், வளங்குன்றப் போவதும் தமிழன் கால்வாயின் மன்னார்க் குடாக்கடலே. இதனால் பாதிப்படையப் போகிறவர்கள் கடற்றொழிலாளரான நெய்தல் நில மக்களேயாவார். அன்றைய இலங்கையின் மக்கள் தலைவர்(சனாதிபதி) யே.ஆர்.யெயவர்த்தனா அவர்கள் தமிழீழப் பயங்கரவாதத்தை ஒழிக்க பேயோடும் கூட்டுச் சேருவேன் என்றார். ஆனால் அதற்குச் சரியான செயல் வடிவம் கொடுத்து இந்தியா, பாகிச்தான், சீனா, அமெரிக்கா, அராபிய நாடுகள் எல்லாவற்றையும் சேர்த்து தமிழீழப் பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்து விட்டார் இன்றைய தலைவர் இராசபக்ச அவர்கள். ஆனால் இவர்களெல்லாம் இன்று இலங்கையின் தன்னிறைமையில் பங்கு கேட்கிறார்கள். சீனாவிடம் மன்னார்க்குடா எரிவளி, எண்ணையகழ்வு ,பெருந்தெருக்கள், துறைமுகங்கள் இன்னும் பல. இந்தியாவிடம் சம்பூர், தொடர்வண்டி (புகையிரத) வீதி இன்னும் பல. பாகிச்தான், அமெரிக்கா ------------------------ இப்படி அரசின் நிலை திரிசங்குதான். குளத்தைக் கலக்கிப் பருந்திடம் கொடுத்த கதைதான்.

இன்றோ தமிழன் கால்வாயின் மன்னார்க் குடாவை அண்மித்த தமிழ்நாட்டின் குமரி மாவட்டத்தின் கூடங்குளம் என்னுமிடத்தில் 2000 மெகாவற் மின் வலுவைப் பெறுவதற்கு ஓர் அணுமின் நிலையம் உருவாகிக் கட்டுமானப் பணிகள் முடியும் தறுவாயிலுள்ளது. இதனால் ஏற்படப்போகும் பேரழிவை மனதில் கொண்டு இதன் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்தக்கோரி அவ்விடத்தை வாழ்விடமாகக் கொண்ட மக்களும் நலன் விரும்பிகளும் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால் இந்திய நடுவனரசு செவி சாய்ப்பதாகவே இல்லை. இது நடுவனரசில் செல்வாக்குச் செலுத்துகின்ற வைதீக வேத மரபாரின் தமிழர் அழிப்பின் செயற்பாடாயும் இருக்கலாம். ஏனெனில் 1988 ஆம் ஆண்டு சிலை(மார்கழி)த் திங்கள் இவ் அணுக்கொலை உலைக்கு அடிக்கல் நாட்ட வந்த இராசீவ் காந்தியை எதிர்த்துத் தடுத்தது முதல் கடந்த 24 ஆண்டுகளாக தொடர்ந்து நடத்திவரும் பல்வகைப் போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் தூசென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதித்து வன்படைத் துணையுடன் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகிறது. கட்டுமானப் பணி முடிந்து அணுஉலை இயங்கத் தொடங்கியபின் ஏதாவது ஒரு நேர்ச்சி (விபத்து) இயற்கையாக (நிலநடுக்கம், ஆழிப்பேரலை போன்றன) அல்லது செயற்கையாக (பணியாளரின் கவனக்குறைவு) ஏற்படும் போது அழியப்போவது தமிழரும் தமிழ்நாடும், தமிழன் கால்வாய் கடல்வாழ் உயிரிகளும், இலங்கையின் மன்னார்க் குடாவை வாழ்விடமாகக் கொண்ட தமிழர்களுமேயாகும். ஏனெனில் அணுக்கதிர்த் தாக்கம் 160 அ.மா (கி.மீ) சுற்றுவட்டத்தில் இருக்குமென்கின்றனர் அறிஞர்கள்.

இதை மூடுவதனால் நடுவனரசுக்கு 13000 கோடி உரூபா இழப்பாம். மின்னாற்றல் குறைந்தால் தொழில் முன்னேற்றம் பாதிப்படையுமென்கின்றனர். இது எப்படி இருக்கிறதென்றால் ஒரு தந்தை தன் மகளுக்கு பல கோடிகளைச் செலவிட்டு (யெயலலிதா அம்மையார் வளர்ப்பு மகன் தினகரனுக்கு திருமணம் நடத்தியது போல்) திருமண ஏற்பாடுகளைச் செய்கின்றார். ஆனால் திருமணத்திற்கு சில நாட்களின் முன் மாப்பிள்ளை ஒரு எவ்வம் (எயிட்சு) நோயாளியென அறிகிறார். இருந்தும் கோடிகோடியாய் பணத்தைச் செலவு செய்துவிட்டேன், மகள் எக்கேடுகெட்டாலும் பறுவாயில்லை திருமணத்தை நடத்தியே தீருவேன் எனப் பிடிவாதம் பிடிப்பது போலல்லவா இந்திய அரசு செயற்படுகிறது. இந்தியா ஊழல்கள் மிகுந்த நாடு என்பது உலகக் கணிப்பீடு. அண்மைக் காலங்களில் எத்தனையோ வகை ஊழல்களும் மோசடிகளும். குறிப்பாக: பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் நடைபெற்ற ஊழலிழப்பு 70,000 கோடியாம், அலைக்கற்றை ஊழலில் அரசுக்கு இழப்பு 175,000 கோடியாம், இசுரோ அலைக்கற்றை ஒதுக்கீட்டில் இழப்பு 200,000 கோடியாம், தெகல்கியின் போலிமுத்திரைப் பதிப்பில் அரசுக்கு இழப்பு 20,000 கோடியாம் இவை போன்று போபர்சு பீரங்கி ஊழல், அர்சத் மேதாவின் பங்குப் பத்திர மோசடி ஊழல், தமிழன் கால்வாய் (சேது சமுத்திர) த் திட்டத்தால் பல கோடி இழப்பு. வெளிநாடுகளில் கறுப்புப் பணமாக கோடானுகோடி இவற்றோடு ஒப்பிடும் போது கூடங்குளம் அணு மின் உலையை மூடுவதால் ஏற்படப்போகும் இழப்பு ஒரு சிறுதொகையேயாகும். இதனால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு இயற்கைச் சமநிலை பேணப்படும்.

ஒரு அணுஉலையின் கால எல்லை 30 ஆண்டுகள் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அணுஉலைக் கழிவுகளைப் பாதுகாப்பாகப் புதைக்க 20,000 கோடி தேவைப்படுமென்கின்றனர். வி.பி.இ.ஆர்.1000 என்ற உருசிய அணுஉலை பல்வேறு குறைபாடுகளை உடையதாம். பல நாடுகள் இவ்வகை அணுஉலைகளை மூடிவிட்டன. உருசிய உக்ரெயின் செர்னோபில், யப்பான் புகுசிமா போன்ற பல நாடுகளில் கட்டப்பட்ட இவ்வகை அணுஉலையால் ஏற்பட்ட நேர்ச்சி(விபத்து)கள் காரணமாக பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்தும் உடல் ஊனமுற்றும் தொடர்ந்தும் பல நோய்களுக்கு ஆளாகியும் சொல்லொணா வேதனையை பட்டறிந்து(அநுபவித்து) கொண்டு இருக்கின்றனர். இவ்வகை அணு வெடிப்புக்களால் பல்லுயிரும், நிலம், நீர், வளி கதிரியக்கத் தாக்கத்திற்கு உள்ளாகி அதாவது சுற்றுச்சூழல் மாசடைந்து எவ்வுயிரும் வாழ முடியாத ஒரு புவிக்கோளத்தை உருவாக்குகிறது. அணுஉலை இயங்குகின்ற இடங்களிலும் கதிரியக்கத் தாக்கம் காணப்படுகிறது. அமெரிக்காவில் இவ்வுலைகள் இயங்கும் 63 இடங்களில் ஆய்வுகளை மேற்கொண்டபோது அச்சூழலில் வாழும் பலர் அரத்த மூளைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

## பாதிப்பற்ற மாற்று அணுஉலை

பொதுவாக அணுஉலைகளில் யுரேனியம் அல்லது புளூட்டோனியம் பயன்படுத்தப்படுகிறது. இவை கதிர்வீச்சுத் தன்மையுடையவை. ஆனால் இந்திய விஞ்ஞையர்(விஞ்ஞானிகள்) பாதுகாப்பான அணுஉலையை வடிவமைத்துள்ளனராம். இதில் யுரேனியம், புளூட்டோனியத்திற்குப் பதிலாக தோரியம் பயன்படுத்தப் படலாம் என்கின்றனர். இத்தோரியத்தின் கதிர்வீச்சுத் தன்மை யுரேனியத்தைவிட ஆயிரம் மடங்கு குறைவானதாம். அத்தோடு தோரியக்கழிவும் யுரேனியக் கழிவைவிட ஆயிரம் மடங்கு குறைவானதாம். மேலும் தோரியம்: யுரேனியம், புளூட்டோனியம்போல் தன்னளவில் செயற்படக் கூடியதல்ல. தோரிய அணுஉலையை இயங்க வைக்க நியூற்றன்களை தூண்டுகோல்களாக(ஊக்கி) பயன்படுத்த வேண்டும். இயற்கைச் சீற்றங்களான ஆழிப்பேரலை(சுனாமி), நிலநடுக்கம் போன்ற நிலைகளில் நியூற்றன் செலுத்துவதை நிறுத்திவிட்டால் தோரியச் செயற்பாடு நிறுத்தப்பட்டு அழிவுகள் தடுக்கப்படும். இன்று பாதுகாப்பான அணுமின்னை உற்பத்தி செய்யும் விழிப்புணர்வு ஏற்பட்டதால் அணுமின் உற்பத்திக்கு தோரியத்தைப் பயன்படுத்த பிரிட்டன், அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வந்துள்ளன. யுரேனிய, புளூட்டோனிய அணுஉலைகளில் நேர்ச்சி ஏற்படாவிட்டாலும் அப் பைந்திரங்களில் உயிர்வாழ்வனவும், நீர், நிலம், வளியாவும் கதிரியக்கத்தால் தாக்கமுற்று கொடிய நோய்களுக்கு ஆளாகி இறக்க நேரிடும். இந்த யுரேனிய புளூட்டோனிய அணுஉலைக் கழிவுகளிலிருந்து ஒரேயடியாக இலக்கக் கணக்கில் ஒரே நொடியில் உயிரிகளைக் கொன்று குவிக்க, ஊனமாக்கக் கூடிய அணுக்குண்டும், அணுப் படைக்கலங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உலக அளவில் கிடைக்கும் மொத்த 12 பன்னிலக்கம் (மில்லியன்) கல்லெடை(தொன்) தோரியத்தில் இந்தியாவில் மட்டும் 8 பன்னிலக்கம் கல்லெடை வரை உள்ளதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. எனவே இத்தோரியத்தை ஏன் இந்தியா பயன்படுத்தக் கூடாது என்ற கேள்வியும் எழாமலில்லை. அத்தோடு மின்னாற்றலைப் பெற மாற்று வழிமுறைகள் இல்லையா என்பது மற்றொரு புதிராகும்.

அத்தோடு இந்திய முன்னாள் மக்கள் தலைவரும்(சனாதிபதி) அணு விஞ்ஞை(விஞ்ஞானி)யருமான அப்துல் கலாம் அவர்களும், இன்னாள் இந்தியத் தலைமை அமைச்சரும் பொருளாதார வல்லுனருமான மன்மோகன்சிங் அவர்களும் அணு ஆற்றல்(சக்தி) இல்லாமல் மின் ஆற்றலை(சக்தி) உயர்த்த வேறுவழியில்லை என்கின்றனர். இவர்கள் உண்மையான மக்கள் தொண்டர்களா? அல்லது அறிவர்களா அல்லது வள்ளுவனார் கூறும் புல்லறிவாளர்களா? எப்படி இவர்களை எடை போடுவது? பெறுமதி மிக்க இலட்சக் கணக்கான மனித உயிர்களை, மனிதனுக்குப் பயன்படும் மற்றும் உயிரிகளையும், அத்தோடு இயற்கை வளங்களான நீர், நிலம், வளி போன்றவற்றையும் துச்சமென மதித்தல்லவா இப்படிக் கூறுகின்றனர். சத்தியசோதனையில் அண்ணல் காந்தியவர்கள் இப்படிக் கூறுகின்றாராம்: "ஏழைகள், மற்றும் பாதிக்கப்படுவோர் பக்கம் நின்றுபார்த்தால் தான் உண்மைச் சிக்கலை(பிரச்சனையை) உணரமுடியும். மேலாண்மை வாதிகளும் கைநிறைய அரச சம்பளம்(கிம்பளம்/தரகுப்பணம்) வாங்குபவர்களுக்கும் உண்மைத் தன்மை வெளிப்படுவதில்லை(உறக்கம்போல் நடிப்பவர்கள்)" என்கிறார்.

உலக அளவில் அறியப்பட்ட விஞ்ஞையர்(விஞ்ஞானி) அல்பர்ட் ஐயன்சுடின் கூறும்போது "அணுமின் ஆற்றல் பற்றியும் அதன்விளைவுகள் பற்றியும் விளக்கும் விஞ்ஞையராகிய எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிக்கமுடியாத ஒரு குமுகாயப் பொறுப்பு இருக்கிறது. அதாவது அறிவுடைய குடிமக்கள் வாழ்வுக்காகச் செயற்படுவார்களே அன்றி சாவுக்காக அல்ல" என 65ஆண்டுகளுக்கு முன்(1947) கூறினார். சுவிற்சலாந்தின் எரி ஆற்றல் அமைச்சர் டேரிலியூதர்டு "எமது குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக அணுஉலைகளை முற்றாக மூடுகின்ற முடிவிற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். அணுஆற்றலின் பயன்பாட்டுத் தேவை உள்ளதென்பதை மறுக்கமுடியாது ஆயினும் புதிய தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் அதற்கு மாற்றீடான புதிய ஆற்றலைக் கண்டுபிடிக்க முடியும்" என்கிறார். அமெரிக்க முதல்வர் தேர்தலுக்கான பரப்புரையின்போது மூதவை உறப்பினரான ஒபாமா ஆற்றல் பற்றிக் குறிப்பிடும்போது "அணுமின் ஆற்றலை எடுக்கப் பயன்படுத்தப்பட்ட அணு எரிபொருளைப் பாதுகாப்பாகக் கழிக்க வழியில்லை .அதனால் நமக்கு அணு உலைகள் மூலமான மின்சாரம் வேண்டாம்" என்றார்.

அணுஉலைக் கொடுமைகளை உணர்ந்த செர்மனி, இத்தாலி, உருசியா, சுவிற்சலாந்து, மெக்சிக்கோ, யப்பான், ஆச்திரியா, அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் அணுஉலைகளை மூடிவிட முடிவு செய்துள்ளன. இந்த அடிப்படையில் கடந்த 30 ஆண்டுகளில் அமெரிக்கா எந்தவொரு அணுமின் நிலையத்தையும் உருவாக்கவில்லை. மீனத்(பங்குனி) திங்கள் 2011இல் யப்பானின் புகுசிமாவில் ஏற்பட்ட நிலநடுக்கம், ஆழிப்பேரலையால் அணுஉலை வெடித்துப் பலலாயிரக் கணக்காணோரின் உயிர்களைக் காவுகொண்டும், பல்லாயிரவரை ஊனமுறச் செய்ததுமான அணுஉலை நேர்ச்சியின் விளைவால் அந்நாட்டரசு புதிதாகக் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருந்த 10அணு உலைகளின் கட்டுமான வேலைகளையும், இயங்கிக் கொண்டிருந்த 28 அணுஉலைகளையும் மூடிவிட்டன. ஆனாலும் அதன் கதிர்வீச்சைக் குறைத்து முழுமையாகச் செயலிழக்கச் செய்ய இன்னும் 30 ஆண்டுகள் செல்லுமென்கின்றனர் அறிஞர்கள். புகுசிமா நேர்ச்சி ஆழிப்பேரலையால் ஏற்பட்டது. ஆனால் உக்ரெயின் நாட்டு செர்னோபில் நேர்ச்சி மனிதத் தவறுதலால் ஏற்பட்டது. அணுஉலைப் பாதுகாப்பென்பது ஊகித்தலின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஊகிப்புக்களுக்கு அப்பாற்பட்டு நிகழ்வதே நேர்ச்சி என்பதை அறிவியலாளர்கள் புரிந்துகொள்வார்கள். 1994இல் இந்தியாவின "கைகா அணுக்கருஉலை(றியாக்டர்)"க்கு வட்டவடிவ வளைமாடம்(டோம்) கட்டப்பட்டபோது அது உடைந்து 120



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லெடை(தொன்) கற்காரை (கொங்கிறிட்) கலவை கீழே விழுந்தது. இது உலை இயங்கிக்கொண்டு இருக்கும்போது நடந்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும். பொதுவாக ஆசிய நாடுகளில் பொறியியலாளர்களுக்கும் கட்டுமான ஒப்பந்தகாரர்களுக்கும் இடையில் ஏற்பட்டுவிடுகின்ற கூடா ஒழுக்கம்(தரகு) காரணமாகக் கட்டுமானத்தரம் கண்டுகொள்ளப்படுவதில்லை. இயங்கிக் கொண்டிருக்கும் சில அணுஉலைகளில் பணியாளர்களின் கவனக் குறைவால் அடிக்கடி நேர்ச்சிகள் ஏற்பட்டு அதிக அளவில் கதிர்வீச்சு ஏற்பட்டதாக அணு விஞ்ஞையர் ஏ.கோபாலகிருட்ணன் வெளிப்படுத்துகின்றார். கல்பாக்கம் அணுஉலைச் சுற்றாடலில் அணுக் கதிர்வீச்சுத் தாக்கம் பற்றி ஆய்வொன்றைச் செய்ய இருந்தவேளை அதை நடுவணரசு தடுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. ஏனெனில் இதனால் பாதிப்புறுபவர்கள் தமிழர்கள் தானே என்ற மகிழ்ச்சி.

பொருளாதார மயமாக்கல், தொழில் முன்னேற்றம், உலகமயமாக்கல் என்னும் போர்வையில் பன்னாட்டு நிறுவனங்களின் முகவர்களுக்கு இலவசமாகவும், குறைந்த கட்டணத்திலும் மின்வழங்கல் நடைபெறுவதாலேயே மின்பற்றாக்குறை ஏற்படுகிறது. அரசு உற்பத்தி செய்யும் மின்சாரம் முழுவதும் மக்கள் பயன்பாட்டிற்கும், சிறு, குறுங் கைத்தொழில்களுக்கும் வழங்குவது தானே குமுக நீதிக்கான பகிர்மானமாகும். ஆனால் அரசுகளோ பன்னாட்டு முகவர்களிடமிருந்து பெறும் சலுகைகளுக்காக தம் மக்களையே புறக்கணிக்கின்றனர். இப்பன்னாட்டார் தமக்கான மின்னைத் தாமே உற்பத்தி செய்தால் மின் பற்றாக்குறை என்பதற்கு இடமேயிராது தானே.

## மின்னாற்றலைப் பெற மாற்றுவழிகள்

பொதுவாகச் சுற்றுச்சூழலை எந்த விதத்திலும் பாதிப்படையச் செய்யாத தூய்மையான, நிறைவான பசுமையாற்றல் ஆகக்கொள்ளக் கூடியனவாக: ஞாயிற்று ஆற்றல் (சூரிய சக்தி), காற்றாற்றல், கடல் அலை விசை ஆற்றல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை எந்த விதத்திலும் தீங்கிழைக்காதவை. இவற்றிற்கு அரசு முன்னுரிமை கொடுத்து செயல்வடிவம் கொடுக்கவேண்டும். மக்களின் நலன் காப்பதே ஆட்சியாளரின் கடனாகும். மக்கள் நலிவைத் திட்டமிட்டு செயற்படுத்துபவர் ஆட்சியாளரே அல்லர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடங்குளம் அணுஉலை

நேர்ச்சி என்பது சொல்லிக்கொண்டு வருவதில்லை.

> ***ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று***
>
> ***சூழினும் தான்முந் துறும்*** (கு.380)

என்பார் செந்நாப்போதர் வள்ளுவனார். அதாவது உலக இயற்கையை விஞ்சிய பெரிய வலிமையான எவையுமில்லை, மற்றொன்று அதனை முந்தவேண்டுமென்று எண்ணு முன்பே அது முன்வந்துவிடும். (நிலநடுக்கம், ஆழிப்பேரலை, சூறாவளி, வெள்ளப் பெருக்கு எரிமலை வெடிப்புப் போன்ற இயற்கைச் சீற்றங்கள்). நேர்ச்சி நினையாவேளை மனித ஆற்றல் எவற்றாலும் தடுத்து நிறுத்த முடியாதவொன்று. இவ்வியற்கைச் சீற்றத்தால் அழிபவர் ஓரறிவு முதல் ஆறறிவர் வரை சிலவாயிரம். இதன்போது மனிதனால் மனித அழிப்புக்கென்றே உருவாக்கப்படுகின்ற செயற்கை வளங்களென்று நினைப்பவற்றால் ஏற்படும் செயற்கை அழிப்புக்களோ பல இலக்கமாகும். இதை ஆட்சியாளர்களோ, அரச, தனியார் துறைசார் அறிஞர், வல்லுநர்களோ கவனத்தில் கொள்வதில்லை.இவர்களின் கூற்றுக்கள் வள்ளுவனாரின் புல்லறிவாண்மைக் கொப்பக் காணமுடிகிறது.

> ***உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்***
>
> ***தலகையா வைக்கப்படும்*** ***(கு. 850)***

இந்தியாவின் புகழ்பெற்ற ஏவுகணை பொறிஞர் கூறும்போது: “பேரரசன் கரிகாலன் முடியாதென்று நினைத்திருந்தால் தமிழ்நாட்டில் கல்லணை கிடையாது. வெள்ளமென வரும் காவிரியால் கல்லணை உடைந்து மக்களின் அழிவுக்குக் காரணமாகிவிடும் என்று கருதியிருந்தாலோ, நிலநடுக்கத்தால் ,கல்லணை உடைந்துவிடுமென்று நினைத்திருந்தாலோ கல்லணையைக் கட்டியிருக்க முடியாது” என ஒப்பீடு செய்கின்றார். ஒரு பெரிய அறிவியல் அறிஞன், இந்திய மக்கள் தலைவராய் இருந்த இவர் எந்தப் பொருத்தப்பாடும் இல்லாத ஒப்பீட்டைச் செய்வதால் இவரை வள்ளுவனாரின் புல்லறிவாளரோடு சேர்த்துக்கொளளலாமா?. அணுஉலையின் கால எல்லை 30 ஆண்டுகள். கல்லணை 1900 ஆண்டுகளுக்கு மேலாக மண்ணின் மைந்தர்களை வாழவைத்துக்கொண்டு இருப்பது. இயற்கைச் சீற்றத்தால் அணை உடைந்தாலும் 10 பேரோ, 100 பேரோ, அல்லது 1000 பேரோ இறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிடலாம். வீடுகள் நிலங்கள் பாதிப்படையலாம். பாதிப்புக்கள் ஓரிரு ஆண்டுகளில் செப்பம் செய்யப்பட்டுவிடும். உடைப்பெடுத்த அணையும் சீர்செய்யப்பட்டுவிடும். ஆனால் ஒரு அணுஉலையில் மனிதத் தவறால், இயற்கைச் சீற்றங்களான நிலநடுக்கம், ஆழிப்பேரலை போன்றவற்றால் ஏற்படும் நேர்ச்சியானது எத்தனை இலக்கம் உயிர்களைக்காவு கொள்ளும், எத்தனை இலக்கத்தை ஊனமுறச் செய்யும் ,எத்தனை இலக்கம் சதுரப் பரப்பளவை எரித்து சாம்பராக்கும் , அணுக்கதிர் வீச்சின் தாக்கம் பல்லாண்டுகளுக்குத் தொடருமே. இயங்கிக் கொண்டிருக்கும் அணுஉலைகளிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சினால் காலப்போக்கில் பல ஆயிரம் பேர் அரத்தப் புற்றுநோய்க்கு ஆளாவார்களென ஆய்வுகள் செப்புகின்றன. இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்கா யப்பானின் குரோசிமா, நாகசாக்கியில் வீசிய அணுக்குண்டின் ,கொடுமை, கொடூரம் இன்றவரை தொடர்கின்றது.

கடந்த பல நூற்றாண்டுகளுக்கு மேலாக வைதீக வேதவாரியரின் மேலாண்மையின் கீழ் இயங்கும் இந்திய நடுவணரசும், தமிழ்நாட்டைச் சுற்றியுள்ள தமிழ்க் காழ்ப் புணர்வு கொண்ட கன்னட, தெலுங்கு, மலையாள, துளு வடவர்களுமாகக் கரவாகத் திட்டமிட்டுத் தமிழை, தமிழனை அழிக்கச் செயற்ப்பட்டு வருகின்றனர். இதன் வெளிப்பாடே கல்ப்பாக்கம், கூடங்குளம் அணுஉலைகள். இதனால் அழிய, பாதிக்கப்படப் போகின்றவர்கள் தமிழ்நாட்டுத் தமிழர்களும், தமிழன் கால்வாய் மன்னார்க் குடாவை வாழ்விடமாகவும், தொழிலிடமாகவும் கொண்ட இலங்கைத் தமிழருமாவார். அணுஉலைகள் கடற்கரையை அண்மித்த பகுதிகளிலேயே கட்டப்படுகின்றன. அந்த வகையில் இது ஆந்திராவின் நாகார்ச்சுன சாகரில், அல்லது கர்நாடகாவின் கைக்கா அல்லது கேரளாவின் பூதகான்கெட்டில் அமைப்பதாகவே இருந்ததாம். ஆனால் இம்மாநில மக்கள் திரண்டு எதிர்ப்புக் காட்டியதால் தமிழ்நாட்டின் கூடங்குளத்தில் அமைக்க தமிழ்நாட்டரசு ஒப்புக்கொண்டதன் மூலம் அவர்கள் தமிழ்மண்ணின் அசல் வித்தாக இல்லாததே காரணமெனலாம்.

தமிழனின் நாளாந் வாழ்வுக்கே நீர் வழங்க மறுத்து(கர்நாடகா ---காவேரியாறு, கேரளா ---முல்லைப்பெரியாறு .ஆந்திரா---கிருச்ணா, பொண்ணை), நேர்ச்சி ஏற்பட்டால் அழியப்போவது தமிழரும், தமிழ்நாடும் தானே என்றும் அதுவரை உற்பத்தி செய்யப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னாற்றலில் தமக்குரிய பங்கைப் பெற்றுக்கொள்ளும் தம்நல நோக்கோடும் இத்திட்டத்திற்கு நிதி உதவியளிக்க முன்னிற்கின்றனர். இவர்களுக்குப் பக்கபலமாகவும் பின் புலமாகவும் நடுவணரசு செயற்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் மொத்த மின்னாற்றலில் அணுமின்னாற்றல் நாலு (4) விழுக்காடு மட்டுமேயாம். கடந்த 15 ஆண்டுகளாக இதுவே நிலை. அத்தோடு எதிர்பார்க்கும் அளவிற்கு அணுஉலைகள் மின்னை உற்பத்தி செய்யவில்லை எனவும் கூறப்படுகிறது. குறிப்பாக கல்பாக்கம் உலையிலிருந்து 40 விழுக்காடு மின்னையே உற்பத்தி செய்ய முடிகிறதாம். இதை இயங்க வைக்கவும் 30--50 பன்னிலக்கம் (மெகாவற்)அலகு வலு தேவைப்படுகிறதாம். பயன்பாடு இவ்வளவு குறைவாயிருக்கும்போது கொலைக் கொல்லியான இந் நச்சுப்பாம்பை மடியில் கட்டிச் சுமக்க வேண்டுமா? அணுஉலை செயற்படத் தொடங்கும்போது அதைச்சுற்றி 30 அயிரிமாத்திரி(கி.மீ) சுற்றளவுள் அடங்கும் ஊர்களிலிருந்து மக்களை வெளியேற்ற வேண்டியும், 75 அ.மா(கி.மீ) நீளமான கடற்கரையில் வாழும் மீனவர்களும் பாதிப்புக்கும் உள்ளாவார்கள். அணுஉலையிலிருந்து வெளியேற்றப்படும் கதிர்வீச்சினால் கடலும், கடற்கரை வாழ்விட மக்களும் பல நோய்களுக்கு ஆளாகலாம். அத்தோடு உலைகளைக் குளிரவைக்கும் கதிர்வீச்சுக் கலந்த நீரையும், உப்பகற்றும் ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் உப்பு, சேறு, வேதியற்(இராசயன) பொருட்கள் கடலிலேயே கொட்டப்படும் இதனால் தமிழன்கால்வாயில்(பார்க்கு நீரிணை) உள்ள மன்னார்க் குடாக்கடல் உயிரினங்கள் கதிர்வீச்சுக்குள்ளாகி பேரழிவைச் சந்திக்கும், மீன்வளம் குன்றும். கடற்றொழிலையே தம் வாழ்வாகக்கொண்டு வாழும் பல்லிலக்கம் பேர் தொழிலிழந்து வறுமையில் வாட நேரிடும். இக் கடலுணவை உண்போரும் பலவித கதிர்வீச்சு நோய்களுக்கு உள்ளாகலாம்.

இந்த அணுஉலையிலிருந்து வெளியேறும் அணுக்கழிவான புளுட்டோனியம் அணுக்கொலைக் கருவிகளைச் (அணுக்குண்டு போன்றன) செய்யப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு தேக்கரண்டி புளுட்டோனியத்தின் மூலம் பல்லாயிரம் பேருக்கு புற்றுநோயை எற்படுத்த முடியுமெனக் கூறுகின்றனர் நடுநிலையான அறிஞர்கள். பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் கதிர்வீச்சு நிரம்பிய புளுட்டோனியக் கழிவுகளைத் தேக்கி வைப்பதாலும் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுசுழற்ச்சி செய்வதாலும் காற்று, நிலத்தடிநீர், நீர் மாசடையும். விளைநிலங்கள், பயிர்கள், கால்நடைகள், அவற்றிலிருந்து பெறப்படும் பால், இறைச்சி, காய்கறி, பழங்களென்பன நச்சுணவாக மாறுகிறது. அணு உலைகளிலிருந்து வெளிவரும் நீராவி, புகை மூலமும், கடல் நீர் மூலமும் செந்நீலியம் (அயோடீன்), ஓரிமம் (ஐசோரோப்புக்கள்) போன்ற கதிர்வீச்சு நிறைந்த பொருட்கள் மனித உடலில் அன்றாட உணவில், குடிநீரில், மூச்சில், வெயர்வையில் கலப்பதால் மனிதத் தலைமுறையினர் நீண்ட காலத்திற்குப் பாதிப்படைவர். எல்லா வகையான பாதுகாப்பு நிறைந்த அணுஉலை அமைக்கப்பட்டாலும் அவ்வணு உலையிலிருந்து வெளியேறும் அணுக்கழிவை அகற்றுவதற்கான பாதுகாப்பான வழிமுறைகளை எந்த நாடும் இதுவரையில் கண்டுபிடிக்கவில்லை என்கின்றனர். ஒரு அணுஉலையின் கால எல்லை 25--30 ஆண்டுகள், அதன் கட்டுமானப் பணிகளுக்கு 15 ஆண்டுகள், அணுஉலையிலுள்ள எரிபொருளை பாதுகாப்பாகப் பிரித்தெடுக்க 5ஆண்டுகளும், உலையைப் பிரிப்பதற்கு 10--15ஆண்டுகளும் தேவையாம். ஆனால் அணுஉலையை மூடி கற்காரம் (கொங்கிறீட்) கொண்டு வளைமாடம் (டோம்) கல்லறைபோல் (சமாதி) கட்டலாமென்றும், அப்படிக் கட்டினாலும் அதிலுள்ள கதிரியக்கம் தணிய 130 ஆண்டுகள் ஆகுமென்றும், அதன்பின் பிரிப்பது பாதுகாப்பானதென்றும் கூறப்படுகிறது.

அணுஉலை ஏதோ ஒரு காரணத்தால் வெடித்தால் 140 அ.மா(கி.மீ) தொலைவுவரை வசிக்கும் பல இலக்கம் மக்களும், கால்நடைகளும், பலகோடி பெறுமதியான சொத்துக்களுக்கும் ஏற்படக்கூடிய இழப்புக்களை இங்கிலாந்து நாட்டு "சைடுவெல்" அறிக்கை வெளிப்படுத்தி உள்ளதாம். அதாவது நேர்ச்சி நடந்த இடத்திலிருந்து 140 அ.மா. தொலைவு தூரம் வரையுள்ள குடியிருப்பாளர்களை முதலில் வெளியேற்ற வேண்டும். நேர்ச்சிக்குப் பின் 77 அ.மா. தூரத்திற்குள் 20 ஆண்டுகளுக்கு முன்னும், 115 அ.மா. தூரத்துள் 5 ஆண்டுகளுக்கு முன்னும், 140 அ.மா. தூரத்துள் ஓராண்டுக்கு முன்னும் மீள்குடியேற முடியாதென்கிறது. அணுமின் உலையிலிருந்து பெறக்கூடிய மின்னாற்றலைவிட பேரிடரையும், உயிழிப்புக்களையும், தொடர்ந்த கதிரியக்க நோய்களையும் விளைவிக்கக் கூடியது அணுக்கழிவு நச்சாகும். "கைகொண்டு கண்களைக் குத்தவும் வேண்டாம், கண்விற்றுச் சித்திரமும் வேண்டாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுச்சூழல் பாதுகாப்பென்பது மனித நேயத்துடன் கூடிய மனித அழிவை, இயற்கை வளங்களான ஓரறிவு முதல் ஐயறிவு வரையிலான உயிர்களையும், ஐம்பூதங்களான நீர், நிலம், வெளி, வளி, தீ போன்றவற்றையும், அவற்றின் இயற்கைச் சமநிலையைச் சீரழிக்கும் அத்தனைச் செயற்பாடுகளையும் தவிர்த்து மாசற்ற சூழலை ஏற்படுத்துவதேயாகும். இக் கருதுகோளை நடுவகப் பொருளாகக் கொண்டு மனிதநேயமும் மனித குமுகாயத்தின் முன்னேற்றத்தில் நாட்டமும் கொண்ட நல்லுள்ளம் படைத்தவர்களால் அமைக்கப்பெற்றதே "நிலைபேண் அபிவிருத்தி ஆணையக"மாகும். இது உலகநாடுகள் ஒன்றியத்தின் (ஐ.நா) ஒரு பிரிவேயாகும். இதன் உள்ளார்ந்த கருப்பொருள் அழிவை ஏற்படுத்தாத முன்னேற்றம் என்பதே. இதில் இலங்கை, இந்தியா உட்பட 100 இக்கு மேற்பட்ட நாடுகள் உறுப்புநாடுகளாக உள்ளன. முதன்முதலில் சுவீடனின் ச்ரொக்கோம் நகரில் 1972இல் இவ்வாணையத்தின் மாநாடு கூட்டப்பெற்றது. இதன் மூன்றாவது மாநாடு கடந்த ஆடவை(ஆனி)த் திங்கள் 20---22 நாட்களில் பிறேசிலின் றியோ நகரில் நடைபெற்றது. இம்மாநாடுகள் "சுற்றாடல் பாதுகாப்புடன் கூடிய அபிவிருத்தி" என்னும் தொனிப்பொருளில் பல செயற்றிட்டங்களுடன் நடைபெறுகின்றன. இங்கு ஆற்றல்(சக்தி), மாவாரிகள்(சமுத்திரங்கள்), நீர், உணவு, தொழில்கள், நகரங்கள், பேரழிவுகள்(அனர்த்தங்கள்), பற்றி ஆராயப்படுகின்றன. ஆனால் சில அரசுகள் மனித குமுகாயத்தின் முன்னேற்றம் அல்லது அபிவிருத்தி என்னும் போர்வையுள் புகுந்து சுற்றாடல் அழிவை உருவாக்கி அதன்மூலம் உலக ஓட்டுமொத்த மக்களையும் அழிக்கும் முனைப்புடன் செயற்படுகின்றன அல்லது தாம் காழ்ப்புணர்வு கொண்ட மக்களை அழிக்க கரவாக மறைமுகமாக முயல்கின்றனர்

வளர்ச்சியடைந்த வல்லரசு நாடுகளும், வளரும் நாடுகளும், ஏன் வறியநாடுகளும் அன்று மறுமை (மோட்சம்), மேலுலகம்(பரலோகம்) என்னும் மாயையில் விழுந்து ஒரு சுரண்டும் இனத்திற்கு(வர்க்கம்) அடிபணிந்த இன்னொரு இனம்போல இன்று உலகமக்கள் அனைவரையும் உலகமயமாக்கல், பொருளாதாரமயமாக்கல் என்னும் கூச்சலோடு ஒவ்வொரு நாடும் தன்தன் அளவில் அரசியலாளர்களும், தொழில் முகவர்களும் முதலைகளும், தரகர்களும், கறுப்புச் சந்தைக்காரர்களும் தற்குறிகளாக தம்நாட்டு மக்களின் முதலை, வளங்களைச் சூறையாட கங்கணங்கட்டி நிற்கின்றனர். மனிதநேயமற்ற சுரண்டலையும், ஊழலையும் தலைவிரித்தாடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளனர். இவர் நோக்கு பணமே. உலகில் பல மனிதநேய அமைப்புக்களையும், ஆணையங்களையும் உருவாக்கியதில் என்ன பயன். இந்த "நிலைபேண் முன்னேற்றம்(அபிவிருத்தி)" மாநாட்டின் இறுதியில் "நாம் விரும்பும் எதிர்காலம்" ஆவணம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாம். இன்று இவ்வாணயங்களெல்லாம் மனிதநேய முரண்பாட்டாளர்களால் முற்றுக்கையிடப்பட்டு அவர்களின் ஆட்சிக் கொட்டகைகளாக மாற்றப்பட்டுள்ளன.ஏனெனில் இந்மாநாட்டின் தீர்வு இந்நாடுகள் தற்பொழுது கொண்டுள்ள செயற்திட்டங்களுக்கு ஏற்றவாறு நிறைவேற்றுவதையே வலியுறுத்துகிறது. ஆனால் இம்மாநாடுகள் நிலைபேண் முன்னேற்றம் பற்றி உறுப்புநாடுகளின் பொறுப்புடைமையை வலியுறுத்தவில்லை. மேலோட்டமாக தேசிய,உலக மட்டத்தில் மக்களாட்சி(யனநாயகம்), நல்லாட்சி, சட்டவாட்சி, இருக்கவேண்டுமென்பதும். நிறுவனங்களின் வினைதிறன், வெளிப்படைத் தன்மை, வகைகூறும் தன்மை, போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கவேண்டுமாம். இவையெல்லாம் உலக மக்களை ஏய்ப்பதற்கான "ஊருக்கு அறிவுரை(உபதேசம்) உனக்கல்ல" என்பதுபோன்றதே. அதாவது அணுக்குண்டு, அணுஉலை, ஏவுகணை, கொத்துக்குண்டு, எரிகுண்டு, வேதியல்(இரசாயண) படைக்கலன்கள், நச்சுவளிக்குண்டு போன்ற மனித அழிப்புக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்யுங்கள், பயன்படுத்துங்கள் என்பது தானே இதன் மறைபொருள்.

இரண்டாம் உலகப்போருக்கு முன் பலநாட்டு ஆட்சியரும் தாம் நினைப்பதை வல்லவன் பலவான் என்னும் நோக்கில் செயற்படுத்தினர். மண்ணின் மைந்தரான தொல்குடிமக்களைக் கொடூரமாகக் கொன்று குவித்தும், பாலியல் வல்லுறவினூடகவும் அழித்தொழித்து அவற்றைக் கையகப்படுத்தி தம் மேலாண்மையை நிலைநிறுத்தி தொல்குடிகளின் நாகரிக வரலாற்றுப் பண்பாட்டு மதிப்புக்(விழுமியங்)களையும் அழித்தனர். அவ்வாறு உருவெடுத்த நாடுகளே அவுச்திரேலியா, அமெரிக்கா, இந்தியா, பாகிச்தான், இலங்கை, போன்ற பலநாடுகள். அத்தோடு நிறுத்தி விடாமல் தொடர்ந்தும் தொல்குடியினரின் நிலங்களைக் கையகப்படுத்தியும், அவர்மொழி, பண்பாட்டு மதிப்புக்களை கரவாகவும், வெளிப்படையாகவும்நாளொரு வண்ணமும், பொழுதொருமேனியுமாக சிதைத்து அழித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்கு பட்டம், பதவி, பணத்தையே குறிக்கோளாகக் கொண்ட "வெந்ததைத் தின்று விதிவந்தால் போவோம்" என வாழும் கொள்கையுடைய தற்குறிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைபோகின்றனர். இதுதான் இன்றைய உலக நடப்பியல். உலக மக்களின் வரிப் பணத்தையும் அவர்தம் இயற்கை வழங்கிய வளங்களையும் ஏப்பம்விட இயங்கிக்கொண்டு இருப்பவையே இந்த உலகநலம், மனிதநேயம் பேணுவோர் எனக்கூறிக்கொள்ளும் இந்த ஆணையங்கள். இவை எவையுமே மனிதநேயமற்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தவில்லை. இவற்றோடிணைந்த உறுப்பு நாடுகள் செய்யும் இழிசெயல்களுக்கு ஒத்தூதுவதும், இணைந்து அழிப்புவேலைகளுக்குத் துணைபோவதும்தான் இன்று காணக்கிடைக்கும் காட்சி. இதுவே இந்த நிலைபேண் முன்னேற்ற ஆணையத்தின் நிலைப்பாடுமாகும்.

***அணுவுலைக் கூடம் அழிவுலைக்கூடம்***
***அணுவணு வாக அழிக்கும்--மணும்நீர்***
***வளிவெளி யெங்கும் வறக்கும் உயிர்ப்பின்***
***துளிர்ப்பும் கருக்கும் நெருப்பு!***

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர நாடு கேரளநாடானது

**(ஒரு வரலாற்று மீள்பார்வை)**

**ஆ**ரியர் நாவலம்தேயமாம் இந்தியாவுட் புகுமுன் அமிழ்ந்து போன குமரிதொடக்கம் இமையம் வரை தமிழர் ஆண்டிருந்தனர். தொல்காப்பியர் காலத்தில் இது வடக்கே வேங்கடமும் தெற்கே குமரியும் கிழக்கு மேற்கு கடலையும் எல்லைகளாகக் கொண்டிருந்தன எனலாம். "இந்தியநாட்டின் தொடக்க காலமக்கள் நாகரென்றும், இவர் தாய் மொழி தமிழென்றும், ஆரியர் இந்தியாவினுள் புகுந்த போது எதிர்த்து நின்றவர்களென்றும், இவர்களுடன் இணைந்து நின்றவர்கள் மேலானவர்களாகவும், வைதீகவேத மரபை,அவர்தம் பண்பாட்டை எதிர்த்தவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்றாக்கி பலசாதிக்கூறுகளாகப் பிரித்து ஊர்மூலைகளில் வாழ ஒதுக்கி விட்டார்களென்றும்" கூறுவார் "இந்தியச் சட்டவல்லுநர் அம்பேத்கார்" அவர்கள்.தாழ்த்தப்பட்ட சிறுபான்மை இனமக்களின் வரலாறும் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வந்தது.இவர்களின் வருகை வடபுலத்தில் மொழியையும்,ஆட்சியையும் இழக்க வழிசமைத்தது.

இன்று தமிழ்மொழி வாழும் பைந்திரமாக அதன் வடக்கெல்லை திருத்தணி (திருப்பதி)யில் தெலுங்கும்,வடமேற்கில் கன்னடமும்,மேற்கில் மலையாளமுமாக தமிழ் மண்ணை விழுங்கிவிட எஞ்சியிருப்பதே இன்றைய தமிழ்நாடு.அன்று மூவேந்தரான சேர, சோழ,பாண்டிய மன்னரின் ஆட்சியில் அடங்கியிருந்தது. முத்தமிழை,ஒழுக்கவியலை, வரலாற்றை,பெண்தெய்வ வழிபாட்டை மீண்டும் உறுதிசெய்து தமிழைத் தமிழனை உலகின் உச்சிக்கே கொண்டுசென்ற தமிழிலக்கியம் சிலப்பதிகாரத்தை யாத்த இளங்கோ அடிகளையும்,இமயத்தில் கல்லெடுத்து வடபுலத்து மன்னர் கனக வியாசரைக் கொண்டு சுமக்கச்செய்து கொணர்ந்து கற்புக்கரசி கண்ணகிக்குத் தன் மண்ணிலேயே கோயிலெடுத்த மாவீரன் தமிழ்மன்னன் சேரன் செங்குட்டுவனையும் பெற்றெடுத்த தமிழ் மண்தான் இந்தச் சேரநாடு. இன்று இச்சேரநாடு கேரளநாடாய் மாற்றப்பட்டு விட்டது அதன் மொழி மலையாளம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் பிழைப்புத்தேடி சேரநாடுவந்த நம்பூதிரிப் பிராமணர்கள் அங்கு நிலவிய சாதியப்பகுப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதீகவேதமரபுமேலாண்மை போன்றவற்றைத் தமதாக்கிக் கொண்டு அங்கு தம்மை நிலைநிறுத்தவும் தமிழை அழித்து ஓரங்கட்டவும் வழிசமைத்தனர்.இக்காலகட்டத்தில் தமிழ் மண்ணில் கலப்பின சேர,சோழ, பாண்டியர் வைதீகவேதமரபு சார்ந்து நின்றதால் தனித்தமிழ்க் காவலரான புலவர் மரபு அற்றுப்போய் கி.பி.10 ஆம் நூற்றாண்டளவில் வடசொற்கள் வகைதொகையின்றித் தமிழில் புகுந்து தமிழைக் கலவை மொழியாக்கத் தொடங்கின. இதையே மணிப்பவள நடையென்றனர்.

***இடையே வடவெழுத் தெய்தின் விரவியல் ஈண்டெதுகை***
***நடையேதுமில்லா மணிப்பிரவாள நற்றெய்வச் சொல்லின்***
***இடையே முடியும் பதமுடையதாம்*** - (வீர.அலங்.40)

என்று புத்தமித்திரனின் புன்னூல் வீரசோழியம் நுவலுமளவிற்கு தமிழ் தாக்குண்ட நிலையை புரிந்துகொள்ள முடியும்.

பண்டை வட்டெழுத்தினிடத்தில் தேவநாகரி எழுத்தும் கிரந்த எழுத்தும் இடம் பெற்றது. கி..பி.12 ஆம் நூற்றாண்டளவில் மணிப்பிரவாள இலக்கியங்களான வைசிகதந்திரம்,அனந்தபுர வர்ண்ணனம் போன்றன தோன்றின இதை அடிப்படையாகக் கொண்டே கி.பி.14 ஆம் நூற்றாண்டளவில் மணிப்பிரவாள(மணிப்பவள) இலக்கணமான லீலா திலகம் யாக்கப்பெற்றது. சேரவேந்தர் குடி அற்றுப்போனபின் நாயர் குடி ஆட்சியைப் பிடித்துக்கொண்டு முற்றுமுழுதாய் வைதீகவேத மரபோடு ஒன்றித்து அடிமைப்பட்டு வெள்ளாளரோடு சேர்ந்துகொண்டு நம்பூதிரிப் பிராமணர்க்குக் கட்டுப்பட்டு சேரநாட்டுத் தமிழர்களைத் தீண்டத்தகாதவர்களாக, கீழ்நிலைச்சாதி(மநுத்தீநெறி வழி)களாக ஆக்கி அவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினர். சேரநாட்டுச் செந்தமிழும் கொடுந்தமிழாகி தெலுங்கு கன்னடமொழிகளிலும் கேடாகச் சிதைந்து மணிப்பிரவாள அதாவது இன்று மலையாளமொழியாக வழங்கி வருகிறது. நம்பூதிரிகளும் அரசர்களை மநு(த்தீ)நெறிப்படி ஆளவேண்டுமென வற்புறுத்தி தம்மேலாண்மையின் கீழ் வைத்து ஆட்டிப்படைத்தனர். மன்னரும் மறுமை(மோட்சம்) இன்பம்பெற தமிழை(தீட்டுமொழி)ப் புறக்கணித்து புதிதாக உருவாகிய மொழி உயர்வானதெனக் கருதி நம்பூதிரிகளின் சொற்படி ஆட்சி செலுத்தினர். புதியமொழியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய இனமும்(நம்பூதிரி,நாயர்,வெள்ளாளர் கூட்டு) செல்வாக்குப் பெற்றன. தமிழர் தாழ்வுற்று வாழ்விழந்தனர்.

கேரளத் திருவிதாங்கூர்(சமச்தானம்) ஆட்சிப்பகுதி புதிய மன்னர்களின் ஆட்சியில் தமிழ் மக்களின் நிலமை வற்றாத கண்ணீர்க்கடலாகியது. அவர்கள் முகம்கொடுத்த கொடுமைகள் சொல்லில் அடங்காதவை. தெய்வத்தை முன்னிறுத்தி அரசரைக் கொண்டு மதச்சடங்குகளும்,வேள்விகளும் செய்ய நம்பூதிரிகள் தூண்டினர். இவற்றில் கலந்துகொள்ளும் நம்பூதிரிப் பிராமணர்க்குப் பெருமளவு கொடை(தானம்) வழங்கப்பட்டன.1949இல் அரசரின் எடையளவு(துலா புருச தானம்)பொற்காசுகள் பிராமணர்க்கு வழங்கப்பட்டது.அரசசெலவிலேயே பிராமணர்க்கு உணவு, தங்குமிடவசதி ஆண்டுமுழுவதும் வழங்கப்பட்டது. இவ்விடத்தை ஊட்டுப்புரை என்றனர். நம்பூதிரிகள் தமிழரின் நிலங்களை கைப்பற்றும் நோக்கோடு திருவிதாங்கூர் ஆட்சிப்பகுதியை பத்மநாபசுவாமி கோவிலுக்குக் கொடையாக வழங்க அரசை வற்புறுத்தினர். அதன்படி மன்னர் மார்த்தாண்ட வர்மா 1750 ஆம் ஆண்டு தைத்திங்களன்று அவரது உறவினர், அமைச்சர்,பிராமணர் முன்னிலையில் திருவிதாங்கூர் ஆட்சிப்பகுதி முழுவதையும் பத்மநாப சுவாமி கோவிலுக்கு அன்பளிப்பாக வழங்கினார். இதை யாரும் எதிர்த்தால் அது தெய்வ குற்றமாக்கப்பட்டது.இப்படித் தமிழரின் நிலங்கள்,உடைமைகள் கோவில் என்றபெயரில் அரசுக்கும்,பிராமணர்க்குமான சொத்தானது. இங்கும் வவுனியா, பாலாவி போன்ற இடங்களிலிருந்த தனியார் காணிகள் பல அரசிற்கும், பாதுகாப்புப் படையினருக்கும் உரித்துடைமையாக்கப்பட்டுள்ளது.

தமிழ் உழைப்பாளிகள் சாகடிக்கப்பட்டனர். இவர்களின் நிலங்கனைப் பறித்து நிலத்திற்கு எந்தத் தொடர்புமில்லாத நாயர், நம்பூதிரிகள், வெள்ளாளர்களுக்கு வழங்கப்பட்டது. அண்மையில் இந்தப் பத்மநாபசுவாமி கோவிலின் மறைவு (இரகசிய) அறைகள் ஐந்து திறக்கப்பட்டபோது அங்கு பல இலக்கம் கோடி பெறுமதியான பொற் (தங்கம்) கட்டிகளும்,அணிகலங்களும் வெளிக் கொணரப்பட்டன. இவையெல்லாம் தெய்வத்தின் பெயரால் மக்களிடமிருந்து பிடுங்கப்பட்ட அரசனுக்கும்,நம்பூதிரிகளுக்கும் ஆனது. அங்கு இன்னுமொரு மறைவு அறை இருப்பதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையும் திறக்கவேண்டும் என்றும் கேரள முதல்வர் கோருகின்றார். ஆனால் அதற்கு அரசரும்,நம்பூதிரிகளும் உடன்பாடில்லை அப்படி இல்லையெனத் திறந்தால், அறையைத் திறப்பவரும்,அவரின் தலைமுறையினரும் ஒட்டுமொத்தமாக அழிந்து விடுவார்களாம். இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் பகுத்தறிவில்லா மூடத்தின் வெளிப்பாடுதான்.

மக்களாட்சியில், பகுத்தறிவு, அறிவியல் மிக்க இந்தநாளிலும் அதே மூடத்திற்கு முதலிடநிலை என்றால் வைதீகவேத மேலாண்மையையும், அதற்குப் பக்கபலமாயுள்ள அரச சார்பினரையும் என்னசொல்வது. இந்த வல்மேலாண்மையிலிருந்து மக்கள் எப்போ விடுபடப்போகின்றனர். இயற்கைக்குத்தான் வெளிச்சம். இன்று தமிழ்நாட்டின் திருநெல்வேலிப் பகுதியில் வாழும் அனேகர் திருவிதாங்கூர் பகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்களே. ஒருகாலத்தில் அங்கு அரசுசெய்த நாடார் சமுகமும் இக்கொடுமைகள் கண்டு பயந்து தம்மையும், தம்குடும்பங்களையும் காப்பாற்ற தமிழ்நாட்டின் வேறுபகுதிகளுக்குத் தப்பியோடினர்.இப்படி நிலங்களையும், உடைமைகளையும் இழந்து மறைவிடம் தேடி ஓடிய தமிழர் கடுமையான வறுமையையும், பஞ்சத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மலை அடிவாரங்களிலும், காடுகளிலும் பயிர்செய்து பிழைப்பு நடத்தினர். இதைப் பொறுக்காத மேல் சாதியினர் அறுவடைக்காலங்களில் காட்டில் புகுந்து அறுவடை செய்யப்பட்ட தவசங்க (தானியங்க)ளை பறித்துக் கொண்டும், அவ்வுழைப்பாளிகளைப் பிடித்துக்கொண்டும் வந்து அவர்களைச் சிறைப்படுத்தி அவர்களுடன் சாரைப் பாம்புகளையும் விட்டுத் துன்பப்படுத்தி பயமுறுத்தி அவர்களின் சொத்து,உடைமைகளை எழுத்துமூலம் பறிமுதல் செய்தனர்

நம்பூதிரிப் பிராமணர், நாயர், வெள்ளாளரின் கைப்பொம்மைகளாக திருவிதாங்கூர் அரசு இவ்விதமான மனிதநேயமற்ற செயல்களைத் தமிழர் மேல் திணித்தது. திருவிதாங்கூர் அரசில் சொத்துவரி கட்டுவோருக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை இருந்தது. தூரநோக்குச் சிந்தனையோடு தமிழர்களின் சொத்துக்களை துன்புறுத்திப் பறித்துக் கொண்டதால் தமிழர்கள் அங்கு தமது அடிப்படை மனித உரிமையாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களிக்கும் உரிமையை இழந்தார்கள். இது இலங்கை ஆங்கில அரசிடமிருந்து விடுதலைபெற்றபொழுது பெரும்பான்மையின தலைமை அமைச்சராய் வந்த அமரர்.டி.எசு.செனநாயக்கா அவர்கள் துாரநோக்குச் சிந்தனையோடும், தமிழர்களைக் கூறுபோடும் முகமாகவும், தமிழரின் வாக்குக்களை குறைக்கும் நோக்கோடும் பல இலக்கம் (இலட்சம்) குறிஞ்சிவாழ் தமிழர்களின் வாக்குரிமையை பறித்தசெயலுடன் ஒப்புநோக்கத்தக்கதாகும். இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற 1948 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வந்த அரசுகள் தமிழர்களின் வாழ்விடமாயிருந்த வடகிழக்கு மாகாணங்களில் (கல்லோயா, அம்பாறை, கொக்கிளாய், நாயாறு, கந்தளாய்) போன்ற இடங்களில் நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை முதலில் உண்டுபண்ணினர். பின் காலத்திற்கு காலம் உருவான இன வன் செயல்களின் போது தமிழர்கள் பரந்துபட்டிருந்த அநுராதபுரம், பதவியா, பொலநறுவை, பன்குளம் (மொறவேவா), மணலாறு (வெலியோயா), கென்ற் பண்ணை, டொலர் பண்ணை, மலைநாடு போன்ற இடங்களிலிருந்து வட கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர் இத்தமிழர்களின் நில புலன்களை தமதாக்கிக் கொண்டனர். இந் நடவடிக்கைகள் இன்றும் தமிழர் ஒதுங்கிக் கொண்டு செறிவாய் வாழும் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் அரச படைகள் நிலங்களைக் கையகப்படுத்துவதும் அவற்றில் தமிழர்கள், முழத்துக்கொரு கோவில் கட்டுவது போல் பெரிய படை முகாம்களை அமைப்பதும், புத்தர் கோவில்களை அமைப்பதுமாக தமது நிலைகளை பலப்படுத்துகின்றனர். அத்தோடு சிங்களக் குடியேற்றங்களையும் உருவாக்கி தமிழர்களை அவர்களின் குடியிருப்புக்களான தமிழ் பைந்திரங்களிலிருந்தே வெளியேற்றுகின்றனர். அத்தோடு வட மாகாணத்தின் நெற்களஞ்சியமாகிய கிளிநொச்சி மாவட்டத்தின் வேளாண் நீர் வழங்கு குளமாகிய இரணைமடுக்குளக்கரையிலும் குடியிருப்புக்களை அரச படையினர் உருவாக்கியதன் மூலம் இரணைமடு நீர்த்தேக்கு நீர் ஏந்து அளவு 32 அடியிலிருந்து 28 அடியாகக் குறைக்கப்பட்டதினால் பல்லாயிரம் ஏக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பயிர்ச்செய்கை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போதாததிற்கு இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டமுமாம். இது தமிழர்களை கூறுபோட்டு, முரண்பாடுகளை ஏற்படுத்தும் செயற்திட்டமாகவே வெளிப்பட்டு நிற்கிறது. 200 ஆண்டுகளுக்கு முன் தமிழர் செறிவுற்றிருந்த பைந்திரங்களான புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு போன்ற இடங்கள் இன்று பெரும்பான்மை இன மக்களின் பைந்திரங்களாக மாற்றப்பட்டுள்ளன. 500,1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தனித் தமிழ் மூவேந்தரில் ஒருவரான சேர மன்னராண்ட தமிழ் பைந்திரம் வந்தேறிக் கொடூரர்களான வைதீக வேத நம்பூதிரி, நாயர் இனத்தவர்களால் எப்படி எல்லாம் தமிழர் கொடுமைக்குள்ளாகி தம் வாழ்விடங்களைவ விட்டு வெளியேறி தமிழ், தமிழ் நாடென்று ஒன்று இருந்ததால் அதனுள் அடைக்கலமானார்கள். ஆனால் இலங்கை வாழ் தமிழர்களுக்கு என்ன நடக்கப்போகிறது??!!!................... இயற்கைக்குத்தான் வெளிச்சம். மகாவம்சத்தில், 49 ஆண்டுகள் இலங்கையை நீதிதவறா நெறிமுறையில் ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளனை போரில் கொன்று வெற்றி கொண்ட ***துட்டகெமுனு பற்றிய ஒரு கதையில் அவன் இவ் வெற்றியைப் பெற முன் தனது படுக்கையில் கூனிக்குறுகி படுத்திருந்ததாகவும், இதைக் கண்ட தாயார் ஏன் இப்படி படுத்திருக்கின்றாய் என்று கேட்டதற்கு, ஒரு பக்கம் கடலும், மறுபக்கம் தமிழும் என்னை நெருக்குவதால் (அன்று தமிழர் பெரும்பான்மையினராகவும், வலுவோடும் இருந்தனர் என்பதுவே உண்மை) எப்படி நீட்டி நிமிர்ந்து படுக்கமுடியுமென்றானாம்.*** இன்று இதே நிலைதான் தமிழனுக்கு.

அத்தோடு கீழ்நிலைச் சாதியினராக ஆக்கப்பட்ட தமிழர்கள் அரசிற்கும் உயர் சாதியினர்க்கும் அடிமைகளாக ஆக்கப்பட்டிருந்தனர். இவர்களை விற்கவோ, அடைமானம் வைக்கவோ, வாங்கவோ முடியும். 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு அடிமையின் விலை 6 தொடக்கம் 8 உரூபா வரையிலும்,ஒரு பிள்ளையின் விலை0.25சதமாகவும் இருந்தது.கி.பி.1856ஆம் ஆண்டுவரையிலும் கேரளத்தின் இரணியல்,கொல்லம்,அரிப்பாடு போன்ற இடங்களில் தமிழ் அடிமைச் சந்தைகள் இருந்தனவாம்.இந்தத் தமிழ் அடிமைகளை அடிக்க,உறுப்புக்களைக் வெட்ட, கொலைசெய்ய அவர்களின் முதலாளிமார்க்குச் சகல உரிமைகளும் இருந்தது. தாழக்குடி என்ற ஊரில் நிறைமாத மகப்பேற்றுத்தாய் மாடத்தி என்ற அடிமைப்பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலில் உழுவதற்கு மாட்டுடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டு அவள் அவ் வயலிலேயே உயிர் நீத்தாளாம். இவர்களுக்கு மரணம் மட்டுமே மன நிறைவான விடுதலையைக் கொடுத்தது. அது மாத்திரமல்லாது மநுத்தீநெறிப்படி அவர்களைக் காண்பதோ, அவர் பேச்சைக் (தமிழை) கேட்பதோ தீட்டாகக் கருதப்பட்டது. பொது இடங்களை இவர்கள் பயன்படுத்தக்கூடாது,மீறினால் அந்த இடத்திலேயே அவர்களை வெட்டிப்போட நாயர்க்கு முழு உரிமையும் வழங்கப்பட்டிருந்தது.

அவர்களின் உடையும் ஆண்களும், பெண்களும் இடுப்பிற்கு (அரை) மேலும் கால்மூட்டிற்கு கீழும் உடல் மறையும்படி அணியக்கூடாதென ஒரு அரச ஆணையுமிருந்ததாம். கி.பி.1825 இல் ஆற்றிங்கல் அரசி தன் முன் மேலாடையுடன் வந்த ஒரு பெண்மணியின் மார்பகங்களை வெட்டியெறிய ஆணையிட்டு, அவ்வாணை நிறைவேற்றவும் பட்டதென கரோசு என்ற வெளிநாட்டறிஞர் கூறுகின்றார். திருவிதாங்கூர் அரசு; ஒடுக்கப்பட்ட மக்களின் நிலம், உடைமைகளை வலிந்து கைப்பற்றியதோடு நில்லாமல் அருவருப்பு மிக்க வரித்தண்டத்தையும் விதித்தது. ஆண்கள் 16 அகவையிலிருந்து 60 அகவை வரை மீசை அரும்புவரியும், பெண்கள் 16 அகவையிலிருந்து 35 அகவைவரை மார்பு(முலை) அரும்புவரியும் கட்ட வற்புறுத்தி ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனை எதிர்த்து ஒரு பெண்மணி "சேர்த்தலை" என்னும் இடத்தில் தன் மார்பகங்கள் இரண்டையும் வெட்டி எறிந்து தன் உயிரையும் ஈகம் செய்தாள். இவ்விடமே இன்றுவரை "முலைச்சிப்பறம்பு" என்றழைக்கப்படுகின்றது. ஆனால் சில திங்கள் முன் இலங்கையில் தமிழர் வாழும் வடகிழக்குப் பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பெண்களின் மார்பகங்கள் இனந்தெரியாதவர்களால் வெட்டப்பட்டன. அத்தோடு 20 இலக்கம் பெண்கள் தங்கள் மார்பகங்களிலிருந்து அரத்தக்கொடை (தானம்)வழங்க ஆயத்தமாயுள்ளதாக ஒரு அமைச்சர் கூறியதாகச் செய்தி நாளிதழ்களில். இப்படிப்பல துன்பியல்கள்.

இந்தத் திருவிதாங்கூர் பத்மநாபசுவாமி அடிமை(தாசன்) களான மார்த்தாண்ட வர்மா அரச தலைமுறையினர் நம்பூதிரிகளுடன் சேர்ந்து ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களை மனித பலி (நரபலி---- புருசமேத யாகம்) வேள்விகூடச் செய்தார்களாம். பத்மநாபசுவாமிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வியாக திருவானந்தபுரத்தில் ஈழவர், பரவர் போன்ற பல சமுகங்களைச் சேர்ந்த 15 குழந்தைகளை நிலத்தில் உயிருடன் புதைத்தார்களாம். இங்கும் இந்துக் கோவில்களில் விலங்குகளை, பறவைகளை பலியிட முனைந்து நிற்கின்றனர். இந்த மூட முதலீடு எப்போ இந்திய இலங்கை மக்களிடமிருந்து விடைபெறப்போகின்றது. இவை கடலளவு கொடுமைகளில் கடுகளவாகும். மநுத்தீநெறியை விரித்தால் அவை சொல்லில் அடக்க முடியாதவை. இத்தகைய கொடுமை நிறைந்த திருவிதாங்கூரை "சமுகச்சாதிப் பிரிவினைகள் மலிந்த பைத்தியக்காரர்களின் கூடாரமும், கலியுகத்தின் பிராமணர் வடிவில்(ரூபத்தில்) இருக்கும் இந்தக் கொடியவர்(இராட்சதர்)களிடம் இருந்து ஏழைத் தமிழ் மக்களை இறைவன் காத்து வாழ்விப்பாராக (இரட்சிப்பாராக)" என்று மனத்துன்பத்தோடு எழுதியுள்ளார் அடிகளார்(சுவாமி) விவேகானந்தர்.

இக்கொடுமைகளிலிருந்து விடுதலை பெற விளவங்கோடு, கல்குளம், அகத்தீசுவரம்,தோவாணை போன்ற இடங்களில் செறிந்து வாழ்ந்த தமிழர் தொடர்ந்து நடத்திய போராட்டத்தின் விளைவாக குமரித்தந்தை என்றழைக்கப்பட்ட "மார்சல் நேசமணி" அவர்களின் வேண்டுதலின்படி "காமராசரவர்கள்" முதலமைச்சராயிருந்த 1956 ஆம் ஆண்டில் குமரி மாவட்டம் என்னும் பெயரோடு இவ்விடங்கள் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டன. ( முனைவர்.யி.ஐசக். அருள்தாசின் தென்னெல்லைக் காவலன் நேசமணி என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது). கொடூர இனவழிப்பு,மொழியழிப்பு, சொத்தழிப்பு மூலம் உலகின் உயர் தமிழ் இலக்கிய வளத்தை உருவாக்கிய சேரச் செந்தமிழ்மண் இன்று மலையாளமொழி பேசும் கேரளநாடு. இன்று உலகில் மார்தட்டி நிற்கும் பல நாடுகள் இவ்வழியில் உருவானவைதான்.

***வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறலாகச் சாதியம்.

**சா**தியக்கொடுமை அல்லது தீண்டாமைக் கொடுமையினால் உலகம் முழுவதும் 26 கோடிமக்கள் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளதாக உலக நாடுகளின் ஒன்றிய(ஐ.நா) மனித உரிமைகள் ஆணையம் வெளிப்படுத்தியுள்ளது. இது குறிப்பாக இந்திய நேப்பாள நாடுகளையே அடிப்படையாகக் கொண்டதாகக் கொள்ளப்படலாம். இந்துத்துவம் வல்மேலாண்மை செலுத்தும் நாடுகள் இவைதாம். இலங்கைத்தீவிலும் தமிழர் நடுவில் இந்துத்துவ மேலாண்மை இருந்தாலும் அது முற்றுமுழுதான வைதீகப் பிராமணிய மேலாண்மையாய் இல்லாததினாலும் இலவசக் கல்வியூடாகவும் தொழில் வாய்ப்பில் இலங்கையரசு இன (சிங்களம்,தமிழ்)அடிப்படையில் வழங்குவதாலும் தமிழ் பைந்திரங்கள் (பிரதேசம்) தவிர்ந்த மற்றைய இடங்களில் எந்தவித பாகுபாடும் காட்டப்படாததினால் வைதீகவேத மரபு, மநு(த்தீ) நெறி, பகவத்கீதை சொல்லுகின்ற தீண்டாமைக்கொடுமைகள் இங்கு கைக்கொள்ளப்படவில்லை. இங்கு சனாதன வைதீகத்திற்கு முண்டுகொடுக்கும் ஒருசிலரே இருப்பதாலும் கடந்த 20ஆண்டுகளாக தமிழ்ப் பகுதிகளில் சாதியம் அடக்கி வாசிக்கப்பட்டபடியாலும் ஒரு தளர்நிலையே காணப்படுகிறது.

சாதியப்பாகுபாடும் மற்றும் தீண்டாமையும் உள்ளிட்டவற்றை மனித உரிமை மீறலாக ஒன்றிய நாடுகளின் (ஐ.நா) மனித உரிமை ஆணையம் வெளிப்படுத்த முயன்றபோது சாதிச்சிக்கல்களை உலகநாடுகளளவிற்கு கொண்டு செல்வதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனால் நேப்பாளம் இதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தது. கடந்த 2011 ஆம் ஆண்டு டர்பனில் நடந்த மனித உரிமை ஆணைய மாநாட்டில் இச்சிக்கல் தலைதூக்கியபோது இந்தியா கரவாகச் செயற்பட்டு தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்துவிட்டது. இந்துமதம் மக்களைச் சாதிவாரியாகப் பிரித்தது போதாதென்று அவர்களில் சில குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்களை மட்டுமே தீண்டப்படாதவர்களென்று முத்திரை குத்தி அவர்களைக் குமுகாயத்திலிருந்து விலக்கி வைத்திருக்கிறது. உலகில் இக்கொடுமை இந்திய, நேப்பாளச் சூழலிலேயே காணப்படுகிறது. இந்த நடைமுறை கடந்த 2500 ஆண்டுகளுக்கு மேலாகவே உயர்சாதி இந்துக்கள் எவ்வித ஈவிரக்கமோ, மனச்சான்றோ இல்லாமல் கடைப்பிடித்து வருகின்றனர். மலம் உண்ணும் நாயைக்கூட மார்போடணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிட்டு மகிழும் இவர்கள் குமுகம் வாழத்தொண்டாற்றும் நலிந்த பிரிவினரைத் தூரப்போவெனத் துரத்தியடிக்கின்றனர். இது எவ்வளவு மனிதநேயத்திற்கும் பகுத்தறிவிற்க்கும் ஒவ்வாச்செயல்.

அரசியற்ச் சட்டம் தீண்டாமை ஒழிக்கப்படுகிறது, இதன்காரணமாக எவ்வித இயலாமையையும் ஏற்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமெனவும் கூறுகிறதாம். ஆனால் சாதியமும் தீண்டாமையும் ஒன்றோடொன்று இரண்டறக்கலந்து பிரிக்கமுடியாது உள்ளதென்பதே உண்மையாகும். அண்மையில் பெங்களூரில் இயங்கிவரும் தேசிய சட்டப்பல்கலைக் கழகமொன்று கர்நாடக மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்முறைகளும் அதற்கெதிராய் அரசெடுத்த நடவடிக்கைகள் பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டபோது சாதிய முரண்பாட்டுக் குற்றங்களைத் தடுப்பதற்கு கொண்டு வரப்பட்ட சட்டத்தின்கீழ் 1977 ஆம் ஆண்டுக்கும் 2000 ஆம் ஆண்டுக்குமிடையில் ஒரேயொரு வழக்கு விளங்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக கண்டறிந்துள்ளனர். மற்றைய மாநிலங்களிலும் இதேநிலைதான். இதிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு கீழ்த்தரமாக நடத்தப்படுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். "இந்திய சட்டவல்லுநர் அம்பேத்காரும், ஈ.வே.ரா.ப்பெரியாரும்" "சாதியை ஒழிக்காமல் தீண்டாமையை ஒழிக்க முடியாதென்றனர்." இதனாலேதான் இந்துவாக வேண்டாம், இந்துக்கடவுளர் வேண்டாம்,இந்துத்துவப் பண்பாடு (சாத்திர, சம்பிரதாயம்) வேண்டாம்,இந்துமதத்தை விட்டு வெளியே வாருங்கள் பிறக்கும்போது இந்துவாகப் பிறந்துவிட்டேன் அது என்குற்றமல்ல, இறக்கும்போது கட்டாயமாக இந்துவாக இறக்கமாட்டேன்" என இந்துத்துவக் கொடுமையின் வெளிப்பாடாய் ஆற்றாத் துயர்கொண்டு அறைகூவுகின்றார் அம்பேத்கர். ஈ.வே.ரா. அவர்களும் "சாதி இனஇழிவு நீங்க இசுலாம் ஒன்றே தீர்வென்கிறார்" மனம்வெதும்பி. ஆனால் மகாத்மா காந்தி அவர்கள் "இந்துமதத்தின் உயிர் சாதியென்றும் ,அதுஒழிக்கப்படும் நொடிப்பொழுதிலேயே இந்துமதம் அழிந்துவிடும், ஆகவே இந்துமதத்தைக் காப்பாற்ற சாதி நிலைபெறவேண்டும்" என்றும் அறிவுரை கூறிவந்தாரென (ஆய்வுக்கு உரியது)கூறப்படுகிறது.

இந்தியநாட்டின் இருபெரும் அரசியற் கட்சிகளும் ஒன்று மறைமுகமாகவும் மற்றையது வெளிப்படையாகவும் வைதீகவேத பிராமணியத்தின் இந்துத்துவ வல்மேலாண்மையின் பங்குதாரர்களாக இருந்து இந்தியா இந்துக்களுக்கே உரித்துடையதென்றும், இதேமண்ணின் மைந்தர்களான இசுலாமியர், கிறீத்தவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்தப்பட்டவர்கள் போன்றோருக்கெதிரான தொடர் வன்முறைகள் கட்டவிழ்த்து விட்டு அவர்களை வலுவிழக்கச் செய்கின்றனர். அத்தோடு இந்தியாவை இராம அரசாக(இராச்சியம்) மாற்றி அதில் மநு(த்தீ)நெறியே அரசியல் சட்டமாக இருக்கவேண்டுமென்பதிலும், வேதமொழி சமற்கிருதமே ஆட்சிமொழியாகவும் ,பகவத்கீதையே இந்தியாவின் புனிதநூலாக இருக்கவேண்டுமென்றும், ஆ(பசு) வே இந்துக்களின் புனிததெய்வமாக மாற்றுவதிலுமே கண்ணும் கருத்துமாயுள்ளனர். இன்று ஆ(பசு) வதைத் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றி ஆவைத் தெய்வமாக்கி பாதுகாப்பதென்பதும் கட்டாயப்படுத்தப்பட்டு வருகிறது. சில மாநிலங்களில் இச்சட்டம் நிறைவேறும் தறுவாயிலுள்ளது. இச்சட்டவரைவில் ஆவின் இறைச்சியை வீட்டில் வைத்திருந்தால் தண்டனைக்குரிய குற்றம்,அதை உணவிற்காக வெட்டினால் 7 ஆண்டுச் சிறை, ஐயப்பாடுள்ள வீடுகளை காவற்துறையினர் எந்நேரமும் புகுந்து தேடுதல் செய்யலாம் எனப்பல. ஆனால் மாந்தன் தவறுதலாக ஒரு கொலையைச் செய்தால் அதற்குத் தண்டனை 2ஆண்டுகள். இவையெல்லாம் இந்துத்துவத்தின் கேலிக்கூத்துக்களும் உலக இறும்பூதுகளும்(அற்புதங்கள்) தானே. உலகின் எந்த நாட்டிலும் ஆவின் இறைச்சியை உண்பதற்கு எந்தத்தடையுமில்லை. உடலுக்கு ஊறுவிளைவிக்காத குறைந்த செலவிலான உணவாகும். ஆனாலும் உடலுக்கு ஊறுவிளைவிக்கும் மது, புகைத்தலுக்கு எந்தத் தடையுமில்லை. எருமைமாட்டிறைச்சியை, மற்றையகால்நடைகளின் இறைச்சியை உண்ணலாமாம். இவையென்ன உயிரற்றவையா? இவ்வுயிர்களும் காப்பாற்றப்பட வேண்டியவைதானே. இவர்களுக்கு மனச்சாட்சி,பகுத்தறிவு, அதாவது ஆறாவது அறிவே இல்லையா?

இந்த ஆ வதைத் தடுப்புச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படுமானால் இதனால் பாதிப்படையப் போகிறவர்கள் வேளாண் பெருங்குடிமக்கள், உழவர், தொழிலாளர், கைவினைஞர், கூலிகள் போன்றோரே ஆவர். இவர்களின் வருமானம் போதாமையினால் நாளாந்தம் பல தற்கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந் நிலையில் இவ் ஆக்கள் இறக்கும்வரையில் உணவு, உறைவிடம், கண்காணிப்பு, பாதுகாப்பு என்பன இவற்றிற்கு வழங்கப்பட வேண்டும். இதனால் இவர்கள் அதிக பணமுடைவுக்கு ஆளாகி இந்தியாவின் ஒட்டு மொத்த உழவர்களையும் தற்கொலைக்கே இட்டுச் செல்லும் என்பது திண்ணம். பொதுவாக ஒரு ஆவின் பயன்பாடு 15 ஆண்டுகளே. அதன்பின் அரசே இவற்றைப் பொறுப்பேற்று மக்கள் வரிப் பணத்தில் ஒரு ஆணையம் நிறுவி இவை இறக்கும்வரை கண்காணித்துப் பாதுகாக்கலாம். அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கான காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்கி குறித்த காலத்தின்பின் இறக்கும்வரை கண்காணிக்க அவர்களுக்கு நிதி உதவி வழங்கலாம்.

இந்துக்களின் வேதநூலான மநு(த்தீ)நெறி (அவ்வளவு கொடூரமானது): படைப்புக்கள் அனைத்தும் உயிர்களுக்கு உணவாகத்தக்கன. கொல்லத்தக்கனவும், உண்ணத்தக்கனவும். படைத்தவர் பிரமா. அன்றாடம் கொன்று தின்றாலும் பாவம் ஆகாது என்கிறதாம். இதுமட்டுமா! பிரம்மா ஆ(பசு)வைப் படைத்தது வேள்வி செய்யவே. வேள்விகள் உலக நன்மைக்காகவே செய்யப்படுகின்றன. வேள்விக்காக ஆவைக் கொல்வது பாவமாகாது. வேள்விக்குப் படைக்கப்பட்டது மந்திர உச்சரிப்புக்களோடு கொல்லப்பட்டது. விதிப்படி வரிக்கப்பட்டது. பெரும்குருவால் (ஆசாரியனால்) பணிக்கப்பட்டது ஆகிய புலால் உணவைப் பிராமணன் உண்ணலாம், உண்ணேன் என்று மறுப்பது பெரும்பாவமெனக் கூறுகிறதாம் இந்தமநுநெறி. இதன்படி ஆவின் இறைச்சியை உண்பது எவ்விதத்திலும் பாவமாகாது. எனவே இவையெல்லாம் இந்துத்துவ முதலாளிய சுரண்டல் வல்மேலாண்மையைத் தூக்கிப்பிடித்து சாதியத் தீண்டாமையை உயர்த்தி கீழ்த்தட்டு மக்களையும், மதச்சிறுபான்மையினரையும் நசுக்கி அவர்களின் அடிப்படை மனிதஉரிமைகளைப் பறிக்க மேற்கொள்ளும் செயற்பாடுகளேயாகும்.

இதுபற்றி இந்தியத் தமிழ்மரபினரும் ,தென்னாபிரிக்காவின் முதல்பெண் நடுவரும் (நீதிபதி), இன்றைய உலக ஒன்றிய நாடுகளின் (ஐ.நா)மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவருமான நவநீதம்பிள்ளை அவர்களின் கூற்றே இந்த 26கோடி மக்கள் தீண்டாமைக் கொடுமையால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதாகும். அவரின் கூற்றாவது "மனித உரிமையின் அடிப்படைப் பண்பான சமத்துவம் ,பாகுபாடின்மை ஆகிய கூறுகளை மறுக்கக் கூடிய நிகழ்ச்சியாக சாதி திகழ்கிறது. ஒரு தனி நபரையும் ,அவர் பிறந்த குமுகத்தையும் சுரண்டலுக்கும், வன்முறைக்கும், குமுக ஒடுக்குதலுக்கும், ஏற்றத்தாழ்விற்கும் பலதலைமுறையாக (2500 ஆண்டுகளுக்கு மேலாக) இந்தச்சாதி ஆட்படுத்தி வருகிறது. சாதிமுறையான பாகுபாடு என்பது தனிமனித உரிமைமீறல் மட்டுமன்று: பாதிக்கப்பட்ட ஒருவரை பொதுத்துறை சார்ந்த அரசியல், பொருளாதார, மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கும் ஆட்படுகின்றது. தாழ்ந்தசாதி என்று முத்திரை குத்தப்பட்ட மக்கள் எப்பொழுதுமே அதிக வருமானமில்லாத பணிகளிலேயே பலதலை முறையாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு தொழில் வாய்ப்போ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண் நிலங்களோ, கடன் உதவித்திட்டங்களோ கிடைப்பதில்லை. இவர்களில் பெரும்பாலானோர் மீளமுடியாத கடன் சுமையிலும், கொத்தடிமை முறையிலும் வாழ்ந்து வருகின்றனர். இந்த நடைமுறை நவீனகால அடிமைத்தனமாகும். இவர்களிடம்தான் குழந்தைத் தொழிலாளர் முறையும் எழுத்தறிவின்மையும் மிக அதிகவளவில் உள்ளன" என்கிறார். அத்தோடு 2006இல் இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோகன்சிங் "சாதியத் தீண்டாமை ஒரு இனவெறிச் செயல்" எனக் கூறியிருப்பதையும் நவநீதம்பிள்ளையவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பலமாநிலங்களிலும் சாதி இந்துக்களின் குடியிருப்புக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருப்புக்களுக்கும் இடையில் சாதித்தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டு மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக பல்லாண்டுகளாக இருப்பவற்றை நீக்கக்கோரி அறிவியலும், பகுத்தறிவும் மிக் இந்நாளிலும் போராடவேண்டியுள்ளது. மதத்தின் பெயரால் ஈவிரக்கமற்ற, மனிதநேயமும், மனச்சான்றுமற்ற சாதிய தீண்டாமையை தூக்கிப்பிடிப்பது எவ்விதத்தில் ஏற்புடையது. உலகம் முழுவதும் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டுவிட்டதெனக் கூறினாலும் இந்தியா, இலங்கைத்தமிழர் நடுவில் கடவுள், மதம், சாதியின் பெயரால் அடிமைத்தனம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். அண்மையில்கூட தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊராட்சி மன்றில் இந்தியக் குடியரசு நாளன்று தேசியக்கொடி ஏற்ற இருந்த தலைவரை(தாழ்த்தப்பட்டவர்) தடுத்து,சாதி இழுத்துக்கொச்சைப் படுத்தி ,துணைத் தலைவரைக் கொண்டு கொடியேற்றப்பட்டதாம். இதை காவற்துறையும் பாராமுகமாக இருந்துவிட்டதாம்.

எனவே சாதியும், தீண்டாமையும் மனிதஉரிமை மீறல்கள் என்ற உலக ஒன்றிய நாடுகளின் (ஐ.நா) முடிவு ஒன்றே இவைகளை ஒழிக்க உதவும் ஒரே வலுவான போர்க் கருவியாகும். ஆகவே அறிஞர் பெருமக்களும், மனிதநேயம் மிக்கோரும், பொதுமக்களும் ஒத்துழைத்து போர்க்குரல் எழுப்பி இச்சாதியத் தீண்டாமையை மக்கள் குழுகாயத்திலிருந்து போக்க உறுதுணையாய் செயற்படவேண்டும். தமிழனைக் கூறுபோடும் இந்நச்சுக் காற்று மீண்டும் இலங்கையின் வடகிழக்கில் வீசவிடாமல் தடுத்திடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒருங்குகுறித் தொகுப்பியம்

## (யூனிகோட் கொன்சோர்டியம்)

ஒருங்கு குறிச்சேர்பியம் (தொகுப்பியம்) இந்திய மொழிகளுக்கென்று தனியிடம் ஒதுக்கிய போது இந்தியவரசு சமற்கிருதத்துடன் சேர்த்து 22 மொழிகளுக்கு 128 இடங்களை ஒதுக்கியது. ஆனால் இன்றுவரை சமற்கிருதத்திற்கென்று தனி வரி வடிவமில்லை. இப்படிக் கடவுள் (தேவ) மொழிக்கே எழுத்தில்லாத நிலை மீபெரும் வீழ்ச்சியேயாகும். இம்மொழி தேவநாகரி என்ற எழுத்திலேயே இன்றுவரை எழுதப்பட்டு வருகிறதாம். இந்தத் தேவநாகரி எழுத்திலேயே இந்திய அரசின் அலுவல் மொழியான இந்தி எழுதப்படுகின்றது.எனவே இன்னொரு மொழியின் துணையின்றி இத்தேவமொழியால் இயங்கமுடியாது. ஒருங்குகுறியில் சமற்கிருதத்திற்குத் தனி இடம் ஒதுக்கியபின் தான் இந்த வரிவடிவமற்ற இயங்காமொழிக்கு எந்த எழுத்தை அல்லது வரிவடிவத்தை கொண்டு இந்த இடத்தை நிரப்புவதென்ற கவலை எழுந்ததாம்.

இந்திக்கு தேவநாகரியை ஒதுக்கியதால் சமற்கிருதத்திற்குக் கிரந்தத்தை ஒதுக்கலாமென்ற சிந்தனை இந்தியவரசுக்கும் சமற்கிருதவாணற்கும் உதயமாயிற்று. கிரந்தம் ஒரு மொழியோ சமற்கிருத எழுத்தோவல்லவாம். இடைக் காலமாகிய கி.பி.5 ஆம் நூற்றாண்டளவில் சில தமிழ் சமற்கிருதத் தேர்ச்சி பெற்ற இரு மொழிப்புலவர் சிலர் தமிழைச் சிதைக்கும் தீயநோக்கோடு செயற்கை வரிவடிவமாகக் கிரந்தம் என்ற பெயரில் எழுத்துக்களை உருவாக்கி அதில் தமிழ் எழுத்துக்களுடன் தமிழிற்குத் தொடர்பற்ற வர்க்க எழுத்துக்களையும் ஸ,ஷ,ஹ,ஸ்ரீ போன்ற எழுத்துக்களையும் சேர்த்து சமற்கிருதத்தை எழுத ஆக்கப்பட்ட மொழியாகும். மணிப்பிரவாள (மணிப்பவள) நடையென தமிழ்த் தூய்மையைக் கெடுக்க வடமொழியும் தமிழ்மொழியும் கலந்த ஒன்றும் உருவாக்கப்பட்டது. இக்கிரந்த எழுத்துக்கள் மொத்தம் 68 ஆகும். இதில் தமிழுக்கும் சமற்கிருதத்திற்கும் பொதுவானவை 41 எழுத்துக்கள் மிகுதி 27 எழுத்துக்கள் மட்டுமே சமற்கிருதத்திற்கு உரியவை. அப்படியாயின் சமற்கிருதத்தால் தனித்து இயங்க முடியாதா என்ன?.

தமிழ்: உலக, இந்திய, இலங்கை ஆகிய நாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் அனைத்து மொழிகளிலும் தொன்மை மிக்கதும்,3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பன்நெடுங் காலமாக வழங்கிவருவதுமாகும். அதன் செவ்விய அறிவியல் வாயிலான சிறந்த அரிவரி (அல்பபெற்) கி.மு.8ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் யாக்கப்பெற்ற தொல்காப்பியத்திலேயே செம்மைப் படுத்தப்பட்டு செந்தமிழாய் விளங்கும் தொன்மையுடையது. இன்றைய தமிழ் எழுத்துவரிவடிவம் கி.மு.முதலாம் நூற்றாண்டுக்கு முன்னரே உருவாகியது. இவ்வரிவடிவத்தை கே.சீ.கிருட்ணன் போன்ற தலை சிறந்த அறிஞர்கள் தமிழி என்றே அழைத்தனர். வேறுசிலர் தமிழ்ப் பிராமி என்றனர். இதிலிருந்தே தென் பிராமி,வட பிராமி என அழைக்கப்படும் இருவகை வரிவடிவங்களும் உருவாக்கப்பட்டன. எந்த மொழி வரிவடிவமானாலும் காலத்துக்குக்காலம் எழுத்துக்களில் சிறிய மாற்றங்கள் ஏற்படுவதை தவிர்க்கமுடியாது.தமிழிலும் அவ்வாறே தான். தொல்காப்பியர் காலந்தொட்டு அழகியல்சார் ஓரிரு சின்னஞ்சிறிய வரிவடிவ மாற்றங்களே நடந்துள்ளனவெனலாம். ஆனால் வரிவடிவச் சிதைவுகளேதும் ஏற்படாமல் தமிழ்மக்கள் கண்ணும் கருத்துமாய்த் தமிழ் மொழியைக் காத்துவருகின்றனர்.

தமிழிலுள்ள 6 வல்லெழுத்துக்களில் க,ச,ட,த,ப ஆகியவற்றிற்குக் கடுமையான வல்லொலிகள் என்றும் இருந்ததில்லை. வர்க்க எழுத்துக்கள் தமிழில் ஒலியன்களல்ல. சிற்சில இடங்களில் இன்னோசை கருதி மாற்றொலியன்களாக மட்டும் இவற்றின் பிறங்கொலிகள் வழங்கும் நிலையுண்டென்பர் புலமைசார் தமிழறிஞர். இடைக் காலத்தில் உருவாக்கிய கிரந்த எழுத்துக்களை வலிந்து தமிழிய (திராவிட) மொழிகளாகிய கன்னடம்,தெலுங்கினுள் நுழைத்ததால் அம்மொழிகள் இன்று தமிழியத் தன்மையை இழந்து உருமாறியுள்ளன என்பதை சிறந்த அறிஞர்களான சி.பி.பிரெளன், முனைவர். காடுவெல் போன்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

தங்களுக்கு அடையாளத்தைக் கொடுக்கும் மொழியை வளர்த்தெடுப்பதே நிலைபெற விரும்பும் ஒவ்வொரு வலிமைவாய்ந்த (அரசமேலாண்மையுடன் நேரடியாகக் கெடுத்தும், அடுத்துக்கெடுத்தும்) இனத்திற்குமான மீபெருங்கடமையாகும். செல்லுமிடமெல்லாம் தங்கள் செல்வாக்கைப் பெருக்கி, தங்களைச் செழுமைப்படுத்திக் கொள்ளும் கூர்தலறம் நிரம்பியது ஆரிய இனம். எங்கெங்கியலுமோ அங்கெல்லாம் உள்ள அறிவுக் கருவூலங்களை தட்டிப் பறித்து (அண்மையில் ஈராக் அமெரிக்காவால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கப்பட்டபோது முதலில் அழிக்கப்பட்டது ஈராக்கின் அருங்கலைக் காட்சியகம் எனக் கூறப்பட்டது.ஆனால் அங்கிருந்த அருங்கலைக் களஞ்சியப்பொருட்கள் காவு கொள்ளப்பட்ட பின் எரியூட்டப்பட்டது என்பதே உண்மையாம்)தங்கள் மொழியில் உள்வாங்கிக்கொண்டு மூல ஆக்கங்களை அழித்து தம்மொழியை அங்கு இடங்கொள்ள வைத்தும் இயலாவிடத்து தம்மொழிக் கருத்துக்களை,சொற்களை,எழுத்துக்களை திணித்து(மூளைச்சலவை செய்யப்பட்ட மூடத்தையே முதலீடாகக் கொண்டுள்ள தமிழர்கள் வீட்டில் குழந்தையொன்று பிறந்துவிட்டால் அதற்குப் பெயர் வைக்க நாடுவது ஆரியவேதமரபாருக்கு முண்டுகொடுக்கும் தமிழால் உயிர் வாழ்பவரிடமே.அவர்களும் ஏதாவதொரு கிரந்த ஸ,ஷ,ஹ,ஶ்ரீ எழுத்தை அல்லது ற,ரா,ல போன்ற எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு பெயர் சூட்டக் கூறுவர். போதாக்குறைக்கு பெயரில் இனிமை காண அடிமை வயப்பட்ட நாமும் வட எழுத்துக்களை சேர்க்கின்றோம்.) தம் மொழியை மேம்படுத்தி ஆக்கம் தேடிக் கொள்ளவும் வல்லவர்கள் (அமெரிக்கர்,ஐரோப்பியர், அவுசுத்திரேலியர்,கீழை (வேத) ஆரியர் இதில் அடக்கம்). இதுவே கடந்த 3500 ஆண்டுகளாக நடைமுறையிலுள்ள செயற்பாடாகும்.

இன்றும் கூட தமிழ்மொழிப் பகைவர்கள் தமிழ்மொழியை அதன் வழியில் விடமனமில்லாது:எப்படித் தமிழ் செம்மொழியாவதை 100 ஆண்டுகளுக்கு மேலாகத் தடுத்து நிறுத்திய இந்திய நாட்டின் மிகச் சிறுபான்னையினராக இருந்தாலும் இந்திய அரசில் மேலாண்மை செலுத்தும் வைதீகவேத ஆரியச்சமுகம் தம் குறும்புத் தனங்களைச் செய்தவண்ணமே இருக்கின்றது. தமிழ் தீட்டு(நீச) மொழி,தமிழில் பேச மாட்டேன் என்ற காஞ்சிபுர சங்கராச்சாரி மடத்தைச் சேர்ந்த, அம்மரபில் வந்த வைதீகவேதமரபரான இரமண சர்மா என்பார் தமிழின் தனித்துவத் தன்மையை சிதைத்துச் சின்னாபின்னப் படுத்தும் நோக்கோடு கிரந்தத்தில் உள்ள தமிழல்லாத 26 எழுத்துக்களை அதாவது க,ச,ட,த,ப போன்ற வர்க்க எழுத்துக்களையும், ஸ,ஷ,ஹ,ஶ்ரீ போன்ற கிரந்த எழுத்துக்களையும் தமிழ் ஒருங்கு குறி(யூனிகோட்)யுள் சேர்க்க ஒருங்குகுறித் தொகுப்பியத்திற்கு விண்ணப்பித்துள்ளாராம்.இது வேற்றினத்தார் தமிழின் மீது செலுத்தும் வல்மேலாண்மையின் குறியீடு தானே. அத்தோடு சமற்கிருதத்திற்கான கிரந்த எழுத்துக்களுடன் தமிழ் எழுத்துக்களான எ,ஒ,ழ,ற,ன ஆகிய தமிழ் எழுத்துக்களையும் எகர,ஒகரக் குறியீடுகளையும் சேர்க்க வேறுசில தமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவர்களும் முனைந்து நிற்கின்றனராம். இது காலப்போக்கில் தமிழ் நெடுங்கணக்கை அழிக்க அடிகோலுமென்கின்றனர்(இந்தியாவிலுள்ள 3000 மொழிகளில்தமிழ் தவிர்ந்த ஏனையமொழிகள் தேவநாகரி நெடுங்கணக்கைப் பின்பற்றுகின்றனவாம்) புலமைசார் தமிழ்ச் சான்றோர்கள்.அது எப்படி முடியுமென சில அறப்படித்தவர்கள் கேட்கக் கூடும்.கிரந்தத்தை சமற்கிருதத்திற்கு எழுத்தாக்கி ஒருங்குகுறியுள் அமைத்து காலப்போக்கில் வடஇந்திய மொழிகளுக்கும்,தென்இந்திய மொழிகளுக்கும் அதையே எழுத்தாக்க,அறிவிக்க வைதீக வேதமரபு மேலாண்மை கொண்ட இந்திய அரசு சட்டக்கோவையாக(மநுத்தீநெறியை கி.பி.400 இல் மயூரவர்மன் அரசஆட்சிச்சட்டமாக்கியது போல்) ஆணையிடவும் கூடும்.இதனால் தமிழுலகிற்குப் பேரிழப்பு உண்டாகுமென அறைகூவுகின்றனர் தகைசார் தமிழ்ச் சான்றோர்.

இந்தியாவை ஆங்கிலேயர் ஆட்சி செய்த போது கி.பி. 1812 இல் இந்தியநாட்டின் குடிசனமதிப்பு கன்னியாகுமரியில் தொடங்கி கசுமீரம்வரை எடுக்கப்பட்டது.ஆங்கிலேயர் ஆட்சியிலும் வைதீகவேத மரபாரே அவர்களின் ஆளுமை அலுவல்களுக்கு உதவியாக, உறுதுணையாக இருந்தவர்கள்.இவர்களின்(கரவான) திட்டப்படி குடிசன மதிப்பில் இசுலாம்,கிறீத்தவம் தவிர்ந்த ஏனையோர் இந்துக்களாக (சைவர்,வைணவர், சமணர்,பௌத்தர்,ஆசீவகர் போன்ற இன்னோரன்ன சமயத்தார் --இன்றும் உள்ளனர்) பதியப்படவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளதாகவும் கூறி பதிவுசெய்தனர். இந்த நடவடிக்கையின் மூலமாக உலகிற்கு இந்தியா என்றால் இந்துசமயத்தாரைக் கொண்ட நாடென்றும்,3000 மொழிகளைப் பேசுகின்ற இந்தியமக்களை கிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்று காட்டவுமே அன்று இந்த தமிழ் எதிர்ப்பாளர்களான வைதீகவேதமரபார் திட்டமிட்டுச் செயற்படுத்தி அதில் நிறைவான வெற்றியும் கண்டனர்.ஆனால் இன்றுவரை இந்த ஆரிய(மேலை,கீழை)தமிழ்மொழி எதிர்ப்பு இன்னும் அடங்கவில்லை. மொழியழிப்பு,இனவழிப்பு,பொருளழிப்பு தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

ஆரியம் கண்டாய் தமிழ் கண்டாய் என்றும்,ஆரியமும் தமிழும் இந்துத்தமிழர்களின் இருகண்களென்றும் கூறிக்கொண்டு ஒருகண்ணுக்கு வெண்ணெய்யும் மறுகண்ணுக்குச் சுண்ணாம்பும் பூசுவது தகுமா? தமிழிலிருந்து எழுத்துக்களைக் கடன்வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரந்தத்தை உருவாக்கிய சமற்கிருதவாணர்கள் இன்று நம்மையைக் கொண்டே நம்கண்ணைக்குத்த முயற்ச்சிக்கின்றனர். தமது சமற்கிருத ஒருங்குகுறிக்கு தனிப்பட்டியல் அமைத்துக் கொடுப்பதை விடுத்து தமிழ்மொழி ஒருங்குகுறிக்குள் கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கவும்,கிரந்தத்துள் தமிழெழுத்துக்களை சேர்க்கவும் முயற்ச்சிப்பது அவர்களின் மரபணுவாயிலான தமிழைச் சீரழிக்க,சிதைக்க விரும்பும் நாட்டத்தினை ஐயம்திரிபுக்கு இடமின்றி சுட்டுவதாகும்.

அத்தோடு அண்மையில் முன்னனி தமிழ் ஞாயிற்று செய்தித்தாள் ஒன்று அதிரவைக்கும் உலகமர்மம் என்னும் தலைப்பிலே தேஜாவு என்னும் பிரெஞ்சுமொழிச் சொல்லுக்கு தமிழுணர்வாளர்களை அதிரவைக்கும் விதமாக புதுமொழியில் விளக்கமளித்துக் குட்டையைக் குழப்பியிருந்தது(யாழ்ப்பாண,மன்னார்,நீர்கொழும்பு,மட்டக்களப்பு,இசுலாமியர்,சிங்களர் போன்றோரின் பேச்சுத்தமிழில் அல்லது கொச்சைத்தமிழில் செய்தி வெளியிட்டால் தமிழின் கதி?).நல்லதமிழில் எழுதுகின்ற ஓரளவு தரமான ஆக்கங்களையே குப்பைக்கூடைக்குள் போடும் செய்தித்தாள்கள் இவைபோன்ற கொச்சை இழிவுகளை வெளியிடுவது நடுநிலைச் செயலாகுமா? இதுபோன்ற செயற்பாடுகளும் மேற்குறித்த தமிழ் ஒருங்கு குறியுள் கிரந்த எழுத்துக்களை நுழைக்க முயலும் செயற்பாட்டிற்கு ஒத்ததாகவே கருதவேண்டியுள்ளது.இவ்வகைச் செயற்பாடுகளால் பாதிப்படையப் போகின்றவர்கள் உலகில் பரந்துபட்டு வாழும் அன்னைத் தமிழும், 10கோடித் தமிழர்களுமே. மொழியைப் பாதுகாக்க வேண்டிய முழுப்பெறுப்பும் அதுசார்ந்த இனத்தையும்,அதுசார்ந்த ஊடகங்களையும் பொறுத்ததே ஆகும்.

***வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வரலாற்றில் வானியல்

ஐந்திரம் (பஞ்சாங்கம்) மூடநம்பிக்கைச் சடங்குகளின் தொகுப்பென்றே சிலர் கருதுகின்றனர். ஆனால் அதில் பண்டைக் குமரித்தமிழனின் உயர்ந்த வானியல் அறிவுப்பதிவுகள் பொதிந்து கிடக்கன்றன. இருந்தும் இடைச் செருகல்களாக பல குப்பை கூழங்களும் உண்டுதான். அன்னம் பாலை மட்டும் பிரித்தெடுப்பது போலவும், அரிசியைக் கிளைந்து கல்லை அப்புறப்படுத்துவது போலவும் இவ் ஐந்திரத்தை இழை பிரித்துப் பார்க்க வேண்டியது தகைசார் அறிஞர்களின் பொறுப்பாகும்.மனோன்மணி விலாச சுத்தவாக்கிய பஞ்சாங்கம் (ஐந்திரம்) அடைக்கலமரணவூர்(தஞ்சாவூர்) இலங்கோச்சயனி மத்தியரேகையிலிருந்து தேசாந்திரம் 34 வினாடிக்கு யோசனை 46 கிழக்கில் அமைந்திருப்பதாகக் கூறுகிறது. இங்கு ***இலங்கோச்சயினி*** என்ற சொல் இலங்கா உஞ்ஞைனி (உச்சையினி) ஆகிய இரு இடங்களும் ஒரே நிரைவரையில் (லோஞ்சிரியூட்) இணைந்து இருப்பதையே உணர்த்துகின்றது. இந்த உஞ்ஞைனி இந்திய மத்தியப் பிரதேசத்திலுள்ள இந்திய வானியலில் ஒரு சிறப்புமிக்க இடத்தை பிடித்துள்ளது. ஆனால் இலங்கா எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடம் இன்றைய இலங்கையல்ல. ஏனெனில் இன்றைய இலங்கை இலங்கோச்சயினி மைவரையிலிருந்து (மெரிடியன்) கிழக்காக கிட்டத் தட்ட 5பாகையில் அமைந்துள்ளதேயாகும். அத்தோடு உஞ்ஞைனி நகரம் நிலநடுக்கோட்டிற்கு வடக்கில் கடகத்திருப்பத்தில்(23 11 )இருப்பதால் இலங்கா மகரத்திருப்பத்தில் தான் இருக்கவேண்டும். ஆனால் உஞ்ஞைனி அமைந்துள்ள 75 41 கிறீன்விச் மை வரையில் மகரத்திருப்பத்திற்கருகில் கடல்தான் பரந்து காணப்படுகிறது.

இது ஆயிரமாயிரமாண்டுகளுக்கு முன் மிகப்பெரும் நிலப் பரப்புக்கள் குமரி(இந்து)மாவாரியில் இருந்ததாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.அத்தோடு இவை காலத்திற்குக் காலம் ஏற்பட்ட கடல்கோள்களால் மூழ்கிப்போனதாக வெளிநாட்டு ஆய்வாளர்களும் தமிழ் இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. சோவியத் நாட்டு எழுத்தாளர் அலெக்சாண்டர் கோந்திரடோவ் தனது மூவாரிகளின் புதிர்கள் என்னும் நூலில் இலங்கை பற்றிக் குறிப்பிடும்போது நிலப் பரப்புக்கள் பற்றிய புதிய கணடுபிடிப்புக்களை எழுதும் வரலாற்று ஆசிரியர்கள் பண்டைக் கிரேக்கர் உரோமர் அறிந்திருந்த தாமிரபரணி தான் இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை என்கின்றனர். ஆனால் மேற்குறித்த கிரேக்க உரோமர்களின் விளக்கங்களோடு இவை பொருந்தவில்லை என்றும்,அது பற்றித் தொன்மைக் குறிப்புக்கள் பல இருப்பதாகவும் கூறுகின்றார். பிளினி கூறுகின்றபோது தாமிரபரணியில் நிழல்கள் வடக்குநோக்கி விழாமல் மாறாகத் தெற்குநோக்கி விழுவதாகவும் ஞாயிறு இடப்பக்கம் தோன்றி வலப்பக்கம் மறைவதாகவும் கூறுகின்றார். எனவே பிளினி கூறும் தாமிரபரணி(இலங்கை) புவியின் தென் அரைக்கோளத்தில் தான் இருந்து இருக்கவேண்டும் என்பதை துல்லியமாகத் துலக்கும். ஆனால் இன்றைய இலங்கையோ வடக்கு நேர்வரை 5பாகைக்கும் 9பாகைக்கும் இடையில் அமைந்துள்ளது.எனவே இலங்கா(தென்னிலங்கை)எனப்படும் தாமிரபரணி மிகப்பெரிய நில ப்பரப்பென்பதும்,நிலநடுக்கோட்டிற்குத்(ஈகுவேற்ரர்) தெற்கே விரிந்து பரந்து கிடந்ததென்பதும்,நிழல் தெற்குநோக்கி இருந்ததால் அது தென்னரைக் கோளத்தின் மகரத்திருப்பத்திற்குத் தெற்கே இருந்தது என்பதும் உரோமகிரேக்க பழம் குறிப்புக்களிலிருந்து தெளிவுபடும். கிப்பர்சுசுவின் குறிப்பின்படி தாமிரபரணியை எவரும் கடல்வழியாகச் சுற்றி வராததால் இதையொரு தீவாகக் கொள்ளமுடியாதென்றும் அது வேறொரு உலகத்தின் தொடக்கமாகவும் புவிக்கோளத்தின் எதிர்ப் பக்கத்தில் வாழ்பவர்களுடைய நிலத்தின் வடக்கு விளிம்பாகவும் இருந்து இருக்க வேண்டுமென்பார்.இதை உறுதிசெய்வதுபோல் எரிக்வான் டெனிக்கான் தனது "தெய்வங்களின் அழகுத்தேர்கள்(சரியட் ஒவ் கோட்சு)" என்னும் ஆங்கில நூலில் பெருவெள்ளமும் புவியின் ஒருபகுதி நீரில் மூழ்கக் காரணமும் வெளியுலகிலிருந்து வந்தவர்கள் நடத்திய அணுப்போரே என்பார்(ஆய்வுக்குரியது).

ஐந்திர(பஞ்சாங்க)த்தின் மற்றொரு இடத்தில் ***நிரட்சலங்கை*** (நிரட்சம் இலங்கை) என்ற இடம் குறிப்பிடப்பட்டுள்ளது (அட்சம்--அகலாங்கு, நிரட்சம் -- அகலாங்கு அற்றது)எனவே இந்த இடம் புவியின் நிலநடுக்கோட்டுத் (ஈகுவேற்ரர்) தளத்தில் அமைந்திருக்கவேண்டும். இதற்கூடாகவே இலங்கோச்சயினி என்ற பண்டைய உலகின் மைவரையை(மெரிடியன்) குமரித்தமிழர்கள் கொண்டிருந்தார்களெனலாம். இவர்களமைத்த 'வானியல் ஆய்வு நடுவமிருந்த இடத்திற்கு நேராக இம் மைவரை இருந்திருக்கக் கூடுமென்றும்,ஞாலநடுவரை மைவரையை வெட்டுகின்ற இடத்தை வைத்தே கதிரவன் எழும்வேளையை தமிழர்கள் கணக்கிட்டுவந்தனரென்றும் கூறுகின்றார் கில்பர்ட் சிலேட்டர் என்னும் அறிஞர் தமது "இந்திய நாகரிகத்தில் தமிழ்(திராவிட)ப் பண்பாடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் ஆங்கில நூலில். இன்று இலண்டனுக்கு அண்மையிலுள்ள கிறீன்விச்சுக்கு ஊடாகச் செல்லும் நெடுவரையை மையவரையாகக் கொண்டு உலக நாடுகளின் நேரங்கள் கணிக்கப்படுகின்றன. ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குமரித்தமிழர்கள் ***இலங்கோச்சயினியை மைவரையாகக்கொண்டு*** நேரங்களைக்கணக்கிட்டனர். இவற்றையெல்லாம் தட்டிப் பறித்துத் தமதாக்கிக் கொண்டு மார்தட்டி நிற்கின்றனர் வேற்றினத்தார்.

இந்த நிரட்சலங்கை(இலங்காபுரி)யிலிருந்து 90 பாகை இடைவெளியில் மூன்று வானியல் நடுவங்கள் நிலநடுக்கோட்டுத் தளத்தில் இருந்திருக்கின்றன. இவற்றை மேகலா நகரங்களெனக் குறிப்பிடப்படுகின்றன. தமிழர் தம் இலக்கிய மாண்பையும்,பெண்ணின் பெருமையையும் உலகிற்கு இமயமாய்க் காட்ட யாக்கப்பெற்ற ஐம்பெருங் காப்பியங்கள்(சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி) பெண்ணின் அணிகலங்களை தலைப்பாக வைத்தே ஆக்கினர். இங்கு மேகலை என்பது பெண்கள் அரையில் அணியும் அணிகலன். அதாவது உடலின் நடுப்பகுதியில் அணிவது. புவியை அரைக்கோளங்களாக்குவது நிலநடுவரை. எனவே இத்தளத்தில் அமைந்த நகரங்களாக ***இலங்காபுரி, உரோமகபுரி, சித்தபுரி, ஏமகூடம் என்பனவே மேகலை நகரங்களாகும்.*** இந்த நான்கு நகரங்கள் பற்றி கி.பி.300 யாக்கப் பெற்ற சூரியசித்தாந்தம் குறிப்பிடுவதாக முனைவர் ஆர்.ஆர்.கார்னிக் தனது "மாவாரியில் மயனும் சூரியசித்தாந்தமும்" என்ற தமது ஆங்கிலக் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

ஞாயிறு உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே நேரத்தில் ஒளிர்வதில்லை. எனவேதான் காலவேறுபாடுகள் ஏற்படுகின்ற நிலநடுக் கோட்டு அரைக்கோள விளிம்புகளில் நான்கு துறைமுக இடங்களைத் தேர்ந்தெடுத்தனர்.இலங்காபுரிக்குக் கிழக்காக பத்ராசுவக் கண்டத்தில் ஏமகூடம்,பரதகண்டத்தில் இலங்காபுரி,இதற்கு மேற்காக கேதுமால கண்டத்தில் உரோமகபுரி, ஏமகூடத்திற்கு மேற்காக குரு கண்டத்தில் சித்தபுரி என்ற நான்குமாகும். பத்ராசுவக் கண்டத்தில் ஞாயிறு உச்சியில் இருக்கும்போது பரத கண்டத்தில் உதயமாகிறது.கேதுமால கண்டத்தில் நள்ளிரவு,குரு கண்டத்தில் ஞாயிறு மறைவு நிகழ்கின்றது. நண்பகல், உதயம்,நள்ளிரவு,மறைவு என்ற இந்தச் சுழற்ச்சி பரதகண்டத்தை நடுவகமாகக் கொண்டு கணக்கிடப்பட்டது.இன்றைய கிறீன்விச் நிரைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குப்படி கிழக்கு 75 --76 பாகைக்கிடையில் குமரி (இந்து) மாவாரியில் இலங்காபுரியும், மேற்கு 15 -- 16 பாகைக்கிடையில் தென்அத்திலாண்டிக் மாவாரியில் உரோமகபுரியும், மேற்கு 105--106 பாகைக்கிடையில் தென் அமைதி (பசுபிக்)மாவாரியில் சித்தபுரியும், 165--166 பாகைக்கிடையில் கிரிபதித்தீவுக் கூட்டங்களுக்கிடையில் ஏமகூடமும் இருந்திருக்க வேண்டும். ***இன்று இம்மேகலை நகரங்களும் மகரத்திருப்பத்தில் இருந்த இலங்கா (தென்னிலங்கை)***வும் கடலில் மூழ்கிவிட்டன.

10000 ஆண்டுகளுக்கு ஏற்பட்ட பனிப்பின்வாங்கலின் போது கடல் நீர்மட்டம் 500அடிக்குமேல் உயர்ந்துள்ளதாம்.இது குமரி(இந்து) மா வாரியிலுள்ள தீவுகளின் அடிமட்டத்திலும்,கண்டங்களை ஒட்டியும் ,இதற்கு எதிர்ப்புறமாயுள்ள அமைதி(பசுபிக்)மாவாரியிலும் 600அடி ஆழத்துக்குள் குறிப்பிடும்படியான நிலப்பகுதிகளைக் காணமுடிகிறதென கடலாய்வாரள்கள் கூறுகின்றனர். இதன்படி புவியின் தென்னரைக் கோளத்திலிருந்த குமரிக் கண்டம் நீரில் மூழ்கியதென்பதை கற்பனை என்று ஒதுக்கித் தள்ளமுடியாது. அன்று இமையமலையும் விந்தியமலையும் வடக்குத் தெற்காய் கிடந்ததாகவும்,இதற்கு இடைப்பட்ட பைந்திரம் (பிரதேசம்)மத்தியப் பிரதேசமென அழைக்கப்பட்டு இவை நிலநடுக் கோட்டுக்குத் தெற்காகக் காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. கடல்கோள்களால் குமரிக்கண்டம் கடல் கொண்டபோது அங்கிருந்து தப்பியோடிய குமரித்தமிழர் இலங்கை இந்திய பெருநிலப் பரப்பிலே தாம்,தம் தலைமுறையினர் பல்லாயிரமாண்டுகள் வாழ்ந்த நாட்டின், நகரங்களின்,ஆறுகளின், மலைகளின் நினைவாக அவற்றின் பெயர்களை தாம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இடங்களுக்கு இட்டனர்.இதனாற்றான் பல மதுரைகளை,துவாரகைகளை, பொருணைகளை,தாமிரபரணிகளை,பறுளிகளை, இலங்கைகளைக் காணக்கூடியதாக உள்ளது.இதுதான் இயற்கையும், இயல்பும்,நடைமுறையுமாகும்.இலங்கைக்குள்ளேயே இரண்டு காரைதீவுகள், இரண்டு கரவெட்டிகள் இப்படிப் பலப்பல.

1910இல் சிங்காரவேலு முதலியார் தொகுத்துப் பதிப்பித்த அபிதான சிந்தாமணியிலும்,1911இல் கதிரவேற்பிள்ளையவர்களால் தொகுத்து பதிப்பித்த தமிழ்மொழி அகராதியிலும் தமிழ் சமற்கிருத தொன்மைச் செய்திகளை, மனிதர்களை,இடங்களை, சொற்களை அகர வரிசையில் அதன் மூலநூல்களில் உள்ளபடி தருவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பகுத்தறிந்து பார்க்கலாம். இவற்றிலும் இம் மேகலா நகரங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இதில் இலங்காபுரி திரிகூட மலையுச்சியில் இருந்ததாகவும், 700 காதம் பரப்புடையதென்றும், விசுவகர்மாவினால் அமைக்கப்பட்டுப் பின் மாலியவந்தனாலும், பின் குபேரனாலும், தொடரந்து இராவணன் கைப்பற்றி ஆண்டதாகவும் கூறப்படுகிறது. இந்நாடு அவுச்திரேலியாவையும் அண்மித்ததாய் இருந்திருக்கலாம். இந்நாடு அநுமானால் ஒருமுறையும், வாநரரால் ஒருமுறையும் எரியூட்டப்பட்டதாம்.

தமிழ் இலக்கியங்கள் கூறுகின்ற தென்னிலங்கையும் கிரேக்க உரோமர் கூறும் தாமிரபரணியும் ஒன்றையே குறிப்பதாய் உள்ளது. இலங்கோச்சயினி மைவரையும் இந்தத்தென்னிலங்கைக் கூடாகவே சென்றிருக்க வேண்டும்(ஆய்வுக்குரியது).ஐந்திரத்தில் (பஞ்சாங்கத்தில்) வரும் ***இலங்கோச்சயினி, நிரட்சலங்கை*** என்ற சொற்கள் தாம் குமரித்தமிழரின் வானியல் குறித்த மிகச்சிறப்புப் பதிவுகளெனலாம். ஐந்திரத்தின் முதன்மைப் பகுதியில் இருப்பவை முற்றிலும் வானியல் செய்திகளே.இவற்றிற்கும் கணியத்திற்கும் நேரடித் தொடர்பு எதுவும் இல்லை. வானியலுக்குப் பொருந்தாதவற்றை நீக்கிவிட்டு ஆய்வுசெய்தல் மிக வேண்டியதாகும். தமிழரின் வானியல் கணிய அறிவே ஆரியச் சித்தாந்தங்கள் என்னும் வடநாட்டுக்கணியத்திற்கு வித்தும், வேரும், அடியும், மரமுமாகும்.இதை இருக்குவேதம் உறுதிசெய்யும்.

***வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியமும் சமுகமும்

## (இலக்கியக் கோட்பாடு)

இலக்கியம் காலத்தின் கண்ணாடி. இலக்கியம் தோன்றிய காலத்திலிருந்து அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணங்கள், ஏக்கங்கள்,பண்பாட்டு உணர்வுகள் அனைத்தையும் உள்ளடக்கி எழுதப்பெற்றதுதான் இலக்கியம். பிறநாட்டார் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே தனக்குரிய கலப்பற்ற இலக்கியப்போக்கினை கொண்டு விளங்கியது தமிழ்மொழி. தமிழிலக்கியம்பற்றிக் குறிப்பிட வந்த வீரமா முனிவரென்ற பொச்சக்கி அவர்கள் தமிழ் புலவர்கள் ஆற்றல் சான்ற மொழியினைக் கையாண்டனரென்றும் தமிழ்க் கவிதைகள் சிறந்த பாட்டுக்கள் இறையுணர்வுபற்றியும், இயற்கையருள்பற்றியும் காணப்படுகின்றன என்றும் கூறுவார். மக்கள் வாழ்க்கையில் சமுதாய நோக்கில் நின்று முகிழ்ப்பதே இலக்கியம். இன்றைய தமிழின வாழ்விற்கு ஏற்புடையதாய் நின்று மிளிரும் இலக்கியங்கள்தான் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்) திருக்குறள், இரட்டைக்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, ஔவை நூல்கள். இவை தொடாத துறைசார் இலக்கியங்கள் இன்று தோன்றிவிடவும் இல்லை, நாளை தோன்றிவிடப்போவதுமில்லை. ஏனெனில் அன்றைய இலக்கியங்கள் குறிப்பாக சமூகவியல், பண்பாட்டியல், ஒழுக்கவியல், பெண்ணியம், சாதியப்பகுப்பு, வாழ்வியல், அடிப்படை மனிதஉரிமைகள், மனிதநேயக்கோட்பாடுகள், வீரம், புகழ், போரறம், சமத்துவ,சமதர்ம (மாக்சிய) முற்போக்குச் சிந்தனைகள், பொருள்முதற்கோட்பாட்டுச் சிந்தனைகள், ஆண்மேலாண்மை போன்ற எந்தக் கருத்தியலையும் தொடாதவை அல்ல. தொட்டு விளக்காதவையுமல்ல.

தமிழிலக்கிய மேட்டுநில மலைத்தொடரின் கொடுமுடிகள் திருக்குறளும், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும் என்பதில் இரண்டாம் கருத்திற்கு இடமில்லை. அவர் வாழ்ந்தகால சூழமைவில் பெண்ணடிமை, பெண்இழிவு, அவர்களுக்கு துறவு, வீடுபேறு இல்லை, சாதிய ஏற்றத்தாழ்வு, கருத்துமுதற்கோட்பாடு போன்றவற்றை வலியுறுத்திய வைதீக வேதமரபு, மனுத்தீநெறி போன்றவற்றிற்கு எதிராக அவற்றை மறுத்துரைத்துப் புரட்சிசெய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த இலக்கியங்களே இவை. அத்தோடு அரசியல், வாழ்வியல், ஒழுக்கவியல், பண்பாட்டியல், மருத்துவவியல், சமூகவியல் போன்ற அனைத்தையும் உள்ளடக்கி அமைக்கப்பட்ட ஒரு சமத்துவ, சமதர்ம, முற்போக்கு, பொதுவுடமை(மாக்சிய)வாதிகளின் புரட்சி இலக்கியங்களே திருக்குறளும், சிலப்பதிகாரமும் (எனது "பெய்யெனப்பெய்யும் மழை" எனும் நூல் விளக்கும்) ஆகும். அத்தோடு சிலம்பு, உலக, இந்திய வனப்புக்களை எல்லாம் உள்ளடக்கி உலக மொழிகளிலே காணப்படாத பல்சுவையையும் (இயல், இசை, நாடகம், இசைக்கருவிகள், அழகியல்பொருள்) தனதாக்கிக்கொண்டு பெண்ணியத்தின் புகழை இமையத்தின் உச்சிக்கே கொண்டுசென்ற இலக்கியமாகும். இன்று இப்புரட்சிக்கருத்துக்களை மீட்டுருவாக்கம் செய்து சிற்றிலக்கியங்களாக உரைநடைகளாக புதினமாக சிறுகதைகளாக, புரட்சிக்கதைகளாக, நாட்டுப்புறவியல்களாக, திரைப்படமாக முற்போக்குச் சிந்தனைகளுடன் பலவகை இலக்கியங்களாக மக்கள் நடுவில் விரவிக்கிடக்கின்றன. சங்கஇலக்கியங்களாக தொல்காப்பியம், திருக்குறள்,சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் தமிழனின் ஒழுக்கவியலையும் பண்பாட்டையும், அவனுடைய சுதந்திர சிந்தனையையும் அறிவுக்கான(பகுத்தறிவுக்கான) விடுதலையையுமே பறைசாற்றி நிற்பவை. குறிப்பாக இவை தமிழர் இயங்கியல் சிந்தனை வழி அதாவது சாங்கிய, யோக, உலகாயதம் போன்ற பொருள்முதற் கோட்பாட்டு அடிப்படையில் யாத்தனர். இந்திய, இலங்கைச் சமூகத்தில் கருத்து முதல்கோட்பாட்டாளர்களான வைதீக வேதமரபாரால் ஏற்படுத்தப்பட்ட அறிவுக்கும், அறிவியலுக்குமான தடையே தீண்டாமை தோன்றியமைக்கான முதற்காரணம். உள்ளத்தில் கிளைத்தெழும் எண்ணங்களை, நினைவு அதிர்வுகளை, சிந்தனைக்கருத்து ஆற்றல்களை பிறருக்கு விளம்பப் பயன்படும் கருவியே மொழி. இம்மொழி மாந்தரின் முடிந்த கொள்கைகளையும் முதிர்ந்த குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு இயங்குவது இலக்கியமாகும். பகுத்தறிவே இலக்கியத்தின் அடிப்படை. கற்பனையே அதன்துணை. உண்மையே அதன் உள்ளீடு. ஐரோப்பியர் வருகைக்குப்பின் அறிவியல் தொழில்நுட்பப் புரட்சியின் விளைவால் கவிதை, புதினம், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு, கட்டுரை போன்ற புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்றிலக்கியங்கள்

தமிழ்மொழியின் இலக்கிய வரலாற்றில் பிற்காலத்தில் மொழியின் சிறப்பையும், சீரையும் சித்தரித்துக் காட்டுபவை தொல்காப்பியர் காலத்தில் வித்திடப்பெற்று கி.பி ஐந்தாம் நூ.ஆண்டில் அந்தாதியாக அரும்பி கி.பி 8ஆம் நூ.ஆ கோவையாக பூத்து கி.பி 9ஆம் நூ.ஆல் கலம்பகமாகக் காய்ந்து கி.பி 10ஆம் நூ.ஆல் சதகமாகவும் கி.பி 14ஆம் நூ.ஆல் தூதாகவும் கனிந்து அன்றிலிருந்து இன்றுவரை உலா, பிள்ளைத்தமிழ், பரணி, பள்ளு, குறவஞ்சி என எண்ணிலாக்கிளைகள் பரப்பி சிற்றிலக்கியப் பெருமரம் தமிழ் மொழிக்குத் தன்னிழல் கொடுத்து திகழ்வதைக்காணலாம். சிற்றிலக்கியங்கள் தோன்ற தொல்காப்பிய நூலின் பொருளதிகாரப் புறத்திணையியலில் கூறியுள்ள சில நூற்பாக்களே காரணம் என்பர் அறிஞர். இச்சிற்றிலக்கியங்கள்(பிரபந்தம்) 96 வகையென்பர்.

## உரைநடை

உரைநடையின் மறுமலர்ச்சி 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவானது. வேதநாயகரின் பிரதாபமுதலியார் சரிதம், சுகுணசுந்தரி என்னும் புதினங்களையும்(நாவல்களையும்) பெண்கல்வி,பெண்மானம், பெண்மதிமாலை போன்ற உரைநடைநூல்களையும் எழுதி வெளியிட்டார். உ.வே.சாமிநாதஐயர், சி.வை.தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், இராமலிங்கஅடிகள் போன்றோரும் இத்துறையில் குறிப்பிடத்தக்கவர்கள். உரைநடையின் பொற்காலமாகிய 20ஆம் நூ.ஆ.ல் மயிலை வெங்கடசாமி, வெங்கடசாமி நாட்டார், சங்கரதாசு அடிகள், இரா.பி.சேதுப்பிள்ளை, தனிநாயக அடிகள், க.கைலாசபதி, மு.வ போன்றோரின் எழுத்துக்கள் பல இலக்கம் வாசகர்களை உள்வாங்கியது. அவ்வை க.துரைசாமி புறநானூறு உள்ளிட்ட பல இலக்கியங்களுக்கு உரைகண்டு உரைவேந்தர் எனும் பெயர் பெற்றார். மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தனித்தமிழில் பல ஆய்வு நூல்களையும், சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுத்தும், மொழியியல், ஒப்பியல், வேர்ச்சொல் ஆராய்ச்சி போன்ற ஆய்வுகளின்மூலம் தமிழ் தான் உலக முதன் மொழி என்று ஆய்ந்து நிறுவினார். இந்த அடிப்படையிலேயே உலக முதல் மாந்தன் தமிழன் என்றும் செப்பினார். இவர் கூற்றுக்கள் இன்று உலகளாவிய அளவில் உலக அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளும் நிலையை மிக அண்மிக்கச்செய்துள்ளது. திருமுருக கிருபானந்தவாரியார் நூறுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட உரைநடை நூல்களை எழுதினார். புதுமைப்பித்தன், கல்கி, மு.வ, அகிலன் போன்றோரின் கதையாக்கங்கள் உரைநடைக்கு என்றும் பெருமைதேடித் தருவன.

## புதினம்.

புதினம்- நாவல், நெடுங்கதை, புனைகதை எனப்பல பெயர்களைக்கொண்டு உலகப் பட்டறிவை (அனுபவங்கள்) ஒட்டிச் செல்லும் இலக்கிய வகை. இயல்பான வாழ்க்கை நிகழ்ச்சிகள், பாத்திரங்கள், இன்னோரன்ன சில்லறையான பல்பொருட்கள் இடம்பெறும் நெடிய கதையென பலரின் வரையறைகளை க.கைலாசபதி அவர்கள் தமது தமிழ் நாவல் எனும் நூலில் குறித்துள்ளார். வேதநாயகரின் பிரதாப முதலியார் சரிதம் எனும் நாவலில் சமுதாயச் சீர்திருத்தம், நீதிப்போதனைகள் போன்றவற்றை மனதில்கொண்டே தமது முதல்ப் புதினத்தை எழுதியுள்ளார். பெண்கல்வி, பெண்தலைமை, சமுதாய மதிப்புக்களையும் காலச்சூழலுக்கேற்ப எடுத்துரைத்து மகிழ்ச்சியும், நகைச்சுவையும் ஊட்டுகிற முறையில் ஆக்கியுள்ளார். கமலாம்பாள் சரிதத்தை குடும்பவாழ்வில் ஏற்பட்ட உறவுச் சிக்கலை பின்னணியாக வைத்து இராசம் அவர்கள் படைத்துள்ளார். மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் மத, சாதிய, குல, குடும்ப வழிச்சிக்கல்களில் சிக்கி மனிதன் முன்பின் அசையவொட்டாமல்படும் தொல்லைகளைச் சாடுகின்றார். 20ஆம் நூ.ஆண்டின் முதல் 40 ஆண்டுகள் வெறும் கற்பனைக்கதைகளும், துப்பறியும் கதைகளும் பல்கிப்பெருகி புதினத்தை(நாவலை) இருண்ட காலத்துள் இட்டுச்சென்றது. இந்நிலையை மாற்றியது வெங்கடரமணியின் “தேசபக்தன் கந்தன்” எனும் விடுதலைப்போராட்ட நாவலாகும். தொடர்ந்து ஏழை மக்கள் வாழ்வில் சமத்துவம், உழைப்பிற்கேற்ற ஊதியம், சுதந்திரத்தின் பயன்,அடித்தட்டு மக்களின் வாழ்க்கைச் சித்தரிப்பு, காதலும் வீரமும்,மனிதவுறவுகளில் சிக்கல்கள் போன்ற கருத்துக்களை வலியுறுத்தும் பலபுதினங்கள் வெளிவந்தன. இவற்றால் உந்தப்பெற்ற இளந்தலைமுறை புதிய மதிப்புக்களை வரித்துக்கொள்கிறது. இதனை நனவோடை உத்திமூலமாக நீலபத்மநாபன் “தலைமுறைகள்” என்னும் நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ்நாவல்களில் நனவோடைக் கோட்பாடுகள் என்ற ஆய்வுநூலை பச்சையப்பன் என்பார் வெளியிட்டுள்ளார். இன்று உலகமயமாக்கல் என்னும் போர்வையில் அறிவு, அறிவியலாற்றல் படைத்தவர்களின் ஆளுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி சரக்குப் பொருளாக்கப்படுகின்றன விலைபோகின்றன என்பதை தனது தந்திர பூமி என்னும் நூலில் வெளிப்படுத்தி உள்ளார் இந்திரா பார்த்தசாரதி அவர்கள்.

## சிறுகதைகள்

புனைந்து எழுதப்படும் கதைகள் ஒரே மூச்சில் வாசிக்கக் கூடியவை. உருவம், உள்ளடக்கம், உத்தி முறைகள் தமக்கே உரிய தனித் தன்மைத்தன. குறிப்பிட்ட ஒரு விளைவைப் புலப்படுத்தும் ஒரு பாத்திரம், நிகழ்வு அல்லது உணர்ச்சி என்பவற்றைக் கொண்டு பின்னப்பட்டிருக்கும். இது கதையைப் படித்துக்கொண்டிருக்கின்றோம் என்னும் உணர்வை ஏற்படுத்தாமல் குறிப்பிட்ட நிகழ்வைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம், ஒருவரின் பட்டறிவில்(அநுபவத்தில்) நாமும் பங்குகொள்கின்றோம். இது புல்லின் நுனியிலுள்ள பனித்துளியில் கதிரவனின் பிம்பத்தைக் காண்பதைப்போலவும், ஊசி குத்துவதைப்போலவும், மின்னல் வெட்டுவதைப்போலவும் சிறுகதையின் நடுவகக் கருத்து தோன்றவேண்டுமென்பர். தமிழின் முதல் சிறுகதை வீரமாமுனிவரின் பரமார்த்தகுருவாகும். சிறுகதையின் முன்னோடிகள் மாதவய்யாஇ பாரதியார்இ வ.வே.சுப்பிரமணியம் போன்றோராவார். பாரதியார் வங்கக்கவிஞர் தாகூரின் சிறுகதைகளை தமிழில் மொழிபெயர்த்தார். நவதந்திரக் கதைகளை சுதேசமித்திரனிலும் பொட்டுக் கட்டி மகளிரை பொதுமகளிராக்கும் கொடுமையை பூலோகரம்பை என்னும் கதையிலும் வெளிப்படுத்தினார். கல்கி தமது சாரதையின் தந்திரங்களில் தீண்டாமை கைம்பெண் கொடுமைகள் பற்றி விரித்துரைத்தார். சிறுகதையின் தந்தையெனப் பெயர்பெற்ற புதுமைப்பித்தன், மௌனி, இராசகோபாலன் உயர்ந்த சிறுகதைப் படைப்பாளர்கள். மனித உறவு, மனித நேயம் போன்றவற்றில் முத்திரை பதித்தவர் யானகிராமனாவார். பெண்ணின் உளவியல் உணர்வுகளை வீட்டின் மூலையில் ஒரு சமையலறை என்னும் படைப்பில் மிகநுட்பமாகக் காட்டி தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார் அம்பை என்ற பெண் படைப்பாளி.

## புதுக்கவிதை

மாறிவரும் உலகின் அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தால் இலக்கியம் புதிய அளவுகளை வரையறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டியுள்ளதெனலாம். வடிவம் தழுவிய எண்ணற்ற ஆய்வுகளும் உள்ளீடுதழுவிய மெய்யியல்(தத்துவார்த்த) வளர்ச்சிகளும் தமிழ்க் கவிதை இலக்கியத்தை புதுமைப்படுத்தியுள்ளன. கருத்து வெளிப்பாட்டிற்கு எளியகருவியாக விளங்கும் சிறப்புடைமையால் இன்றைய மரபுக்கவிஞரும் புதுக்கவிதையையே போற்றுகின்றனர். உருவம் உள்ளடக்கம் உத்தி எனப் பல்கோணப்பார்வையிலும் புதுமைச் சாயலுடன் இணைந்து பிறக்கும் புதுக் கவிதைகளுக்கு தமிழ் இலக்கிய உலகில் நிலைபேறு உண்டாயிற்று. மனமென்னும் இருட்டறையில் தூங்கிக்கிடந்த கற்பனைகள் சிந்தனைகள் வீறுகொண்டு வானம்பாடிகளாய்ச் சிறகடித்து இன்றைய இலக்கிய வானில் பறக்கின்றன. மறுமலர்ச்சிக் கவிதை இயக்கத்தின் முன்னோடியாகவும் இன்றைய புதுக்கவிதை இயக்கத்தின் மூலமனிதராகவும் விளங்குபவர் மாகவி சுப்பிரமணியபாரதியாவார். அவரின் வசன அல்லது உரைநடை கவிதைகளின் தோற்றமே புதுக்கவிதையின் வித்தாம். புதுக்கவிதை வடிவ அமைப்பில் மாற்றம் பெறக்காரணமானவர் அமெரிக்கரான வால்ட் விட்மன் என்பார். இவரின் புல்லின் இதழ்கள் என்னும் கவிதைத் தொகுதி உலகப் புகழ் பெற்றதாகும்.தொடர்ந்து எசுரா பவுண்ட் என்பார் கட்டுப்பாடற்ற கவிதை இயக்கமொன்றை தொடங்கினார். இன்று எங்கும் புதுக்கவிதைதான்.புதுக்கவிதைக்கான இலக்கணம் வகுக்கப்படவில்லை என்றாலும் தொல்காப்பியர் கூறிய வனப்பு எட்டினுள் விருந்து என்பதும் ஒன்றாம்.

***"விருந்தே தானும்***
***புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"***

என்னும் நூற்பா இன்றைய புதுக்கவிதைகள் அனைத்தையும் வனப்பிற்குரிய இலக்கணத்தைச் சுட்டும் விருந்து என்னும் இலக்கியவகைக்குச் சான்றாகக் காட்டலாமென்பர்.

***"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது***
***சொற் புதிது சோதிமிக்க***
***நவகவிதை எந்நாளும் அழியாத***
***மாகவிதை"*** என்பது பாரதியின் இலக்கணம்.

இலக்கணங்கள் எதுவுமில்லாத கருத்துக்கள் தம்மைத்தாமே ஆளக் கற்றுக்கொண்ட மக்களாட்சி முறையே புதுக்கவிதை என்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.மேத்தா. உள்ளத்து உணர்வுகளை அப்பட்டமாகச் சொற்களில் வடித்துக் காட்டுவதையும் இலக்கணமரபுக்குக் கட்டுப்படாமல் இருப்பதையும் புதுக்கவிதைக்கான இலக்கணமாகவும் சுட்டலாம். மாறிவரும் சமுக மாற்றங்களுக்கேற்ப கவிதை காலத்திற்குக் காலம் தன்னைத் தோலுரித்துக் காட்டுகிறது. இன்று குறும்பா (கைக்கூ) மக்கள் நடுவில் மிகுந்த செல்வாக்குப்பெற்றுக் காணப்படுகின்றது.

*"சங்கக் கடைக்காரனுக்குக்*
*குழந்தை பிறந்தது*
*எடைகுறைவாக"*

இக்குறும்பாவில் முதலிருவரிகள் உரைநடையாகவும் மூன்றாம் வரி அத்தொடரை கவிதையாகவும் மாற்றியுள்ளது.

## நாட்டுப்புறவியல்

இது நாட்டுப்புற மக்களின் வாழ்வைப் படம் பிடித்துக்காட்டும் இயல். தொன்மங்கள்(புராணம்) மரபுக்கதைகள் பழமொழிகள் விடுகதைகள் நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் நாட்டுப்புறப்பாடல்கள் மாயமந்திர வித்தைகள் பில்லி சூனியம் கலைகள் கைத்தொழில்கள் ஆகியவற்றை ஆய்ந்தெழுதுவதை நாட்டுப்புற இலக்கியமெனலாம். நாட்டுப்புறப் பண்புகளாவன 1. வாய்வழியாகப்பரவுதல் 2.மரபுவழிப்படுதல் 3.பல்வேறு வடிவங்களால் திரிபுபடல் 4.ஆசிரியர் இல்லாமை 5. ஒருவித வாய்ப்பாட்டுள் அடங்குதல் என்பர் யோன் கெரால்டு பிரிசுவோர்ட் என்பார். அத்தோடு இவ்வியலானது மானிடவியல், குமுகவியல், உளவியல், மெய்யியல், வரலாறு, மொழியியலுடன் பின்னிப்பிணைந்துள்ளது. நாட்டுப்புறவியல் மேற்குறித்த எல்லா துறையினருக்குமான ஆய்வுகளமாயுள்ளது. நாட்டுப்புறப்பாடல்கள்: நாட்டுப்பாடல்: நாட்டார்பாடல், நாடோடிப்பாடல், வாய்மொழிப்பாடல், செவிவழிப் பாடல், பாமரர் பாடல், பரம்பரைப்பாடல், ஊர்ப் (கிராமிய) பாடல், கல்லாதார்பாடல், மக்கள்பாடல், ஏட்டில் எழுதாப்பாடல் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இவை எளியவை: இனியவை: எழுதப்படாதவை: நாவில் பிறந்து காற்றில் மிதந்து, செவிகளில் உலாவி, கருத்தில் இனிப்பவை. நாட்டுப்புறப்பாடல் இசைக்கும் அதிக சிறப்புண்டு. பண்ணுடன் பாடப்படாத பாடல்களெல்லாம் சிறகில்லா புள்(பறவை)ளினமாம். அத்தோடு இப் பாடல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாட்டுப்பாடல், குழந்தைப்பாடல், காதல்ப்பாடல், தொழில்பாடல், விழாப்பாடல், பக்திப்பாடல், ஒப்பாரிப்பாடலென வகைப்படுத்துவர். இவை நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் செய்திகள் முழுவதையும் ஓரளவிற்கு வெளிக்கொணர்பவை. குறிப்பாக ஒப்பாரிப் பாடல்கள் பெண்களின் அன்றாடச் சுரண்டல்களையும், கணவனை இழந்தவர் படும் துன்பதுயரங்களை வெளிக்கொணர்வதாய் உள்ளது. நமது நாட்டில் தாலித் சமூகமென்றொன்று இல்லையானாலும் , தமிழ்நாட்டில் தாலித் ஆய்வு மையம் ஏற்படுத்தப்பட்டு நாட்டுப்புற ஆடற்கலைகளான கரகாட்டம், இராசாஇராணிஆட்டம், குறவன்குறத்திஆட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம் எனும் பறையாட்டம், கழிலாட்டம் போன்ற இசையுடன் கலந்த நிகழ்வுகளை நடத்தி அடித்தட்டு மக்கள் கலைக்கு எழுச்சியூட்டி வருகின்றனர். அத்தோடு நாட்டுப்புறப்பாடல்களின் தாக்கம் அதன் இசையமைப்பும் திரைப்படங்களின் மிகுதியும் புகுந்துள்ளமையைக் காணலாம். இங்கு பாடல்கள் எளியமுறையில் அடித்தட்டு மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எழுதி பாடப்படுவதால் மக்களின் மனதில் எளிதில் பதிகின்றன. ஆனால் இன்றோ பாலுணர்வைத் தூ ண்டுவனவற்றையும், இரட்டைத்தொனிப்பொருளும், கொச்சையான அருவருப்பான மொழிநடையும் கொண்ட ஒழுக்ககேடானவற்றை கொலைவெறி, பழிவாங்கும் உணர்வுகளைத் தூண்டும் கீழ்த்தரமான திரைப்படங்களையும் சின்னத்திரைத் தொடர்களையும் சந்தைநோக்கோடு மக்கள் நடுவில் பரக்கவிடப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது.

## மொழித்தூய்மை

நமது மொழி உலகத்தின் முதல் மொழி. எந்தமொழியின் எழுத்து, சொற்களின் உதவியின்றி தனித்தியங்கவல்ல மொழி. இந்த மொழியின் வளங்களில் ஒன்றுதான் இலக்கியம். இவ்விலக்கியங்கள் வேற்றினமொழிக் கலப்பில்லாமல் எழுதப்பட, பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நூல் எனக் கருதப்படும் மலைபடுகடாம் என்றநூலில் ஒன்பது(9) என்ற எண்ணை தொண்டு எனும் சொல்லால் வழங்கப்பெற்றுள்ளது. தொல்காப்பியத்தின் 483 எழுத்ததிகார நூற்பாவினுள்ளும், 463 சொல்லதிகார நூ ற்பாவினுள்ளும் ஒரு பிறமொழிச் சொல்கூட இல்லை. பொருளதிகார மரபியலில் மட்டும் கரகம், காண்டிகை, ஞாபகம், சாதி, சூத்திரம் போன்ற சில வடசொற்கள் காணப்படுவதாகவும் இவை உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பாக்கள் இடைச்செருகல், கடைச்செருகல், உருத்திரித்தல், இடம்பெயர்தல் போன்ற கருத்துத் திணிப்புக்கு உட்பட்டவை என்பர். கலித்தொகை, பரிபாடல்களிலும் மொழித்தூய்மை பேணப்பட்டுள்ளது. திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணியிலும் கம்பரின் கம்பராமாயணத்திலும் மொழித்தூய்மை பேணப்பட்டுள்ளது. ஆனால் தாழ்வுணர்ச்சியும், அடிமைத்தனமும் உள்ளுணர்வாகக்கொண்டு இன்றைய எமது இலக்கிய ஆக்கங்களில் பிறமொழிச் சொற்களை, எழுத்துக்களை வலிந்து வகைதொகையின்றி புகுத்துகின்றோம். இப்படியொரு மொழிக்கொச்சைப்படுத்தலை வேறு எந்த இன மொழிக்காரனாவது செய்வானா?. கடந்த நூற்றாண்டில் மறைமலை அடிகள், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், பெருஞ்சித்திரனார் போன்றோர் தனித்தமிழ் இயக்கம் தொடக்கி கலப்பற்ற தமிழைப் பாதுகாக்க அரும்பாடுபட்டனர். மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. தமிழ்மொழியைச் சிதைக்க இன்றும் தமிழ்க் காழ்ப்புணர்வு கொண்ட பலர் குறிப்பாக காஞ்சி மடத்தவர்கள் முயன்றுகொண்டே இருக்கின்றனர். நாமும் மொழியுணர்வு அற்றவர்களாய் எமது பெயர்களை வடமொழி ஆங்கிலப் பெயர்களாகவும் பெயர்களுள் கிரந்த(ஸ,ஜ,ஹ,ஷ..) எழுத்துக்களை நுழைப்பதிலும் பெயரின் முதலெழுத்துக்களை ஆங்கிலத்தில் எழுதுவதிலும், தற்பொழுது பெயரின் முன் திரு. என்பதற்குப் பகரமாக சிறி(ஸ்ரீ) என்னும் கிரந்த எழுத்தையும் நுழைப்பதன் மூலம் சந்திர மண்டலத்தில் கால் வைத்துவிட்டது போலவம், நாசா விண்வெளி ஆய்வு நடுவத்தில் தொழில் வாய்ப்புப் பெற்றுவிட்டதைப் போலவும் தமிழன் தன்னை மறந்து அகமகிழ்ந்து வாழ்கின்றான். எனவே மொழிகாக்கப்பட வேண்டுமாயின் அந்தமொழியில் படைக்கப்படுகின்ற இலக்கியங்கள் யாவும் தனித் தமிழிலே ஆக்கப்படவேண்டும். இது அந்த மொழியின் வாழ்வியல் அடிப்படைகோட்பாடாக அமையவேண்டும்

## மொழிபெயர்ப்பு இலக்கியம்

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" என்ற பாரதியின் கூற்று இன்று ஓரளவுக்கேனும் மெய்பிக்கப்பட்டுள்ளது. உலகப்புகழ் பெற்ற கோமரது கிரேக்க காவியங்களான இலியட், ஒடிசி போன்றனவும், உமர்கயாம் பாரசிகமொழியில் எழுதிய ருபாயத் என்னும் குறுங்காவியமும், வங்கநாட்டு மாகவி தாகூர் எழுதிய கீதாஞ்சலியையும், கபீர்தாசரின் சிந்தனை வழிப்பட்ட நூல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிறந்த பலமொழி இலக்கியங்களையும், நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதால், தமிழிலக்கிய வளர்ச்சி மேலும் மெருகூட்டப்பெற்றது. நோபல் பரிசுபெற்ற உலகின் தலைசிறந்த புதினங்களும்(நாவல்கள்) தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அதேபோன்று திருக்குறள், நாலடியார், திருவாசகம்,சங்கத்தொகை நூல்களுமாக தமிழ் மூலத்திலிருந்து 700க்கு மேற்பட்டநூல்கள் 30 மேற்பட்ட உலகமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாக மொழிபெயர்ப்பு நூல்களின் தொகைநூல்களை உருவாக்கிய எசு.சிவகாமி குறிப்பிட்டுள்ளார். கணினியின் பயன்பாடு மொழிபெயர்ப்பு வளர்ச்சியின் வேகத்தையும் வீச்சையும் கூட்டுகின்றது. 20ம் ஆம் நூற்றாண்டில் இலக்கியத்தின் திறனாய்வுக் கோட்பாட்டை மேலை நாட்டார் கருத்துக்களை ஊன்றிக்கற்று மு.வ இலக்கியத்திறன், இலக்கிய மரபு, இலக்கிய ஆராய்ச்சி போன்ற நூல்களையும் க.கைலாசபதி இலக்கியமும் திறனாய்வும் எனும் நூலையும் புதிய நோக்கில் இலக்கிய ஆய்வுகளைச் செய்ய கவிதைநயம் எனும் நூலையும் ஆக்கினார். கவிதையியல் எனும் மணவாளனின் மொழிபெயர்ப்பு(அரிச்ரோட்டில்) நூலும் இதற்குப் புதுவளம் சேர்த்தது. இலக்கிய நடையினை மொழியியல் நூல்மூலம் அணுகும்முறையை விளக்கி நடையியல் எனும் நூலை நீதிவாணன் படைத்தார். அத்தோடு க.கைலாசபதியார் தமது ஒப்பியல் இலக்கிய நூலில் இனமொழி நாடுகளுக்கிடையிலான வேற்றுமைகளை மாற்றியமைக்கும் ஒப்பியல் இலக்கிய அணுகுமுறையை அமைத்தார். இந்நூலும் வை.சச்சிதானந்தனின் ஒப்பிலக்கியம் என்ற நூலும் ஆழமான பல துறைக்கோட்பாடுகளை சுட்டுகின்றன. கேசவனின் இலக்கிய விமர்சனம் க.கைலாசபதியின் சமூகவியலும் இலக்கியமும் என்ற நூலும் மார்க்சியப் பார்வை பொதுவுடைமை முறையில் இலக்கியத்தை ஆராய புதுப்பாதை காட்டிய படைப்புக்களாகும்.

## 20ம் ஆம் நூற்றாண்டின் ஈழஇலக்கியங்கள்

1980களில் வே.கனகசபாபதி என்பார் சாவித்திரி சரிதம் எனும் மரபுக்காவிய நூலை வெளியிட்டார். இது யாழ் இலக்கியவட்ட வெளியீடாகும். 20ம் ஆம் நூற்றாண்டின் மறக்கமுடியாத திரைப்பாடல்களும், பாடலாசிரியர்களும் எனும் நூல் திறனாய்வை சிலோன் வியேந்திரன் வெளியிட்டார். இது ஓர் சிறந்த படைப்பாகும். மேய்ப்பர்கள், கோபுரங்கள் சரிகின்றன, எரிமலை ஊற்றுக்கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற யாழ் தமிழ் சமூகத்தை விளங்கிக்கொள்ள சிறுகதைகளாக பிரான்சு அகத்தியர் என்பார் எழுதி வெளியிட்டார். 1980களில் பல ஈழவிடுதலை இயக்கங்கள்தோன்றி அவற்றின் வரவாறு கூறும் பலநூல்கள் வெளிவந்தன. குருதியில் பூக்கும் தமிழீழம் எனும் நூல் வட கிழக்குவாழ் தமிழ்மக்களின் இன்னல்களை வெளிப்படுத்துவதாய் உள்ளது. ஈழத்துப் பூராடனார் எனும் கவிஞர் பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். எல்லை தாண்டா அகதிகள் எனும் புதினம் 1983ல் மாத்தளையில் நடந்த இனவன்செயல்களைப் படம்பிடித்துக்காட்டும். 1980களிலிருந்து மாத்தளை சோமு என்பார் நமக்கென்றொரு பூமி, அவனொருவனல்ல போன்ற சிறுகதைகளையும், மற்றும் புதினங்களையும், நாளிதழ்களில் கட்டுரைகளையும் எழுதினார். அண்மையில்கூட வியக்கவைக்கும் தமிழரறிவியல் எனும் நூலையும் வெளியிட்டுள்ளார். முருகர் குணசிங்கம் என்பார் இலங்கையில் தமிழரென்னும் வரலாற்று நூலையும் ஆக்கிஅளித்துள்ளார். முல்லைத்தீவானின் ஈழம் எழுந்து வருகிறது எனும் புதினம் ஈழத்தமிழரின் நிலையை படம்பிடித்துக் காட்டுகிறது. 1980ன் பின்னைய ஆக்கங்கள் இனவன்செயல்களையும் அரசு, விடுதலை இயக்கங்கங்களுக்கிடையிலான போர்ச்சூழலையும், போரையும் இதனால் தமிழ் குமுகாயத்தின் உயிரிழப்பு, சொத்திழப்பு, அகதிவாழ்வு போன்ற இன்னோரன்ன இன்னல்களையும் கொடூரங்களையும் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளது. சி.கா. செந்திவேல் நா.இரவீந்திரன் என்பாரின் 1990களில் எழுதி வெளியிடப்பட்ட சாதிய ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிரான இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்கள் எனும் முற்போக்குச் சிந்தனையுடனும் பொதுவுடமை நோக்கோடும் எழுதப்பட்ட நூல் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு இலக்கியப் படைப்பில் படைப்பாளன் தனது கல்வி அறிவு, சமூக முரண்பாடுகளால் ஏற்படும் உணர்வு, பட்டறிவு என்பவற்றால் அறிந்து கொண்ட நுண்மைகளை இலக்கிய நிலைப்படுத்திக்கொள்வதற்கு இலக்கியப் பொருளும் அமைவுநெறியும் உதவுகின்றன. அத்தோடு அவன் சமூக முரண்பாடுகளை அணுகும் முறை இலக்கிய மயப்படுத்தும் முறை போன்றவற்றினால் இலக்கியக் கோட்பாட்டின் தன்மை தீர்மானிக்கப்படுகிறது. எழுத்தாளன் சமூகமுரண்பாட்டை தனது கல்வி நிலையில் நின்று தெளிவு பெறவேண்டும். அத்தோடு அம்முரண்பாடு உருவாக அல்லது துளிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதற்கான மூலத்தன்மை என்ன என்பதை விளங்கிக்கொள்வதும் முதன்மையானதாகும். இம் முரண்பாடு மனித வாழ்க்கையில் எப்படி உயிரோட்டமுள்ளதாக, உணர்ச்சி வெளிப்பாடாக முளைவிடுகிறது என்பதையும் தெளிந்து புரிந்துகொள்ள வேண்டும். இதன்மூலமே தன்னிலக்கியப் படைப்பை உணர்வுவாயிலானதாக்கும் திறன் பெறுவான். அவனுக்கு சமூக முரண்பாடு பற்றிய தெளிவும் அதனை நிலைப்படுத்துதல் பற்றிய தெளிவும் திறனும் தேவை. அப்பொழுதுதான் கோட்பாட்டினை எடுத்துணர்த்தும் ஆக்கங்கள் தோன்றமுடியும். எனவே இலக்கியக் கோட்பாடுகள் மனித நிலைபற்றிய புதுப்புதுக்கோண நிலைப்பட்டநோக்குகளாகவோ விளக்கங்களாகவோ அமையும். கோட்பாடு என்பதற்கு தமிழ் சொற்களஞ்சியம் தரும் பொருள் கொள்கை என்பதாகும். தமிழ் இலக்கியத்துறைக்கு ஏற்புடையதாய் காணப்படும் சொற்கள் எண்ணம்,கருத்துரை, நெறிமுறை போன்றனவாகும். படைப்பாளன் தனக்குள்ள அறிவுத்தெளிவு நிலைக்கேற்ப வாழ்க்கையை நோக்கு நெறி முறைகளில் சிறந்தது இதுதான் என்ற கோட்பாட்டை கருத்தியல், ஆக்கவியல்வாயிலாக எடுத்தியம்புகின்றான். இலக்கியத்தை, கலையைப் படைக்கும்போதோ அல்லது விமர்சிக்கும்போதோ அதனை ஒழுங்கு முறையாகவே செய்கின்றான். அந்த ஒழுங்குமுறை அக்கோட்பாட்டின் நெறிமுறை ஆகின்றது. இந்தப்படைப்பின் அமைவுநெறி கலை இலக்கியத்துறையின் கோட்பாடாகிவிடுகின்றது எனலாம். கோட்பாடென்பது நிகழ்ச்சிமுறைமை உண்டாகை எனவும் கூறப்படலாம். இலக்கியக் கோட்பாடென்பது அந்த இலக்கியத்தின் உருவிலும், பொருளிலும் ஏற்படும் அமைவு நெறி அல்லது அமைவுநெறிகளின் தொகுதி என ஒரு வரைவிலக்கணத்தை வகுக்கலாம்.

ஒரு படைப்பாளனின் கோட்பாடு அல்லது நெறிமுறையொன்றினை எண்ணித் துணிவதற்கும் ஓர் ஆய்வாளன் அக்கோட்பாட்டை உய்த்தறிந்து கொள்வதற்குமிடையில் வேறுபாடு காணப்படுகின்றது. ஆய்வாளன் இதை ஒப்பியல் இலக்கிய அடிப்படையில், ஆய்வுகள் அமைவுநெறிக் கோட்பாடுகள் மூலமாகவும் அல்லது ஒருகுறிப்பிட்ட கால இலக்கியங்களை, கலைகளை அவற்றின் உருவ பொருள் ஆக்கமுறைமைகளை ஆராய்ந்து விளக்குவதாகவும் கொள்ளப்படும். அரிச்டோட்டில் தமது கால இலக்கியங்களான கவிதை நாடகங்களை வகுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநெறிகளை கண்டதுபோல அல்லது தொல்காப்பியர் தமதுகால முற்கால இலக்கியங்களைப் பகுத்தறிந்து கொண்ட பொருள் இலக்கணத்தை அல்லது பரதமுனிவர் தமது காலத்திலும் அதன்முன்னரும் நிலவிய நாடக இசை மரபுகளை பகுத்தறிந்து ரச அடிப்படையினை படைத்தது போன்ற பலவற்றைச் சுட்டலாம். ஆக்க இலக்கியன் தன்முன் நிலவும் மரபுவழிச் சமுக நிலைப்பாட்டையும் நிகழ்கால நடைமுறைகளையும் தனது நோக்கிற்கு ஏற்புடையது அல்லவெனக் கண்டு புதியவொரு அமைவுநெறியில் ஆக்கத்தை செய்யும்பொழுது புதியதொருகோட்பாடு தோன்றுகின்றது. இந்த நெறிமுறையாளரெனக் குறிப்பிடத்தக்கவர்கள் எலியட், எமிலிலோறா என்போர். இதை ஓரளவு பாரதியார், தாகூர் நிறைவுசெய்தாராயினும் இவர்கள் தமது ஆக்கங்களின் அடிப்படைக் கொள்கைகளை அவற்றின் அமைவுநெறிகளை விளக்கினாரல்லர். படைப்பாளன் தனது கோட்பாட்டிற்கான காரணகாரியங்களை விளக்கும்போதுதான் அதன் நெறிமுறையையும் சமுகச் சிக்கல்களுக்குமிடையில் இருக்கும் தொடர்பு துல்லியமாகத் துலங்கும். இது இலக்கணக்காரருக்கு இலைமறை காயாகவும் காணப்படும். இலக்கியமென்பது அழகுணர்ச்சியுடன் தொடர்புடைய ஒரு கருத்துக்கோவையல்ல. ஆனால் கருத்தாழமற்ற கலையழகுள்ள ஒருபடைப்பு இலக்கியமாகக் கருதப்படலாம். கலையழகற்றது இலக்கியமாகாதென்பார் கா.சிவத்தம்பி அவர்கள்.

ஓர் எழுத்தாளனின் இலக்கியக் கோட்பாடு அவன் மனிதவாழ்க்கையை விளங்கிக்கொள்ளும் முறைமையையும் வாழ்க்கை விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அணுகு முறையையும் சுட்டிநிற்கும். இவ்விளக்கம் அரசியல் சமுக பொருளியல் அறிஞர்களின் விளக்கங்களுடன் இணைந்தும் அல்லது இணையாமலும் இருக்கும். சிலவேளைகளில் படைப்பாளன் இன்நெறிமுறைகளைக் கற்றறிந்தவனாகவும் இருக்கலாம் அல்லது தன்னையறியாமலே சமுக அமைப்புக்களின் உள்ளீடுகள் தொடர்புகள் அரசியல் பொருளாதார நோக்குகளையும் தனது ஆக்கங்களில் நிலைநிறுத்தி விடுகின்றான். இலக்கிய ஆக்கமென்பது மனிதவாழ்க்கைபற்றிய விளம்பல்களே(விமர்சனம்). இலக்கியக் கோட்பாடென்பதும் மனிதனின் உலக இயக்க முறைமைபற்றிய தெளிவைப் பெறுவதேயாகும். இது கருத்துநிலைப்பட்ட வெளிப்பாடு(பிரகடனம்) மட்டுமல்ல சமுகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரில் தங்கியிருப்பவர்களின் இன்னல்களை(அவலங்களை) சமுகப்பின்னியில் வைத்து நோக்காது அவர்களின் இடர்பாடுகளைச் சித்தரிப்பதேயாகும். இத்தகைய இலக்கியங்களைப் படைத்துப் புகழ்பெற்றவர்கள் ப்ரௌசற்,யோய்சு,கபகா என்பார். சித்தரித்தலே படைப்பாளியின் துறையென்றும் செய்தி அல்லவென்றும் இயனெசுகோ என்னும் நாடக அறிஞர் கூறுவார். இலக்கியக் கோட்பாடு இலக்கியத்தின் நோக்குநெறியும் அமைவுநெறியும் சமுகஇயல்பாடுகளை இன்னல்களை முரண்பாடுகளை வாசகன் புரிந்துகொள்வாற்கான சட்டகத்தை ஆக்கி அளிப்பதே. இலக்கிய நெறிமுறை(கோட்பாடு) இலக்கிய வளர்ச்சிக்கும் வாசகர் நுகர்ச்சிக்கும் உந்து ஆற்றலாய் உள்ளது.

1981இன் யாழ் நூல்நிலைய எரிப்பு இலங்கைத் தமிழர் இலக்கிய வெளிப்பாட்டில் ஒரு பிரிகோடாக அமைந்தது. இக்காலகட்டத்தில் நுமானின் புத்தரின் படுகொலை சேரனின் ஒரு சரிதை என்ற படைப்புகள் வெளிவந்தன. ச.சிவலிங்கத்தின் எமது பாடுகளின் நினைவாக என்னும் கவிதை பாதுகாப்புப் படையினர் ஏற்படுத்திய இடர்களை உணர்வுததும்ப வெளிப்படுத்தியது. 1988இல் வெளிவந்த ரஞ்சனகுமாரின் மோகவாசல் சிறுகதைத்தொகுதியில் உள்ள கபறக்கொய்யா கோசலை என்னும் சிறுகதைகள் குறிப்பிடத்தக்கவை. மட்டக்களப்பில் ஏற்பட்ட வாழ்வுச் சீரழிப்பினை சிறந்தமுறையில் திருக்கோவில் கவியுகன் எடுத்துக்கூறியுள்ளார். முற்போக்குப் படைப்பாளர்களான தெணியான், ராச்சிறிகாந்தன், சாந்தன் போன்றோரும் இதுசார்ந்து சில ஆக்கங்களைப் படைத்துள்ளனர். 1987-1988களில் புலம்பெயர் இலக்கியமென்ற நிகழ்வு முதன்மை பெறுகிறது. புலம்பெயர் இலக்கியத்தின் ஆற்றல் மிகுந்த எழுத்தாளர்களாக அரவிந்தன், பாரத்திபன், சுரேசு, வியேந்திரன் சுப்பிரமணியம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். தாமரைச்செல்வி செங்கையாழியான் போன்றோர் தமிழர்களின் வாழ்வியல் நெருக்கடிகளை தமது சிறுகதைகளில் புதினங்களில் பதிவுசெய்துள்ளனர். அண்மைக் காலங்களில் பெண்களின் பங்களிப்பு கணிக்கப்படத்தக்க அளவுக்கு வளர்ந்துள்ளது. இதில் பெண்போராளி பாரதி குறிப்பிடத்தக்கவர்.1997இல் சரிநிகர் இதழில் கலா என்பார் எழுதிய கோணேசுவரிகள் என்ற கவிதையும் குறிப்பிடத்தக்கது. கிழக்கிலங்கையில் தமிழர் இசுலாமியர் போராட்டம் மிகப்பெரியதாக்கத்தினை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பட்டறிவை மட்டக்களப்பிற்குரிய மொழிமரபு நுண்மையுடன் வெளிக்கொணர்ந்தவர் கவிஞர் சோலைக்கிளி. இதை தமிழ் கவிதை வளர்ச்சியில் ஒரு புதியபாச்சலென்பார் கா.சிவத்தம்பியவர்கள் 1995இன் வன்னிப் பெருநிலப் பரப்பிற்கான இடப்பெயர்வு சொல்லொணா துன்பத்தையும் பாதிப்பையும் தமிழர் நடுவில் ஏற்படுத்தியது. இதை தாமரைச்செல்வியின் அழுவதற்கு நேரமில்லை என்னும் சிறுகதை வெளிப்படுத்தும். இக்காலகட்டத்தில் பதிப்புத்துறை ஒருவித மந்தநிலையில் இருந்ததால் இவ்விடைவெளியை நிரப்ப சண்முகலிங்கம் சிதம்பரநாதனின் அரங்கப்பணியும் திருமறைக்கலா மன்றத்தின் அரங்கப்பணியும் அளப்பரியதாய்க் காணப்பட்டது.

தமிழ்மொழி பண்டுதொட்டு பலமதக் கோட்பாடுகளையும் வெளியிடுவதற்கான நெகிழ்வுப் பண்பைக் கொண்டிருக்கிறது. தனது தனித்துவத்திற்கு ஊறு இல்லாமல் மற்றைய பண்பாடுகளுடன் இணைந்து கொள்கின்றது. ஆனால் இசுலாமியப் பண்பாடோ நாடு,இன,மொழி கடந்து மதநம்பிக்கையில் ஒரு உலகப் பொதுப்பண்பாட்டை உருவாக்கியுள்ளது. இலக்கியத்தின் கருத்து நிலை அடிப்படைகள் இதன் முதன்மைக் கருத்துநிலை எடுகோள் எவையென்பதும் படைப்பாளன் கூறிக்கொள்ளும் கருத்துநிலை அவனது ஆக்கங்களில் எந்த அளவுக்குச் செறிவுள்ளதாய் உள்ளதென்பதும் நோக்கப்படவேண்டும். அடுத்து நோக்கப்படவேண்டியது படைப்புக்களின் சூழமைவு. ஏனெனில் தம்மைப் படைப்பாளிகளென்றும் விமர்சகர்களென்றும் கூறுபவர்களிடம் தவறான சில கருத்துக்கள் காணப்படுகின்றன. 1) இலக்கியம் சமுகத்தை நகல்செய்வதாகவும் 2)அரசியலிலும் சமுகத்திலும் காணப்படுபவை இலக்கியத்திலும் காணப்படும் என்பதுமாகும்.1965-1980களில் காணப்பட்ட இன ஒற்றுமையிலான இலங்கைத் தேசியவாதம் 1990களில் சிங்கள இடதுசாரிகளிடையே சிங்கள முதன்மைவாதத் தேசியவாதம் ஆனது. இதனால் தீவிரவாத இளைஞர்களிடையே பிரிவினைவாதமாக இது வடிவெடுத்து. அரசபேரினவாத வெடிப்பால் அரசியற் பண்பாட்டின் ஆழமின்மையையும் வெறுமையையும் உணரக்கூடியதாயிருந்தது. தீவிரவாத இளைஞர்களிடையே தமது இயக்க வளர்ச்சியில் இலக்கியத்தின் பயன்பாடு உணரப்படடது. தமிழர்களின் வாழ்வியலை மாற்றியுள்ள இப்போக்கு பண்பாட்டுத் தளங்களில் சமுகவியலை மாற்றிவிடாத சமுகப்பேணுகை முன்னெடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமென்பது வரலாற்றின் மகவு என்பது எவ்வளவுக் கெவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையானது இலக்கியமும் வரலாற்றை உருவாக்குவது என்பதாகும்.

நம்நாட்டுத் தமிழிலக்கிய வளர்ச்சியை செழுமையை உயர்ச்சியை பெறவேண்டுமெனில் பல்தேய இலக்கிய வளர்ச்சியையும் இணைத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக நமது இலக்கியத்தின் தனித்துவத்தை வற்புறுத்தும் அதேவேளை எமது தொப்பூழ்க்கொடி உறவுகளான தமிழகத் தமிழர்களின் தமிழிலக்கியத் தேரறிவு இலக்கிய செழுமைக்கும் வளர்ச்சிக்கும் உதவியுள்ள நெறிமுறைகளை (கோட்பாடுகள்)ப் பற்றிய அறிவும் பட்டறிவுமின்றி நம்மிலக்கியத்தை வளர்த்துவிட முடியாது. அதேநேரத்தில் இலக்கியத்தின் உயர்ச்சி மதிப்புக்களை பயன்படுத்திக்கொண்டு இதை மனித இடர்பாடுகளை(சாதியம், பெண்ணியம், பொதுவுடைமை ,ஒழுக்கவியல்,பண்பாட்டியல் போனறன)க் களைய இலக்கியத்தைப் பயன்படுத்தாமல் அதை ஒரு பொழுதுபோக்குக் கருவியாக்கி தப்புகைக்கான பொருளாகப் பயன்படுத்துவதை கண்டுகொள்ள முடியும்.இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு பட்டிமன்றங்களாகும். இலக்கியத்தை சமுக மீட்சிக்காகப் பயன்படுத்தும் நிலை ஒருபக்கம் நடைபெற மறுபுறத்தில் இலக்கியத்தை உடல் உழைவுபோக்கும் ஔடதமாகப் பயன்படுத்தும் செயற்பாடாய் உள்ளது. முற்போக்கு இலக்கியத்தில் மிக முதன்மை பெற்ற பண்பு படைப்பும் விமரிசனமுமாகும். இதன்காரணமாய் இலக்கியத்தில் பழைமைவாதம் தோற்கடிக்கப்பட்டது. மரபுப்போராட்ட வெற்றி நவீன இலக்கியத்தை நிலைநிறுத்தியது. அத்தோடு நயப்பு வாய்ப்பாட்டை நாவல் சிறுகதை காலட்சேப விதப்புரையும்தான். இந்த விமரிசன இறக்கத்தை மாற்ற கிருச்ணராசாவின் விமரிசன மெய்யியல் என்னும் நூல் வெளியிடப்பெற்றது. வித்தியானந்தனவர்கள் காலத்தில் கூத்து மீட்டெடுப்பும் நவீனவாக்கமும் இடம்பெற்றது. இலக்கியத்தின் மூலம் சமுகமதிப்புக்களை, இன்னல்கள் முரண்பாடுகளையும் தீர்த்துக்கொள்ளும் முனைப்பு இறக்கமடைந்தபோது கலைகளான நாடகம் ஓவியம் போன்றவற்றாலும் இதை நிறைவுசெய்ய முடியுமென்பதை தாசியசு,சுந்தரலிங்கம் போன்றோர் நிறுவிக்காட்டினர். மௌனகுரு இவர்கள் அரங்குலகின் சிறந்த எடுத்துக்காட்டாய்த் துலங்குகின்றார்.

கலை இலக்கியத்துறையின் எதிர் நிலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கவேண்டியுள்ளது. 1965இல் இருந்து இன்றுவரை தாய்மொழிக்கல்வியே அதாவது தமிழ்மொழிக்கல்வியே காணப்படுகின்றது. ஆனாலும் சமுக அறிவியல் பூத(பௌதீக) அறிவியற் துறைகளில் தமிழே பாடநெறியாகவுமுள்ளது. இருந்தும் தமிழைச் சிந்தனைக் கருவூலங்களின் தொடர்ச்சி மொழியாக்குவதில் மிகப்பெரிய குறைபாடு காணப்படுகிறது. இது தகைசார் கல்விச் சான்றோரின் முயற்ச்சியின்மையே காரணமாகும். இருப்பினும் இக்குறைபாட்டைப் போக்க முயன்று வருபவர் சபா. ஜெயராசா அவர்களே. தமிழ்தேசிய இலக்கியம் என்பதற்கு முதன்மையான இரண்டு வரையறைகள் காணப்படுகிறது. ஒன்று இங்குள்ள சமுகத்தின் வாழ்வியல் வழிமுறைகளை (பிரச்சனைகள்) காண்பதாயும் முகம்கொடுப்பதாயும் அமையவெண்டும் என்பதாகும். மற்றையது நாட்டு மக்களிடையே தேசிய நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் அமையவேண்டும் என்பதாகும். ஆனால் 80களின் பின் இன்றுவரை இது அரச அணுகு முறையில் நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது. இதனால் இதற்கெதிரான மரபு வாதமும் இடதுசாரிகளுக்கு எதிரான எதிர்ப்பு வாதமும் முனைப்புற்றது. முற்போக்குவாத தொழிற்பாடும் இடத்திற்கிடம் வேறுபடுகிறது. ஈழத்து இலக்கிய முற்போக்கு இயக்கம் தமிழிலக்கியத்தின் சமுகமயப்பாட்டிற்கும் சனநாயகமயப்பாட்டிற்கும் பெரும்பணியாற்றியது. ஆனாலும் இன்று சமதர்ம முதலாளித்தவ அரசுச் சமநிலைபோய் உலகம் ஏகதுருப்பட்டு தொழில் நுட்பமயமாக்கல், உலகமயமாக்கல் ஆகியவற்றை உள்வாங்கி புதிய வரையறைகளுடன் தொழிற்படுகின்றது. இங்கு சுரண்டல் வடிவம் முற்றிலும் மாறிப் புதுவடிவம் எடுத்துள்ளது. இன்று தமிழிலக்கிய வளர்ச்சி மந்தநிலையை அடைந்திருந்தாலும் இலங்கைவாழ் தமிழர்கள் முகங்கொடுத்த துன்ப துயர உயிரிழப்பு சொத்தழிப்பு இடப் பெயர்வு நிகழ்வுகளை பல்லாயிரம் புதுக்கவிதைகள் வெளிப்படுத்திக்கொண்டு இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் தமிழும் தமிழனின் இரு கண்கள்

**க**டந்த பல திங்களாகத் தொடர்ச்சியாக செய்தித் தாள்களில் இந்து மத அழிவு பற்றியும் , அதை மேம்படுத்த உலகளாவிய இந்து அமைப்பொன்று வேண்டுமென்றும் பலரும் தம் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஆனால் சிலர் தமிழர்கள் இந்துக்களல்ல, சைவர்களே என்னும் தலைப்பிலும் தமது மனத் துன்பத்தையும் அதற்கான மீட்சியையும் விரித்து விளக்கினர். பல தமிழ்ச் சைவர்களின் மனக் கிளர்ச்சியினை வெளியிட்ட இச் செயலானது மகிழ்வும் பாராட்டுக்குரியதானதாகவும், காலத்தின் தேவை அறிந்து வெளிப்படுத்தப்பட்ட செயலாகவும் கருத வேண்டும். உண்மையில் 90 விழுக்காட்டினரான தமிழர்களும் இந்துத்துவ முதலாளிய மேலாண்மையை சைவமென்று கருதி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதைக் கற்றாரும் மற்றாரும் ஏற்று சாதிய மேலாண்மையை உயர்த்திப் பிடித்து அது உடைந்து விடக்கூடாது என்னும் உள்மனநோக்கோடு இந்துத்துவம் என்னும் போர்வையால் தம்மை போர்த்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இன்று எத்தனை தமிழ்ச் சைவர் வீடுகளில் சிவனுடைய நிழற்படத்தை வைத்து வணங்குகின்றனர்!! விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே தங்கள் வணக்க அறையிலே வைத்திருக்கின்றனர். தமிழர்களின் முழு முதற் கடவுளென்றும், படைத்தல், காத்தல், அழித்தலிற்குரியவனென்றும், பல்லாயிரமாண்டுகளுக்கு முற்பட்ட முதல் தமிழ்ச்சங்கத் தலைவனென்றும், உலக நாகரீகத்தின் முன்னோடிகளான நாகர்களின் தலைமகனென்றும் அதாவது ஆற்றுக்கரை (தலைமுடியில் ஆறு) வாழ்வினனாகவும் வேட்டையாடுதலைத் தொழிலாகவும் (புலித்தோல் உடை, உடுக்கு ), சூலம் படைக்கலனாகவும், பாம்பை இனக்குறியாகவும் (கழுத்தில் நாகம்), சந்திர மரபைச் சேர்ந்தவனாகவும் (தலைமுடியில் பிறை), நிறத்தில் மொழியில் தன்னை தமிழனாக அடையாளப்படுத்துகின்ற சிவனை வீட்டிலிருந்து ஒதுக்கி விட்டு வீட்டு வாசலில் குரங்கை (அநுமானை) வைத்து வணங்குகின்றனர். இந்து என்னும் கோட்பாடு பல புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளரையும், தமிழர் ஒழுக்கவியலை மாசுபடுத்தும் ஒருவன்/ஒருத்திக்கு, ஒருத்தி/ஒருவனுக்கு என்ற நிலைபோய் கடவுளருக்கே இரண்டு மனைவியரிலிருந்து பல மனைவியரையும் உருவாக்கி தமிழ்ச் சைவர்களை அதில் புரள வைத்துள்ளது.

சமயம் அல்லது மதம் என்பது மாந்தக் குமுகாயத்தை நல்வழிப்படுத்தவே உருவாக்கப்பட்டது. தொல்பழம் காலத்தில் அரக்க, அசூரத்தனங்களை அழிக்கும் கடவுளாயிருந்து பின் தன்னடியவர்களின் எதிரிகளை அழிப்பவராகி, இன்று ஒருவன் செய்யும் கொடூரங்களை, இழிசெயல்களை பொருத்தருள்(மன்னிப்)பவராக மாற்றமடைந்து அதாவது திரிவாக்கம் பெற்றவராக கடவுளர் உள்ளனர். ஆனால் கடவுளர் இவ்வளவு கீழிறங்கி வந்தும் மாந்தக் குமுகாயம் திருந்தியதா? இந்த மதங்கள் கூறுகின்ற கொல்லாமை, வாய்மை போன்ற பல மாந்தனை வாழ்வாங்கு வாழவைக்கும் கொள்கைகளால் மனமாற்றம் ஏற்பட்டதா? இல்லையே. மதங்களை தனிமனித, சமூக முரண் நடவடிக்கைகளை மறைக்கும் கேடயமாகவல்லவா பயன்படுத்துகின்றனர். இன்றும் தமிழன் பகுத்தறிவைப் பயன்படுத்தாத மூட நம்பிக்கைகளில் மூழ்கி கற்கால மாந்தனாகவே வாழ இம் மதங்கள் வழிகாட்டுகின்றன. சாக்கிரட்டீசு, கௌதம புத்தர், இயேசுக்கிறீத்து, திருவள்ளுவர், இளங்கோவடிகள், விவேகானந்த அடிகள் இவர்களெல்லாம் மனித நேயத்திற்காக, பகுத்தறிவாளர்களாக, சீர்திருத்தவாதிகளாக, கிளர்ச்சியாளராக மக்கள் நடுவில் அன்பைப் போதித்து மாந்த அடிமைத்தனத்தை, மத மேலாண்மைகளை ஒடுக்கப்பிறந்தவர்கள். ஆனால் மத மூடர்கள் அவர்களை வாழ விடவில்லை. அவர்களையும் கரவாக மதவாதிகளாக்கி தம் வல்மேலாண்மையை வலுப்படுத்தி மக்களை முட்டாள்கள் ஆக்கி அதில் அவர்கள் குளிர்காய்கின்றனர்.

அன்றைய நாவலந்தேயமாகிய பாரதம் இன்றைய இந்தியாவை, பாகிச்த்தானை, வங்கதேசத்தை உள்ளடக்கியதாக இருந்தது. இன்று பாகிச்த்தானின் ஒரு பைந்திரமாகவுள்ள சிந்து மாநிலம் கி.மு 6ம் நூற்றாண்டில் பாரசிகப் பேரரசில் 23ஆம் மாநிலமாக ஆக்கப்பட்டிருந்தது. பாரசீக மொழியில் சகரம் ககரமாகத் திரியுமென்பதால் சிந்து, கிந்து ஆனது. பின் இது திரிந்து இந்துவென்றும் இந்தியாவென்றும் ஆனது. இந்த சிந்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவெளியை கிரேக்கர்கள் தம் குறிப்புக்களில் இந்தியா என்றனர். அராபியர்கள் இங்கு வாழ்ந்த மக்களை இந்துக்களென்றனர். இன்றைய இந்தியாவின் வடமாநிலங்களில் வாழ்ந்த சிலர் தம்மை இந்து மதத்தவரென்றும், இந்தி மொழி பேசுவோரென்றும் வரையறை செய்து அவர்களின் கரவான செயற்பாட்டால் இந்தியா முழுமையும் இந்து மதத்தவரும் (சமணம், பௌத்தம் வீர சைவர், சைவர் போன்ற பல சமயத்தார் இன்றுமுள்ளனர்). இந்தி மொழி பேசுவோரும் (3000 வேற்று மொழிகளுக்கு மேல் பேசுவோரும் உள்ளனர்) தான் உள்ளனரென்னும் நிலையையும் இன்று உருவாக்கி விட்டுள்ளனர்.

பண்டைக்கால சிந்து வெளித் தமிழருடன் நடு, மேற்கு ஆசியர்கள், அராபியர், மங்கோலியர், கிரேக்கர் (அசோகனின் தாய் கிரேக்கப் பெண்ணாயிருக்கலாம் என்கின்றனர் சில வரலாற்றாசிரியர்கள்) போன்றோர் கலப்பால் ஏற்பட்ட பண்பாட்டை, சமற்கிருத மொழியை கண்ட செருமனியரான மாக்சு முல்லர் ஐரோப்பிய மொழியுடன் சில ஒற்றுமை இருப்பதைக் கண்டு ஆரிய இனக் கொள்கையை உருவாக்கினர். இவரது இந்த ஆரிய இனக்கொள்கை உருவாக்கமே செருமனியரை, கிட்லரை உலகின் தனி உயர் இனமாகவும் உலகம் முழுவதும் செருமனியருக்குரியதென்னும் கருத்துருவாக்கத்தால் உலகப்போர் தொடங்கி பல இலக்கம் மக்கள் உயிர்களைக் காவுகொள்ள வைத்ததாகும். இந் நிலைப்பாட்டை வைதீக ஆரியம் சார்ந்த பிராமணர் (கி.மு 1000) தாம் தேவர்களென்றும், தாம் பேசுகின்ற மொழி தேவ மொழியென்றும் முன்னொரு காலத்தில் இவ்வுலகு தமக்குச் சொந்தமானதாகவும், தாம் அன்று மற்றவர்களுக்கு வழங்கியவையே தமக்கு இப்பொழுது கிடைப்பதாகவும் கொள்கை கொண்டு இன்று வரை வாழ்கின்றனர். இதுவே முல்லரையும் ஆட்கொண்டிருக்க வேண்டும். அதுவே 2ஆம் உலகப் போருக்கு வித்திட்டதெனலாம். ஆனால் ஆரிய வைதீக வேத மரபு இன்றும் தமிழ் மொழியை, தமிழினத்தை அழிக்கக் கரவாக கடந்த 3500 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. எம்வரைவைத்தே 75% வெற்றியும் பெற்று விட்டது. ஆனால் மாக்சு முல்லர் தமது கடைசி நாட்களில் தனது "ஆரிய இனக் கொள்கை" தவறானது என்பதை உணர்ந்து "இன்றுவரை அகழ்வாய்வுக்களம் ஒன்று கூட இனங்காணப்படாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் நுழைந்து விட்ட ஒரு சொல் ஆரியம் என்றும், தான் " ஆரியம்"என்று குறிப்பிட்டது ஒருமொழிக் குடும்பத்தையேயன்றி ஒரு இனத்தையல்ல." என்று கூறிப் பின்வாங்குகின்றார். இன்று இந்த மொழிக்கூறு கூட அடிப்படை அற்றதாகிவிட்டது.

சைவமும் தமிழும் தமிழரின் இரு கண்களென வாழ்ந்தவர் பலர். குறிப்பாக திருநாவுக்கரசர், தமிழ்ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோர் கி.பி 7 ஆம் 8 ஆம் நூற்றாண்டளவில் பௌத்த, சமண சமயங்களின் சைவத்திற்கெதிரான போட்டியும், சமற்கிருத(தேவநாகரி), வடமொழிக்கலப்பால் தமிழ்மொழி உருமாறி மணிப்பிரவாள (மணிப்பவள) நடையெடுத்த நேரத்தில் பற்று (பக்தி) நெறி அடிப்படையில் தமிழையும் சைவத்தையும் காத்தனர். அதே போல் பெரியார் ஆறுமுகநாவலர் அவர்களும் தமிழையும், சைவத்தையும் காக்க, வளர்க்க ஐரோப்பிய மத, மொழி ஊடுருவலின் போது தன்னாலான சகலத்தையும் செய்தார் (விரிக்கின் நீளும்). இலங்கை இந்திய மொழிகளிலே முதன் முதலில் பதிப்புக்கு (அச்சு) ஏறிய மொழி தமிழே. இதை ஏற்றியவர் ஆறுமுகநாவலரே.

*குணம்நாடி குற்றமும்நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்ககொளல்.    (கு.504)*

என்னும் அடிப்படையில் ஒவ்வொருவரும் நோக்கப்பட வேண்டும். அந்த வகையில் அவரின் செயற்பாடுகள் தமிழுக்கும் சைவத்திற்கும் அளப்பரியதே. கி.மு இல் குறிப்பிடும் படியாக மதத்திற்கு முன்னுரிமை கொடுத்ததாக எந்த நூலும் விளம்பவில்லை. ஆனால் கி.பி இல் அதன் தேவைப்பாடு உணரப்பட்டதால் மாந்தக் குமுகாயத்தை நல்வழிப்படுத்த மதங்கள், கடவுளர் ஆக்கப்பட்ட சிலர் காட்சி கொடுக்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் 14 சமயக் கணக்கர் இருந்ததாக மணிமேகலையென்னும் நூல் செப்பும். குறிப்பாக சாங்கியம், யோகம், உலகாயதம், ஆசீவகம், மீமாம்சம், சமணம், பௌத்தம், சைவம், வைணவம், வைதீகம் போன்ற பலவற்றைக் கூறலாம். இவர்கள் பல சமயவாதங்களை அளவையியல் அடிப்படையிலே புரிந்து கொண்டே இருந்தனர். பொதுவாக எல்லா மதக் கொள்கை வகுப்பாளர்களாக தமிழர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டனர். இலங்கையின் "மகாவம்ச" நூலை மகாநாமதேரர் எழுதப் பெருந்துணையாய் நின்றவர்கள் காஞ்சிபுர பௌத்த மடத்தைச் சேர்ந்த தமிழ் பௌத்தத் துறவியரே. ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டு வருகின்றது. சாதியம், வறுமை, கல்வி, பொருளாதாரத்துறை போன்றவற்றில் வலுக்குன்றியோர் மாற்றுவழி காணப்படாமையால் மிகக் குறைந்த தொகையினர் மதம் மாறினர், மாறிக் கொண்டிருக்கின்றனர். அதில் கொள்கைப்பிடிப்பு ஏற்பட்டவுடன் அம் மதத்தையே பற்றிக் கொள்கின்றனர். இந்தப் பல மதக் கோட்பாடு கூட தமிழரை சாதியக் கூறு போல ஒரு கூறு போடும் செயலேயாகும்.

தமிழர்களின் முதல்நூலாய் இலக்கண, இலக்கியமாயிருப்பது தொல்காப்பியம் அடுத்து வருபவை சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றன. இந்நூல்களில் மத,கடவுளர்க் கோட்பாடுகள் எள்ளளவும் இல்லை. இவற்றிற்குப் பிற்பட்ட காலத்தில் மத கடவுளர் கோட்பாடுகளினால் பல கொடூரங்கள் அரங்கேறின. இருந்தும் இடை, கடை நிலை மக்களுக்கு அவர்களின் மன துன்பங்களிலிருந்து மன அமைதி பெற மதம், கடவுளர் கோட்பாடு பெருந்துணையாய் உள்ளது. இதைச் சாக்காக வைத்தே கோவில்கள்( இந்தியாவில் பத்மநாபசுவாமி, திருப்பதி, புட்டபதி போன்ற பலவும், நம் நாட்டுப் பெரும் கோவில்களும்) கோடிகோடியாய்ப் பணம் புரட்டுகின்றன. ஆனால் இவற்றின் சமுகநலச் செயற்பாடு சுழியமேயாகும். எனவே சில அன்பர்கள் குறிப்பிட்டது போல் உலக சமத்துவ சமக்கொடை (தர்ம) குமுகாயமொன்று உருவாக்கப்பட்டு வலுவற்ற, வறுமையில் வாழும் அடித்தட்டு மக்களைப் பேணும் வகையில் இப் பெருமுதல்கள் பயன்படுத்தப்பட வேண்டும். மக்கள் குழப்பமடையாத தெளிந்த வகையில் மதக்கோட்பாடுகள் வகுக்கப்படவேண்டும். பகவத் கீதை ஒன்றும் திருமூலரின் திருமந்திரம் இன்னொன்றும் கூறுவது போலில்லாமல் உலகளாவிய ஒரு நிறுவனத்தை அமைக்கின்ற போது இவையெல்லாம் தெளிவு படுத்தப்பட வேண்டும்.

தமிழர்கள் எல்லோருமே மதக்கண் (சைவமும் அல்ல இந்து) பற்றிச் சிந்திக்கின்றனரேயன்றி இன அடையாளத்தை, முகவரியைத் தருகின்ற தமிழ்மொழிக்குரிய கண்ணைப் பற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதோ, சிந்திப்பதோ இல்லை. இன்றும் கூடத் தமிழ்மொழியைச் சிதைப்பதற்குப் பலர் முனைந்து நிற்கின்றனர். தமிழினமும் கூடத் தமது நாளாந்தச் செயற்பாடுகளில் தமிழைச் சிதைத்துக் கொண்டே இருக்கின்றனர். பிறந்த பிள்ளைக்குப் பெயர் தனித்தமிழில் வைப்பதில்லை. அப்படி வைத்தாலும் வட எழுத்துக்களை, கிரந்த எழுத்துக்களை பெயரின் இனிமையெனக் கருதி உள்நுழைத்து விடப்படுகிறது. அல்லது பெயர்களை வடமொழிப் பெயர்களாக, ஐரோப்பிய மொழிப் பெயர்களாக வைத்துப் பெருமைப்படுகின்றனர். அத்தோடு விட்டுவிடப்படுகிறதா? இல்லையே. படித்துப் பட்டம் பெற்ற பல்துறைசார் கல்வியாளர்கள், அறிஞர்கள் தமது பெயரை எழுதும் போது அவரது தந்தையின் பெயரை, பாட்டனின் பெயரை தமது பெயரின் முதலெழுத்துக்களாக ஆங்கிலத்தில் எழுதுகின்றனர். தமது ஒப்பங்களையும் ஆங்கிலத்திலிட்டு மகிழ்கின்றனர். வேறெந்த மொழிக்காரராவது ஆங்கில, கிரந்த, வட (சமற்கிருத) எழுத்துக்களை உள் நுழைத்துப் பெயர் வைப்பானா? எழுதுவானா? அல்லது ஒப்பந்தான் வைப்பானா? நடக்காது. தமிழர்கள் எப்பொழுதுமே தமது செயற்பாடுகளினூடாக தமது தாழ்வுணர்ச்சியையும், அடிமைத்தனத்தையும், வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றனர். தமிழைத் தமது வாழ்வியலுக்கான முதலீடாகக் கொண்டு வாழும் பெரும் பதவிகளில் இருப்பவர்கள் கூட முச்சங்கங்களை பொய்யென்கின்றனர். அதை எழுதியவர்களைப் பொய்யரென்கின்றனர். இந்நூல்களைக் காலத்தால் பின்தள்ள சான்றற்ற கருத்துக்களை முன்வைக்கின்றனர். பட்டம் பதவியுயர்வுகளைப் பெறுவதற்காக தமிழர் வாழ்வு இலங்கையில் கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதென்றும் கூடத் துணிந்து ஆய்வு செய்கின்றனர். அண்மையில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இராவண, மூவேந்தரின் சின்னங்களான யாழ், வில், புலி, மீன் பதித்த கொடியுடன் செயற்பட்டு வந்த ஒரு தமிழ்ச் சங்கம், ஒரு குத்துக்கரணம் அடித்து இதில் சில சின்னங்களை நீக்கி புதிய தெம்புடன் செயற்படவுள்ளதாம். இவர்கள் தான் தமிழ் வளர்க்கும் தமிழர்கள் (விரிக்கின் நீளும்). சிலர் இக் கூற்றுக்களை குறுகிய நோக்கினதென்றும் கூறலாம். ஆனால் உலகம் சிறுத்துச் சிற்றூராகிக் கொண்டிருக்கும் போது அதை அதன் வழியில் விடாமல் அமெரிக்கன், சீனன், இந்தியன் போன்றோர் தமது மேலாண்மையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்த விளையும் போது தமிழன் தன்மொழி பற்றிப் பேசுவது தவறாகுமா? ஏன் ஒரு கண்ணுக்கு வெண்ணெய்யும் மறுகண்ணுக்கு சுண்ணாம்பும் பூசலாமா?

இன்று உலக மொழிக்கெல்லாம் தாயெனும் நிலைக்குத் தமிழ்மொழியும், குவாலியா எனும் ஆபிரிக்க மொழியும் மேலெழுந்து நிற்கின்றன. சிலர் போற்றுகின்ற ஆரிய மொழியும், வடமொழியும் ஆட்டம் கண்டுவிட்டன. இந்தச் சமற்கிருதம் கூட குமரிநாட்டை கடல் கொண்டபோது தப்பி வந்த உயர் நிலைக் குமரித்தமிழர் தமது அறிவியல், தொழில்நுட்பம், வானியல், அணுவியல் சார்ந்த மெய்யியல்களைப் புதையலாகக் களஞ்சியப்படுத்த உருவாக்கிய குழூஉக்குறி(செயற்கை) மொழியே இச் சமற்கிருதம் என்பதை காலப்போக்கில் அறிந்து கொள்ள முடியும் (விரிக்கின் நீளும்). கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொண்ட கதைதான் தமிழர் வரலாறாகும். தமிழர் மரபில் தமக்குத் தெரிந்த பல அறிவியல், மருத்துவத் தொழில் நுட்பங்களையே தாம் பெற்ற பிள்ளைகளுக்கே மறைத்ததினால்த் தான் தாழ்ந்து போனதற்கான இன்னொரு காரணமுமாம்.

மேற்குறித்த மொழிக்காப்பு, மதக்காப்பு, பண்பாட்டுக் காப்பு, ஒழுக்கவியற் காப்பிற்குச் செயல்வடிவம் கொடுத்து, பகுத்தறிவுடன் கூடிய மறுமலர்ச்சியை முன்னிறுத்தத் தாமாக முன்வந்து ஒவ்வொரு தமிழனும் செயற்பட்டால் மொழியை, மதத்தை, பண்பாட்டை, ஒழுக்கவியலைக் காத்து வெற்றி பெறலாம்.

***வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயும் தொறுந் தொறும்
அறியாமையைத் தான் துலக்கி
தேடலினைத் தான் தூண்டி
இன்பந்தரும் இன்பத்தமிழ்
எம் செந்தமிழ் செம்மொழியாம்

- நா.வை.குமரி

## ஆசிரியரின் வெளிவந்த நூல்கள்

பெய்யெனப் பெய்யும் மழை
ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி
அகனின் விழிப்புக் கதைகள்
மதுரை எரிகிறது
தமிழியச் சான்றோர் பகுதி 01

## வெளிவர இருக்கும் நூல்கள்

மொழித்தூய்மை
தமிழ்க்கழகங்கள்
தமிழியச் சான்றோர் பகுதி 02,03
திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்



வாணி கணினிப் பதிப்பகம் - வவுனியா. தொ.பே : 024 2223658.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org